சமுதாய நிழல்.

A
643



ஆசிரியர்
சொ. சிதம்பரம்.

5B-05
87
195
195

ஒளவை நிலையம்,
274, மாதாக்கோவில் வீதி, காரைக்கால்.

நூலைக் குறித்து

முதல் பதிப்பு.
செப்டம்பர்
1951.

தோழர் சொ. சிதம்பரத்தை தமிழ் நாடறியும். கவிஞர்; சிறந்த எழுத்தாளர். புதிய சமுதாய அமைப்பிற்கு தமிழ் நிலத்தைப் பண்படுத்தும் உழவர். அவரது இதய நரம்பசைவின் இன்ப ஒலி இந் நூலில் கேட்கிறது.

★

உரிமை
ஆசிரியருக்கு.

பணத்திற்குப் பல்லைக்காட்டி பேனாவை நாட்டும் "மேதைகள்" பலர். இவர்களின் நடிப்பில் புதுமைக் கொக்கரிப்பு, அதே சமயத்தில் எழுத்தில் வக்கரிப்பு! அடாதுடிக்காரனை அறங்காக்கும் வள்ளல் என்று ஆகாயத்தில் தூக்கிக்காட்டும் அவலபுத்தி! இவர்களுக்குத்தான், எழுத்துக்கு மன்னர் மன்னவன் என்ற பல விளம்பரங்கள்!

★

இரண்டு ரூபாய்.

இச் சூழ்நிலையில், உண்மையை - எண்ணத்தின் எழுச்சிக் கனலை தைரியமாய் எழுத்து மூலையில் வீசுகிறார், தோழர் சிதம்பரம்,

தமிழ்முலகம் வாரி அணைக்கும் என்ற துணிவில், முதல் நூலாக இதை வெளியிடுகின்றோம்.

நிலையத்தார்.

இந்த நாடகம் பற்றி

புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன்

"முதலாளித்துவ அமைப்பு எந்தப் பக்கத்தில் இருந்தாலும், அங்கு விபசாரம் இருந்துதான் தீரும்" என்கிறார், தோழர் சொ. சிதம்பரம். சரியான பேச்சு!

புதியக் கண்கொண்டு ஆராய்கிறார், விபசாரத்தை. இன்றைய நிலையில், மக்களிடம் பரவவேண்டிய—உள்ளத்தில் நிலைநிற்க வேண்டிய கருத்துக்களை அமைத்துக்காட்டியிருக்கிறார், தோழர் சிதம்பரம் இக் கதையில்; பாராட்டுகிறேன்.

பெண்ணினத்தில் ஓர் பகுதியைப் பிடித்தாட்டும் நோய் விபசாரம். இந்திரா, விலைமகளின் பரம்பரை. அவள், அதை வெறுத்துக் குடும்ப விளக்காகிறாள். அவள் திருந்தியதில் வியப்பில்லை. "புதுமைப் பெண்" என்ற புது நூலின் கருத்தை அவள் உணர்கிறாள்.

புரட்சிக் கருத்துக்கள் மிளிரும் இந் நாடகத்தில் குறிப்பிடத்தகும் உண்மை ஒன்று. பணக்காரன் கைப்பதுமை அரசாங்கம். அவன் எதையும் செய்கிறான்; அவனுக்கு எதையும் மறுப்பதில்லை, அந்த அறங்கருதாத ஆட்சி. இதை நன்றாய் எடுத்துக்காட்டி இருக்கிறார் தோழர் சிதம்பரம்.

பேச்சுக்களை நன்றாக அமைத்திருக்கிறார், கவிதை சுவை ஒழுகுமாறு. அவர் ஓர் இடத்தில் கூறுகிறார்: "அவர்

என்னை ஏற்காவிடில் மரணங்கூடவா ஏற்காது என்னை?''
இது காதலி காதலனைப்பற்றிக் கூறியது.

காட்சிகள் தோறும் வியப்பு. நடைமுறை அனைத்தும் சுவையுடையன. அரங்குசெய்யத்தக்க நாடகம். இது மக்களுக்குப் பயன் ஊட்டவல்லது என்று எண்ணுகிறேன்.

தோழர் சொ. சிதம்பரத்திற்குத் தமிழ் நாட்டினர் சார்பில் நன்றி கூறுகிறேன்.

பாரதிதாசன்.

★



சமுதாய நிழல்.

திரை 1.

கோரஸ்

இடம்: **புதுமனைப்புகுவிழா.** நேரம்: **மாலை.**

(புதிதாகக் கட்டிய மாளிகை. அதன் அழகிய நிலாமுற்றத்தில் இந்திராவின் பாட்டுக்கச்சேரி நடைபெறுகிறது. வீட்டுக்கார சீத்தாராமய்யா, வருபவர்களை வரவேற்றுச் சந்தனம், வெற்றிலை பாக்கு வழங்குவதைச் சரிபார்க்கிறார். இந்திரா பாடுகிறாள்.)

பாட்டுகள்.

(பாட்டு நிகழும் சமயம் தனவான் செளரிராஜன் அவர் சகபாடிகளுடன் மோட்டாரில் ஆடம்பரமாக வருகிறார்)

சீத்தா: வரவேண்டும். வரவேண்டும். உட்காருங்கள்.

(சந்தனம் தாம்பூலம் வழங்குகிறார்)

செளரி: கச்சேரி ஆரம்பித்து நேரமாகிவிட்டதோ?

சீத்தா: கடைசி நேரத்தில் வந்திருக்கிறீர்கள்; மங்களம் பாடும் சமயம்.

(செளரிராஜன் ஒரு பாட்டுப் பாடும்படி கேட்கிறார். இந்திரா சம்மதித்துப் பாடுகிறாள்)

பாட்டு

(உடனே மங்களம்பாடித் தன்குழுவுடன் சபைக்கு வணக்கம் செய்து போகுதல். இந்திராவைப் புகழ்ந்துகொண்டு மற்றவர்களும் போகிறார்கள். வடிவேலும், சொக்கும்)

வடிவேலு: மானுக்கு கண் ஒரு வாய்ப்பு! அதுபோல இம் மாளிகைக்கு முகப்புத் தோற்றம் தனி ஒரு அமைப்பு! நன்றாக இருக்கிறது.

சோக்கு: திட்டப்படிக் கட்டிடம் அமைந்திருக்கிறது. முதலியார்! இன்றைக்குக் கச்சேரி செய்தவள் கச்சிதமாகப் பாடினாள்.

வடிவேலு: உயர்வான பாட்டு. புதிய பேர்வழி, அதனால் அதிக கூச்சப்படுகிறாள்.

சௌரி: முதலியார்! இங்கு கைதேர்ந்த சிற்பிகள் இருப்பதை மெய்ப்பிக்கிறது, உங்கள் வீட்டின் தோற்றம். (சுற்றிப் பார்த்து) கச்சேரி செய்தவளும் மெச்சுதற்குரியவள்தான். மகிழ்ச்சி, நாங்கள் வருகிறோம்.

சீத்தா: வணக்கம். போய்வாருங்கள்.

(மூவரும் தனியாக வந்து)

சௌரி: சோக்கு! கச்சேரி செய்தவள் பெயரென்ன?

சோக்கு: இந்திரா, என்று சொல்லுகிறார்கள்.

சௌரி: எந்தத் தெருவிலிருக்கிறாள்?

வடிவேலு: விசாரித்துவிட்டால் போகிறது.

சௌரி: தேவடியாள்தானே? அவள் வீட்டைத் தெரிந்து இருவரும் ஓட்டமாய் வந்து சேரவேண்டும். போங்கள்.

(இருவரும் போய்விடுகிறார்கள். சௌரி தனியாக)

சௌரி: இந்திரா! பெயரில் ஒரு உயிர்ப்பு! வீணை நரம்பின் துடிப்பு அவள் குரல்! நரைத்தவன் மனதையும் கரைத்துவிடும் எழில்! தத்துவப் பால் சுரக்கும் சித்தனையும் தைத்திழுக்கும் புன்னகை! மூற்றும் துறக்கக் கற்றவனையும் சிற்றின்ப சேவைக்கழைக்கும் பார்வை! கூலப்பித்தன் நிலையைக் குலுக்கும் தளிர்மேனி! இந்திரா! (யோ

சுனை) ஏன் வீண் மயக்கம்? தேவடியாள் தானே? நம்மிடம் பணத்தின் மணம் கமழ்கிறது; அவளிடம் இளமையின் வளமை கொழிக்கிறது! பணத்தை எறிந்தால் மனத்தை எறிகிறாள்; பழச்சோலையை பாடும் குயில் நாடுவதுபோல்! (யோசித்து) ஆம்.

திரை 2.

இடம்: **பூஞ்சோலை.** நேரம்: **மாலை.**

(இந்திரா சோலையின் வனப்பைக்கண்டு ஆனந்தப் பதைல். சுற்றிப்பார்த்து)

இந்திரா: எனக்கு ஒரு கவியின் உள்ளமிருந்தால், அப்படியே காவியமாக்கியிருப்பேன் இக்காட்சியை; கட்டழகியின் வனப்பைக் கொட்டி அளக்கும் வாலிபனைப்போல! மனோரம்மியமான இயற்கை அசைவு. வரண்டுபோன இதயத்தில், செழுமை புரண்டோடும் பசுமை. பூவினங்கள் நகைக்கின்றன, மாதுளம்பிஞ்சுடைத்து உதிர்ப்பதைப் போல. மந்தமாருதம்!

பாட்டு

மாமா! மாமா!! (மாமாவை அழைக்க வருகிறார்) எங்கே சென்றீர்கள் என்னைவிட்டு?

மாமா: எங்குமில்லை. இந்த நந்தவனக்காட்சி என் சிந்தையை மயக்கிவிட்டது. அதுவுமல்லாமல், இங்கே இருந்த பூஞ்செடி சட்டியை அங்கே வைத்து, இங்கே ஒரு பாதை போகும்; அதைத் திருத்தி அங்கே போகிறமாதிரி அமைத்து, பெரும் புதுமை கண்டுவிட்டார்கள் இப் பூஞ்சோலையில். அதனால் பாதை மறந்து, போதையில் வருபவன்போல் தட்டுக்கெட்டு வந்து சேர்ந்

தேன். அதோ இருக்கிறதே ஒரு செடி முழுக் கிக்கொண்டு, அதன் பெயர் என் வாயில் நுழை வதே இல்லை. அதற்குக்கூட (யோசித்து) சொல் லுகிறேன், தொண்டையிலிருக்கிறது.

இந்திரா: அடடே! அதுதான் மாமா "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" என்பது.

மாமா: இந்த இழவு, நுழைகிறதா என் வாயில்.

இந்திரா: பார்த்தீர்களா, இச் சோலைவார்க்கும் அழகை?

மாமா: புளூஜாக்கர் வைரத்தைக்கொட்டி மெர்க்குறி லோட்டைத் தட்டிவிட்டதுபோலிருக்கிறது, இங் குள்ள மலர்களின் இளநகை.

(இந்திராவும் மாமாவும் சுற்றிப் பார்க்கிறார்கள். அச்சமயம், அங்கே அழகிற்காகப் புதைக்கப்பட் டிருந்த கண்ணாடி ஓடுகளில் ஒன்று இந்திராவின் காலில் ஏறிவிடுகிறது. அலறி கீழே உட்காரு கிறாள்)

மாமா: இந்திரா! என்ன அது?

இந்திரா: கண்ணாடி ஓடு காலில் ஏறி, புண்ணாக்கிவிட்டது மாமா!

மாமா: சுண்ணாம்பு கொண்டு வரட்டுமா?

இந்திரா: மண்ணாய்ப்போச்சு! விளையாடும் நேரமாயிது? அப்பா! கடுக்கிறது!! மெதுவாக எடுத்து விடுங்கள்.

(மாமா எடுக்கும்பொழுது)

இந்திரா: வலி தாங்கமுடியவில்லை; இலகுவாக உங்களுக்கு எடுக்கத் தெரியவில்லை. இருங்கள், நான் எடுக் கிறேன்.

(அவள் எடுக்கிறாள்)

இந்திரா: ஆ! வலி பொறுக்கமுடியவில்லை மாமா!

(இந்தச்சமயம் தனவான் சௌரிராஜன் வழக்க மாய் அங்கு வருபவனுனதால், சுற்றிப் பார்த்து வரும்பொழுது)

சௌரி: எங்கே, இன்றையதினம் சொக்கு, வடிவேலு? வழக்கமாக வருபவர்களின் புழக்கத்தையே காணவில்லையே, ஏன்?

(கைக் கடிகாரத்தைப் பார்த்து)

சௌரி: ரேடியோ வைக்கும் நேரந்தான்.

(இந்திரா எழுந்திருக்க முடியாமல்)

இந்திரா: அய்யோ! வலிக்கிறதே. என்ன மாமா இளிக் கிறீர்கள்? எப்படி வீடு போவது? ஒரு சத்த வண்டியாவது வைத்து வாருங்கள்.

(இக் குரலைக் கேட்ட சௌரி அங்கு போய்)

சௌரி: என்ன காலில்? ஐயா! உங்களைத்தான். காலில் என்ன அந்தப் பெண்ணிற்கு?

மாமா: கண்ணாடி ஓடு குத்திவிட்டது. எடுக்க வரவில்லை. குழந்தை தொந்தரவுப்படுகிறாள்.

சௌரி: தொந்தரவாகத்தானே இருக்கும், வந்த இடத்தில் காயப்பட்டால்.

(கண்ணாடி ஓட்டை சௌரி எடுத்துவிட்டுத் தன் கைக்குட்டையைக் காலில் கட்டி)

சௌரி: எழுந்திருங்கள். மெதுவாக எழுந்திருங்கள்.

(இந்திரா எழுந்துவிடுகிறாள். ஆனால் நொண்டு கிறாள்)

சௌரி: காலை ஊன்ற முடியாவிட்டால், ஒரு கோலையா வது ஊன்றி நடந்து பாருங்கள். பயப்படாதீர் கள்.

மாமா: ஆமாம் அம்மா! அய்யா சொல்வது மெய்தான். உடனே செய்.

(நடக்கிறாள்; இருப்பினும் வலியுடன். சமயம் அறியாதவன் சௌரி. அவளுடன் பேச ஆசைப்படுகிறான்.)

சௌரி: நீங்கள்தானே, புதுமணப்புகும் விழாவன்று இதங்கொஞ்சப் பாடியது? நெஞ்சை அள்ளிவிட்டது, அன்று உங்கள் பாட்டு. நான்கூட, தனியாக ஒரு பாட்டுப் பாடும்படி உங்களைக் கேட்டேன். நினைவிருக்கிறதா?

(மாமா குறுக்கிட்டு)

மாமா: ஆமாம்!

சௌரி: சனியன்மாதிரி குறுக்கிடுகிறீர், நான் வனிதையிடம் கேட்கிறேன்.

மாமா: ஓகோ! குழந்தையிடம் கேட்கிறீர்களா? கேளுங்கள்.

இந்திரா: வீண் பேச்செல்லாம் ஆண்களிடம் இருக்கட்டும். ஆடவர் இருக்கும்பொழுது, ஜாடையில் பெண்களிடம் பேசினால் நாடு நகைக்கும்; அது நாகரீகத்திற்கும் அப்பாற்பட்டது.

மாமா: சரிதானே அது! சிறு பெண்ணல்லவா? வெட்கம் குறுக்கிடுகிறது. என்னிடம் கேளுங்கள்.

(தனவான் மாமாவைத் தனியாக அழைத்து)

சௌரி: சித்தாராமையா வீட்டில் பார்த்தப் பெண் இவள்தானே?

மாமா: முன்பே சொல்லவில்லையா, இந்த இன்பவல்லிதானென்று.

சௌரி: முக்கிய செய்தி. அவளிடம் பக்குவமாகச் சொல்லவேண்டுமிதை. நீங்கள் யார்?

மாமா: அந்த மடவன்னத்திற்கு நடனப்பயிற்சி அளிப்பவன், நான்.

சௌரி: தரகரென்றுத் தவறாக நினைத்துவிட்டேன்.

மாமா: கெட்டது குடித்தனம். அதுவுந்தான் சமயத்தில்!

சௌரி: நட்டுவர்; தரகர்! தொழில் இரண்டோ? எள்ளுச் செடி எண்ணெயாய்த் தள்ளியமாதிரிதான்!

மாமா: வீணாக வளத்தவேண்டாம்; விஷயத்தைச் சொல்லுங்கள்.

சௌரி: பள்ளியறை லீலைக்குப் பெண்களைத் துள்ளவிடச் செய்யும் தரகர் நீர்! உம்மிடம் கள்ளமெதற்கு? நான் விரும்புவது கரும்பின் சாற்றை; கன்னல் மொழியை; பெண்ணின் ஓவியத்தை! இந்தக் காரியம் முடியாததல்ல, நீர் கூறினால்.

மாமா: நன்றாய் ஓடுகிறீர், மணிக்கு 60 காதவேகம்.

சௌரி: நட்டுவரே! இது முடிந்தால், பணமூட்டைகள் ஏற்றிய வண்டியின் சாரதி நீர். ஒன்பது மணிகளும் வைத்துப் புதைத்தப் பொன்னிலான சிலை அவள். என்ன யோசிக்கிறீர்?

மாமா: யோசிக்கவேண்டிய இடந்தான்! இம்... மருண்ட விழிகளுக்குக் கருமையிடுவதும், சுருண்ட கூந்தலுக்கு நறுமலர்சூடுவதும், பெண்களின் தன்மை. ஆனால், மானத்தை விற்று மேனியில் மெருகேற்றுவாளா என்பது அவளைக் கேட்கவேண்டிய விஷயம்.

சௌரி: பொன், பொருள், பூமி இவைகளைக் கவர்வதற்கென்று சுவர்வைத்துக் கட்டிய நாடகத்தில் நடிக்கும் ஆடரங்கின் நடிகைதானே அவள்?

மாமா: ஏமாற்று வித்தைக்கு அபிநயம் பிடிக்கும், உம்போன்ற எத்தர்களிடம் பாடம் கற்கவேண்டியவள், அவள்.

சௌரி: மரியாதையாய்ப் பேசு!

மாமா: கூசுகிறது, பேசவே உம்மிடம்.

சௌரி: தாசிகளை, ஆடவர் பஞ்சனைக்கு ராசிப்படுத்த பரத நாட்டியமாடும் உன் தோசிப் புத்தியைக் காட்டுகிறாய், என்னிடம்.

(இச்சமயத்தில் கைகலக்குமோ எனப்பயந்து, இந்திரா குறுக்கிட்டு)

இந்திரா: என்ன மாமா கூக்குரல்?

மாமா: வெற்றுக் கூக்குரல்தான்!

இந்திரா: கவனித்துக்கொண்டுதானிருந்தேன், அவர் பவனி வருவதை. நீங்கள் அவரிடம் பேச வேண்டாம்.

(மாமாவை இப்புறம் இழுத்துவிட்டு, தனவானிடம்)

இந்திரா: ஐயா! என்ன கேட்கிறீர்கள்?

சௌரி: இடங்கேட்கிறேன், குடியிருக்க உன் இருதயத்தில்.

இந்திரா: தாளிடப்பட்டிருக்கிறது, அதன் கதவு.

சௌரி: அதிகப்பணம்! ஏன்? வைர ஆபரணங்களின் சுமைதாங்கியாக்கினால் உன்னை; திறந்துவிடு வாயா?

இந்திரா: உடமை அத்தனையும் கடமையென அள்ளிக் கொடுத்தாலும் இடமில்லை. அடிமையெனப் பூட்டும் விலங்குதானே, பெண்களுக்கு ஆண்கள் மட்டும் ஆபரணங்கள்?

சௌரி: பணங்கொடுப்பவர்கள் மனங்குளிர அனுபவிக்க ஏற்பட்ட அலங்காரக் கருவிதானே நீ?

இந்திரா: பிறவியிலல்ல! என் குலவழக்கமாக இருக்கலாம்.

சௌரி: அப்படியானால், கற்பை நிலைநிறுத்த வந்தப் பொற்கொடியோ நீ?

இந்திரா: விபசாரத்திற்கே உதித்த அபச்சாரிதான். உம் மட்டில் பிரியமில்லை. ஏன் நகராமே?

சௌரி: காசுபறிக்கும் வேசிக்கும் எவ்வளவு நாசுக்கான பேச்சு? காசு கொடுப்பவனின் காமக் கூடு நீ! பொருளுக்கு மானத்தைப் பரிமாறும் பரம்பரை! ஆடவர் உள்ளத்தைக் கவர்ந்து, ஊடலில் இன்பத்தைச் சுரந்துவிடும் தொழிற்கூடத்திலிருந்து வெளியாக்கப்பட்ட வாகனம் நீ! கற்பரசிபோல் சொற்றொடர் வீசுகிறாய் என்னிடம்.

இந்திரா: உளறுகிறீர்; ஏழைகளின் ரத்தத்தில், ஏமாந்தவர்களின் பணமேட்டில், எக்காளம்கொட்டக் கற்பிக்கும் பல்லிலக் கழக மாணவர்கள் நீங்கள்! உணவுக்கு வாயைப்பிளந்து மூடிப் பசி தணித்துக் கொள்ளும் திமிங்கிலங்கள்!

சௌரி: ஏன் கோபிக்கிறாய்? உன் ஜாதித் தொழிலின் வண்டவாளத்தை வீதிக்கிழுக்கிறேன் என்று?

இந்திரா: உமது சீற்றம், உங்கள் சுரண்டும் ஜாதியின் வரண்டத் தனத்தைச் சொல்லுகிறேனென்று தானே?

சௌரி: இந்திரா! உன் கோபத்தை மூட்டைக் கட்டும் நாட்டமில்லை எனக்கு. உன் இளமைத் தென்றலில் இளைப்பாறத் துடிப்பவன்.

இந்திரா: குட்டிச்சுவரில் முட்டிக்கொள்வதுதானே?

சௌரி: நான் கழுதையல்ல!

இந்திரா: விஷக்கிருமி?

சௌரி: வேசி! ஆத்திரத்தை வார்த்தெடுக்கிறாய்!

இந்திரா: சாந்த சொரூபியிடத்திலா?

சௌரி: உன்னோடு பஞ்சணையில் கொஞ்சப்போகும் மாரனிடத்தில்!

இந்திரா: சோரனிடத்தில் கொஞ்சதலேது? நல்ல மரத்தில் புல்லுளிபோல! கெல்லி எறிய வேண்டும் உங்களை.

சௌரி: ஏய் இந்திரா! மரியாதை இருக்கட்டும் வார்த்தையில்.

இந்திரா: புலிவாய் மானுக்கு வலியைப்பற்றிக் கதையா?

சௌரி: சாமார்த்தியமான வார்த்தைகள் என் காமத்தைத் தணிக்காது. காதலனே என்று சொல், என் வேதனை ஒழியட்டும். எங்கே?

இந்திரா: வெறிக்கொண்ட நாயுக்கு கறித்துண்டு கிடைத்தது போலத்தான்! இந்த உயிருள்ளவரை கிடைக்காது அனுமதி, போய்விடும்.

சௌரி: அந்த முடிவை நானும் வரவேற்கிறேன்.

இந்திரா: எந்த முடிவை?

சௌரி: கிடைக்காத அனுமதியில், உன்னை அனுபவிக்கும் முடிவை! இதோ பார்!

(கிட்டே நெருங்கி அவள் கையைப்பிடித்து)

சௌரி: என் காமவீட்டின் சோமபானமே!

(பலாத்காரமாய்க் கட்டி அணைக்கிறான்)

இந்திரா: காண்டாமிருகமே! அய்யோ! மாமா!!

(எவ்வளவு முயன்றும் அவன் பிடியிலிருந்து விலக முடியவில்லை. மாமா, அவன் கையைப் பிய்க்க, மாமாவுக்கு சௌரி ஒரு உதைக்கொடுத்து கீழே சாய்த்துவிட்டு, மீண்டும் பலாத்காரம் செய்கிறான். போலீஸ் உடை இன்றி அங்குவந்த ஷண்முகநாதன் இவ்வலங்கோலக் காட்சியைக் கண்டு பதறி, ஓடி இந்திராவைத் தனவான் சௌரிராஜன் பிடிப்பிலிருந்து பிய்த்துவிட, அவ்வேகத்தில் சௌரி கீழே விழுந்து, எழுந்து)

சௌரி: யார்? இன்ஸ்பெக்டர் ஷண்முகநாதனா? ஷண்முகநாதன்! உனக்கு உரிமையில்லை, எங்கள் அலுவலில் தலையிட.

ஷண்மு: சிறு முயலை சிறும்புலி விரட்டுவதற்குப் பெயர் அலுவலோ? மரண மூச்சுவிடும் முயலை மீட்க உரிமை பெறவேண்டுமா? அறிவாளி! முதலில் இவ்விடத்தைவிட்டு மரியாதையாய்ச் சென்றுவிடு.

சௌரி: சொந்தமிருந்ததினால்தான் இந்த நெருக்கம். நீ இதில் குறுக்கிடுவது வெறுக்கத்தக்கது.

ஷண்மு: மக்கள் மத்தியிலல்ல, உன் வெட்கங்கெட்டச் சொந்தம். வெளியேறிவிடு இவ்விடத்தைவிட்டு. இது இந்த இன்ஸ்பெக்டர் ஷண்முகநாதனின் ஆக்ஞை!

சௌரி: வெளியேறுவிட்டால்?

(ஷண்முகநாதன் சௌரி கன்னத்தில் பலத்த அறை கொடுத்து)

ஷண்மு: முதல் அன்பளிப்பு இது. இன்னுமிருந்தால் கன்னம் புளித்துவிடும்.

(அறையை வாங்கிய தனவான் கோபத்துடன்)

சௌரி: தவறிவிட்டாய், என்னை யாரென்று புரிந்துக் கொள்ள; மடையன்!

ஷண்மு: தனவான் சௌரிராஜனென்று எனக்குத் தெரியும் உன்னை. போ வெளியே!

சௌரி: போ வெளியே....! அயோக்கியப் பதரே! நீ யாரடா என்னை வேறிடம் போகச்சொல்ல?

(ஷண்முகநாதன் மீண்டும் சௌரியை அறைய எத்தனிக்கிறான். அச்சமயம் தனவான் தன் பாக்கெட்டிலிருந்த ரிவால்வாரை எடுத்து நீட்ட, ஷண்முகம் கதிகலங்கி நின்றுவிடுகிறான். தனவான் மீண்டும் இந்திராவை இழுத்து)

சௌரி: ஏய் இந்திரா! என்ன செய்கிறாய் இப்பொழுது?

(ரிவால்வாரை நீட்டிக்கொண்டு ஷண்முகத்தைப் பார்த்து)

சௌரி: அடே! அதிகாரத் திமிர்கொண்ட சதிகாரனாயே! சாந்திபெறக் கடவுளைக் கையேந்தி நிற்கும் கட்டத்தில் நடிக்கிறாய் நீ, பஞ்சை நாயே!

(மாமா ரிவால்வாரைப் பிடுங்கப்பார்த்தல். தனவான் மாமாவைக் காலால் உதைக்கக் கீழே விழுகிறார். திருநாவுக்கரசு அச்சமயம் தோன்றி, தனவான் அறியாமல் அவனுக்கு ஒரு அடி கொடுத்துக் கீழே விழுத்தாட்டுகிறான். கையிலிருந்த ரிவால்வார் கீழேவிழ, திருநாவுக்கரசு எடுத்துக்கொள்ளுகிறான். கீழே விழுந்த சௌரி எழுந்து)

சௌரி: நீயார் புதியவன்? அயோக்கியக் கழுதைகளா!

(தான் பறித்த ரிவால்வாரை திருநாவு நீட்டி)

திருநாவு: அவசியம் தெரியவேண்டுமானால் நான் யாரென்பதைச் சொல்லுகிறேன்.

ஷண்மு: திருநாவு! மனிதத்தன்மையின் புனிதத்தன்மை தலைகுனியும் இவனைக்கண்டு. இவனிடம் பேசிக் கொண்டிருப்பதற்கு இது நேரமல்ல. வெளியேற்று அவனை.

திருநாவு: என்னைத் தெரிந்துக்கொள்ளலாம், வெளியேறுமுதலில். இம்...

(தனவான் மிரண்டு, போகும்போது)

சௌரி: பொறுக்கி நாய்களா! வண்ணம் போன்ற உங்கள் வருங்கால வாழ்வில் மண்ணைப் போட்டுக்கொண்டீர்கள், மடையர்கள்!

(நால்வரும் நகைத்து)

திருநாவு: படியளக்கும் குடிவேந்தனல்லவா இவன்?

(கீழே விழுந்து கிடந்த மாமா எழுந்து)

மாமா: அப்பா! இப்பொழுதுதான் உயிர் வந்தது. தொலைந்தானு கொலைபாதகன்?

(ஷண்முகம் இந்திராவைப் பார்த்து)

ஷண்மு: சகோதரி! தைரியமாய் வீடுபோகலாம். ஐயா! அழைத்துச் செல்லுங்கள் வீட்டிற்கு.

திருநாவு: அவர்களை யாரென்று நேரில் தெரிந்துகொள்ளாமல் அனுப்பிவிட்டால்? இது நல்ல யோசனை ஷண்முகநாதன்!

(திருநாவு, இந்திராவைப் பார்த்து)

திருநாவு: பெண்ணே! உன் பெயரைத் தெரிந்துகொள்ளலாமல்லவா?

இந்தி: (வெட்கத்துடன்) மாமா! சொல்லுங்களேன்.

மாமா: குழந்தை பெயர் இந்திரா.

திருநாவு: இருப்பிடம்?

இந்தி: தெற்கு மாசிவீதி (நாணத்துடன்)

திருநாவு: சரி நீங்கள் போகலாம்.

இந்தி: மாமா! அவர்களை நமக்குத் தெரிய வேண்டாமா?

திருநாவு: நான் திருநாவு. அவர் ஷண்முகம். நான் வியாபாரி. அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

(இந்திராவிற்கு நாணம் மேலோங்கிவிட்டது. காதல் பார்வையைத் திருநாவின் மேல் எறிந்து செல்லுகிறாள். அப்பார்வையில் ஈடுபட்டு விடுகிறான், திருநாவு.)

ஷண்மு: திருநாவுக்கரசு! ஆபத்தாக முடிந்திருக்கும் நீ காபந்திற்கு வரவில்லையென்றால். கற்பழிக்கப்படுவாள் இந்திரா. அதை மறைப்பதற்கு மாமா இறக்க நேரிடும். நல்ல நேரத்தில் வந்தாய் தொல்லைத் தவிர்க்க.

(ஷண்முகநாதன் சொல்வதைக் கவனிக்காமல், இந்திராவைப் பார்த்த பார்வையுடன் நிற்கிறான். அவனை அசைத்து,)

ஷண்மு: திருநாவு! இங்கில்லையோ உன் நினைவு?

(திருநாவு திடீரெனத் திரும்பி)

திருநாவு: இருக்கிறது! அதிருக்கட்டும், நீவால்வாருக்குப் பயப்படுவதுண்டா போலீஸ் இன்ஸ்பெக்டர்?

ஷண்மு: போலீஸ் இன்ஸ்பெக்டரென்ன? பயப்படவேண்டியதற்குப் பயந்துதானே தீரவேண்டும், சுயம் பிரகாசவள்ளலாயிருந்தாலும்!

திருநாவு: ஷண்முகம்! பெண் இந்திரா எப்படி? சிரிக்கும் சோலையில் பறக்கும் வண்டவள்! குமுதம் விரிந்த அமுத நகைப்புடையாள்! நாட்டியக் கலையமுதில் தீட்டியப் பொன் மேனியினள்! காதல் கனிசாற்றை மோதிவிடும் பார்வையினள்! அவள் பெண்மைக் கயல்விழி மின்னல் விசும்பிலே, விண்ணையும் சாடிடும் வீரம் பிறக்குது, ஷண்முக நாதன்!

ஷண்மு: போதும், போதும்; நிறுத்து உன் வர்ணனையை!

திருநாவு: ஏன்? அதுமட்டுமல்ல; இன்னமுதை உலையேற்றி, இயல், இசை, நாடகச் சுவையனைத்தும் சேர்த்துருக்கி, காதல் விளைந்த மண்ணில் கருவமைத்து, அதில் வார்த்தெடுத்தப் பேசும் பதுமையவள்!

ஷண்மு: அய்யோ! பன்றியும் பருவத்தில் நன்றாயிருக்குமென்பார்கள். விடு, அந்தப் புகழ் மாலையை.

திருநாவு: ஏன்? வேப்பங்காயோ உனக்குக் காதலென்றால்?

ஷண்மு: காதல்! அது, உணர்ச்சி ஆட்டத்தின் உப்பரிகை! இச்சைத் துடிப்பின் நிலா முற்றம்! ஆசை ஓட்டத்தின் பந்தயத்திடல்! மின்னி மறையும் விஷயத்திற்கு எண்ணிலா அடுக்குமொழிகள்? விடு, அந்த பேச்சை.

திருநாவு: உன் மனைவி இறந்தபின், காதலில் ஏற்பட்ட சலிப்பு இது! நீ எண்ணுவதுபோல், காதல் அவ்வளவு சுருங்கியதல்ல.

ஷண்மு: விரிந்ததுதான்! ஆனால், அமைதியாய் நீ, தனித்து சிந்திக்கவேண்டிய காரியமிது. அதை மூச்சு விடாமல் என்னிடம் அளந்து கொட்டுவது.....

திருநாவு: பிடிக்கவில்லை என்கிறாயோ?

ஷண்மு. ஆம்! கண்ணிற்கும், அறிவிற்கும் விருந்தாட்டும் இந்த இயற்கைக் காட்சியைப்பற்றி எண்ணு. அது, இருவரும் கலந்து அனுபவிக்கவேண்டிய விஷயம். எங்கே? இயற்கையைப்பற்றி ஒரு பாட்டு.

திருநாவு: பாடுகிறேன்,

பாட்டு.

(இருவரும் பாடிக்கொண்டே போய்விடுதல்)

திரை 3.

இடம்: **தாசி, காந்தாமணி வீடு.** நேரம்: **மாலை.**

(இந்திரா, பாரதியார் படத்தைக் கையில் வைத்துக்கொண்டு சந்தோஷமாகப் பாடுகிறாள், அவரைப்பற்றி.)

பாட்டு.

(பாடி முடிந்ததும், படத்திற்கு மாலை சூட்டுகிறாள். பின் இந்திராவின் முகத்தில் கவலைக் குறி. இந்திரா தன் நிலையை எண்ணி பாரதியார் படத்தின் முன் பிரலாபிக்கிறாள்)

இந்தி: மானக்கேடு! நம்மை அந்த மகாப்பிரபு, காமக் கிழத்தி, கண்மணி எனக் கூசாதுரைத்தது நான் தாசி என்ற காரணத்தினால் தானே?

(இந்தச் சமயத்தில் இந்திராவிற்கு தனவானின் குரல் எதிரொலிக்கிறது. "பணங்கொடுப்பவனின் காமக்கூடு நீ. பொன், பொருள், பூமி

என்றநாடகத்தில் நடிக்கும் ஆடரங்கின் நடிகை."
இந்தக் குரலைக் கேட்டதும் காதைப் பொத்திக் கொள்ளுகிறாள்.)

இந்தி: பணம் கொடுப்பவனின் காமக்கூடு நீ! பொன், பொருள், பூமி என்ற நாடகத்தில் நடிக்கும் ஆடரங்கின் நடிகை! இதை என்னால் சகிக்க முடியவில்லை. என்னத் தூணிவாகக் கையைப் பிடித்து இழுத்தான்; தழுவினான் பெண்ணென்றும் பாராமல். விபசாரி வயிற்றில் பிறந்து நேர்மையாக நடக்கக்கூடாதா? சேற்றில் பிறந்த தாமரையைப் போற்றும் மகா புத்திசாலி உலகம், நம்மைமட்டும் ஏன் ஒழுங்காக-ஒழுக்கமாக வாழவிட மறுக்கிறது? குலப்பெண்களையே விலைக்கு வாங்கி விபசார சந்தைக்கிழுக்கும் கேடு கெட்டநாடு, விலைமகளையா விட்டுவைக்கும்? ஏன் தாயி வயிற்றில் பிறந்தேன்? பணத்திற்கு பஞ்சனை அலங்கரிக்கும், குணங்கெட்டப் பாவிகள் வயிற்றில் ஏன் பிறந்தேன்? (யோசித்து)

(பாரதியார் படத்தின் முன் வருந்துகிறாள்)

இந்தி: புரட்சி கவிஞனே! விடுதலையின் அடிதளத்திற்கு மக்களை அழைத்துச்செல்ல இடிமுழக்கப்பாட்டிசைத்தக் கலைஞனே! பெண்ணினத்திற் கிழைக்கும் கொடுமை, கண்ணவிந்தோர் புரியும் மடமையெனப் பக்கம் பக்கமாய்த் தக்கச்சான்றுடன் எழுதிக் குவித்தும், சிக்கலறும் பக்குவத்திற்கு நாடு வரவில்லையே! மாதர்தம்மை அடிமை செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று துடித்தீர்கள்! எத்தனை கூறியும் பித்தர்களின் செய்கை அத்துமீறுகிறதே, அண்ணலே! நெஞ்சம் குமுறுகிறது, வஞ்சகர்களின் போக்கால்! புலவர் பெருமானே! இப்பரந்த உலகில் என் வேண்டுகோள் நீண்டதல்ல உங்களுக்கு; மிகச் சிறிது. ஆனால், எனக்கு அது பெரிது. ஞானத்

தமிழகத்தில் என் மானத்திற்கு ஒரு ஈனம் நேருமானால், நீதி கெட்டச்சேதி முற்றும் ஒரு பெரும் காவியமாக மேவுமென்பதை உங்கள் சார்பில் எச்சரிக்கிறேன், இந்த நாட்டிற்கு அறிஞனே! தாசி என்றால் நாடு பல்லிளிக்கிறது; விலை பேசுகிறது; அவள் மானத்தோடு போரிடுகிறது! இது என் குற்றமா? பெண்களின் ஒரு சாராரை கண்களிருந்தும் சமூகத்தின் பெயரால் விற்பனைப் பொருளாக்கியது என் குற்றமா? இல்லை! மிருகத்தனமாய் இன்பத்தில் மூழ்கிக் கிடக்க; ஏகபோகமாய்த் தன் வாழ்க்கை ரதத்தை உருட்டிச்செல்ல; நிலம்படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள் கண்ட வேலையிது. பாரதியே! நீ கண்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழகத்தில், உயிழத்தக்க விதத்தில் பெண் குலம் விச்சாரம் செய்யவேண்டுமா? என்ன மௌனம் சாதிக்கிறீர்கள்; ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்?

(மாமா. உல்லாசமாய் கையில் ஒரு புத்தகத்துடன் வருகிறார். இந்திரா விசனத்துடன் இருப்பதைப் பார்த்து)

மாமா: ஏன் விசனத்துடன் இருக்கிறாய், இந்திரா?

இந்திரா: கேடுகெட்ட தாசிகுலத்தில் பிறந்த எனக்கு; கண்டவனுக்கெல்லாம் காமத்தைத் தணித்து வைக்கும் கடைகெட்டச் சமூகத்தில் பிறந்த எனக்கு; பணங்கொடுப்பவனிடத்திலெல்லாம், பல்லைக்காட்டிப் பாசமூட்டும் பாத்தையர் வயிற்றில் தோன்றிய எனக்கு; நகைப்பதற்கு வழி ஏது மாமா?

மாமா: இப்பொழுது யாரம்மா மூட்டியது இந்த எண்ணத்தை? அத்தொழில் உனக்கு பிடிக்கவில்லையானால், வேறு எத்தொழிலாகிலும் செய்வது.

பாட்டும், நாட்டியமுமிருக்கிறது. இரண்டில் ஒன்றைத்திரம்படஉருவாக்கிக்கொள்வதுதானே?

இந்திரா: நாட்டியம் விலைமகளுக்குரிய கேடயம்போலிருக்கிறது. அது பிடிக்கவில்லை, மாமா.

மாமா: குடி கெட்டது, போ! நாட்டின் கலைவளம் நாட்டியம்! சிந்தனை அலைக்கூட்டமே, நாட்டியக் கலை ஊட்டம்! அறிவின் கருவூலம். நாட்டியம், உலக அரசவின் சுழலில் விளைந்தது, இந்திரா!

இந்திரா: இருக்கட்டுமே! அறிவின் கருவூலத்தை, அறிவாளிகள் கையிலேயே ஒப்படைத்துவிடுவோம். தப்பிலித்தனத்தின் புகைப்படமாகிய நான் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறேன் மாமா!

மாமா: ஆயிரம் ஆயிரமாக பணத்தைப் பெற்றுக்கொண்டு ஆட்டக்கலையை மக்களுக்குக் காட்டுவதுதான் தப்பிலித்தனம்! கலையை வளர்ப்பதாக இருந்தால், கலையை பொதுவாக்கு; மக்களை உயர்த்தும் கருவியாக்கு, அதை. நாட்டியம், அறிவிற்கு விருந்து; உடலுக்கு உரம். இரண்டு வாரங்களுக்கு முன் உதேசனி இராகத்தில் அமைத்த பாட்டிற்கு பதம்பிடிக்கக் கற்றுக்கொடுத்தேனே, ஞாபகமிருக்கிறதா, அது?

இந்திரா: கொஞ்சம், மறதி மாமா!

மாமா: தெரியுமே எனக்கு. அந்த பாட்டிற்கு பாவம் பிடி; நான் பாடுகிறேன்.

(மாமா, பாட்டு பாடிக்கொண்டு நடனம் பயில்விக்கிறார். பாவம் பிடிக்கிறாள், இந்திரா)

பாட்டு

(இந்திரா நாட்டியத்தில் தேர்ச்சியுள்ளவள். அழகாகப் பிடித்தாள் பாவம். முடிந்ததும் இருவருமாக ஓரிடத்தில் உட்காருகிறார்கள்)

இந்திரா: சற்றுமுன், கொஞ்சம் மெர்த்தமான ஒரு புத்தகம் கொண்டுவந்தீர்களே, அது என்ன புத்தகம்?

(மாமா புத்தகத்தை எடுத்துவந்து கொடுக்கிறார். வாங்கி முகப்பைப் படிக்கிறாள் இந்திரா)

இந்திரா: "புதுமைப் பெண்". ஏது மாமா இது?

மாமா: நம்மைக் காப்பாற்ற தனவானுக்குச் செம்மையாய்ப் பூசைக் கொடுத்தனுப்பினாரே...!

இந்திரா: திருநாவுக்கரசு!

மாமா: பெயர் உயிரில்தான் இருக்கிறதோ? அவருடையதுதான். நந்தவனத்தில் அவரைச் சந்தித்தேன். இதைப் படித்துக்கொண்டிருந்தார். நான் பார்க்கலாமோ என்றேன்; நன்றாய்ப் பார்க்கலாம் என்றார். கேட்டேன்; கொடுத்தார்.

இந்திரா: உங்களை அவர் உடனே தெரிந்துக்கொண்டாரா?

மாமா: எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறது என்றார். உன் பெயரை உச்சரித்தேன்....

இந்திரா: உடனே தெரிந்திருக்குமே?

மாமா: பனிக்கட்டிப் பட்டதுபோல் மெய் சிலிர்த்து, இந்திரா வரவில்லையோ? என்றார்.

இந்திரா: வரமுடியவில்லை என்று மறுமொழி சொன்னீர்களா? வேறு ஏதாவது கூறினாரா?

மாமா: இந்திராவின் நினைவால் சித்தை நைந்து மெலிகிறது, என்றார்.

இந்திரா: போங்கள் மாமா! பரிகாசந்தான் உங்களின் பரம நண்பனுயிற்றே.

(காந்தாமணி வருகிறாள். வரும்பொழுது)

காந்தா: மாமாதானே! பரிகாசம் செய்தாலென்ன? இந்திரா! நாட்டியமெல்லாம் காட்டிக்கொடுத்தாரா, நன்றாக?

இந்திரா: வாட்டிவிட்டார் என் உடலை.

(காந்தா மாமாவிடம்)

காந்தா: வீட்டிற்கு வெள்ளையடிக்கவேண்டும், ஒரு நல்ல ஆள் பாருங்கள் என்று சொன்னேனே; பார்த் தீர்களா மாமா?

மாமா: மூட்டைப்பூச்சித்தொல்லை வீட்டில் தாங்க முடிய வில்லை என்று அந்தப் பயலை, "மூட்டைப்பூச்சி அற்றுப்போக சுவாகா" என்று, சுவரில் கொட் டை எழுத்தால், எட்டுமிடத்தில் எழுதச்சொன் னேன். செய்யவில்லை அந்த மடையன். நல்ல யோசனைதான் வெள்ளை அடிக்கிறதும். சரி. நாளைக்கே ஆளைக் கொண்டுவந்துவிடுகிறேன்.

இந்திரா: ஏன் மாமா இந்தப் புளுகு? ஏது நமது வீட்டில் மூட்டைப்பூச்சி? அம்மா! எதற்காக வெள்ளை?

காந்தா: எல்லாம் உனக்காகத்தாண்டி கண்ணு! உனக்கு சாந்திக்கல்யாணம் செய்து, வேந்தன் மகள்போல ஆக்கத்தான்.

இந்திரா: வாந்தி எடுக்கிறதம்மா, உங்கள் வார்த்தைகள்.

காந்தா: கேலியா, செய்கிறாய்?

இந்திரா: திறவுகோலே பணத்தைத் திருடுகிறது! தாயா கிய நீங்களே என்னை விலை கூறுகிறீர்கள்! மண மாகிக் கணவன் முகம் காணவில்லை இன்னும்; ஆடவர் உள்ளத்தை அணுகுவதற்குக்கூடத் தெரியாத எனக்கு, சாந்திக்கல்யாணம் ஒரு கேடா?

காந்தா: நெருப்பிற்குப் பொசுக்குவதற்கு நினைவூட்டவா வேண்டும்? பசைக்கு, ஒட்டுவதற்குக் கற்றுக் கொடுக்கச் சொல்லுகிறாய்! பருவத்திற்குப்பின் இதை யாரும் பழக்கிக் கொடுப்பதில்லை. மீனாட்சி சுந்தரேசர் கோவிலுக்கு என்னைப் பொட்டுக்கட்டி

னர்கள். "தேவதாசி மகோதா" வந்தபின், பொட்டுக்கட்டுவது நிறுத்தப்பட்டது. தாசி மகள் தானே, நீ! பொட்டுக் கட்டினால்தானே தாசி? உன்னை ஒருநாள் நந்தவனத்தில் சுந்தித்தாரே மகாப்பிரபு; அவர் உனக்காக இரண்டாயிரம் ரூபாய்த்தரக் காத்துக்கொண்டிருக்கிறார்!

இந்திரா: இரண்டாயிரம் ரூபாய்! அய்யோ! என் அழகிய இதழ்களையும், பொன்னை நிகர்த்தக் கன்னங்களையும், இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒருவனிடம் அடகு வைப்பதா? மற்றவனை மனத்தால் நினைத்தாலும் குற்றம்; கற்பின் நெறி காற்றில் பறக்கு மென்றப் பண்பை விதைத்த நாட்டில், வாசத் தென்றலின் வார்ப்படமாகிய என் மேனியை, கூசாது இரண்டாயிரம் ரூபாயிக்குக் கட்டிப்புரள விடுவதா? என்ன தாயே!

காந்தா: நீ ஒன்றும் புரியாதவள். ஏதேதோ உளறுகிறாய். இது, இந்த நாட்டின் -நம் குலத்தின் பரம்பரைத் தொழில். பாரதத்தில் ஒரு கதை சொல்லுகிறேன் கேள். "காவலன் என்பவன், விஸ்வாமித்திரனுக்குக் கொடுக்கவேண்டிய குரு தட்சணை, எண்ணூறு குதிரைகள். காவலனுக்குக் குரு தட்சணை கொடுக்கமுடியவில்லை. இதையயாதி, என்ற மன்னனிடம் காவலன் கேட்டான். யயாதியிடம் குதிரைகள் இல்லை. அதற்காக தன் மகளை காவலனிடம் கொடுக்கிறான். காவலன், இந்த அழகியை மூன்று மன்னர்களின் இச்சைக்குப் பாத்திரமாக்கினான்; அறுநூறு குதிரைகள் கிடைத்தன. அறுநூறு குதிரைகளையும், மற்ற இருநூறு குதிரைகளுக்காக அந்த அழகியையும், விஸ்வாமித்திரனிடம் குரு தட்சணைக்காகக் கொடுக்கிறான். விஸ்வாமித்திரன் அதைப் பெற்றுக்கொண்டான்." பார்த்

தாயா! மன்னனே தன் மகளை விபசாரியாக்கு கிறான். நீ, கற்பைப்பற்றி பேசுகிறாய்!

இந்திரா: நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே என்னைக் கொண்டுபோய் நிறுத்துகிறீர்கள்! மக்கள் பக்கு வப்படாத அந்த காலத்தின்; மக்கள் வளர்ச்சிக் குரிய அந்த காலத்தின் வரலாறு இது. சூழ் நிலை, குயிலின் இனிய தொனியைக்கூட கோட் டான் குரலாக்கிவிடும். அதுபோல, இக் கதை களைச் சொல்லி என்னைக் காமப்பொறியாக்குவது சரியல்ல. தாயே! முகந்தெரியாத ஒருவனிடத் தில் எப்படி சுகங் காணமுடியும்? மனம் ஒப்பித் தான் சொல்லுகிறீர்களா? மானக்கேடு! இழி வான தாசி குலத்தில் அழகான பெண் பிறப்பது அவமானம், அம்மா!

காந்தா: அவமானமல்ல! அவ்வளவும் பணம்! நம் குலத் தொழில்தானே இது! பரம்பரையாக நம் குடும் பத்தில் புரிந்துவரவில்லையா, இத் தொழில்? என்னக்கு வயதாகிவிட்டது. வித்தையெல்லாம் தெரியும்; ஆனால், சக்தியில்லை தொழில் புரிய! பின் வாரிசு நீதானே கண்ணு?

இந்திரா: வேல்விழியை வீசி, மெருகிட்ட மேனியைத் திருப்பிக்காட்டி விபசாரம் செய்வதாலா, ஒரு குடும்பம் முன்னுக்கு வரமுடியும்? நெறியை விலை கூறியதால், குடும்பம் விளங்கியதென்று, அறிஞர்கள் கண்ட அறிவுரையிலுண்டா? ஒரு குடும்பம், விபசாரத்தால் குபேரத்தன்மை பெற்றதென்று, சாதனையில்கண்ட சரித்திரத் தில்கூட பார்த்ததில்லையே! விபசாரத்தையே வேலியாக அமைத்து, வேடிக்கைக்காட்டிய உங் களுக்கு, விபசாரத்தால்தான் உலகமே இயங்கு கிறது என்றுகூடத் தோன்றும்! அது போகட் டும். எங்கே நீங்கள் இளமையில் திரட்டியப் பொருள்களெல்லாம்?

காந்தா: அந்த காலத்தில், எட்டுக்கண்ணும் விட்டெறிந்தது. செல்வம் ஏராளமாகச் சும்பாதித்தேன்; தாராளமானச் செலவு. உன்னே வளர்ப்பதற்கு எவ்வளவு பணம்? குந்திக்கொண்டே சாப்பிட்டால் குதிரில் வந்துகொண்டே இருக்குமா? கோடைகாலத்துக் குட்டைமாதிரி, வற்றிப் போய்விட்டது. புத்தியுள்ள நீ இருக்கும் பொழுது எனக்கு சொத்து ஏன்? சித்தம் வைத்தால் சிறப்பாக இருக்கலாம், கண்ணே!

இந்திரா: மற்றவர்களிடம் என் கற்பை விற்பதற்காகவா, பெரும் பொருட்செலவில் என்னே ஆளாக்கினீர்கள்? உங்கள் கருணையே கருணை! அழகுச்செடியில் அரும்புகள் சிரிக்கும்பொழுது, ஆட்டை விட்டு மேய்ப்பதுபோல் இருக்கிறது! இளம் பிராயத்தை இழித்தொழிலில் போக்கி வளங் கொழிக்கக் கும்மாளமடித்துவிட்டு, தளர்ந்த பின் மூலையில் தள்ளுவதற்கா என்னே? வாடகை மோட்டார்போல! வேண்டாம்.

காந்தா: அப்படியானால் நாம் எப்படிக் காலம் கழிப்பது?

இந்திரா: எழிலேச் சூதாடியா காலம் கழிப்பது? தமிழர்கள் கண்ட கற்பை விற்பனைசெய்தா காலம் கழிப்பது? இறந்தொழிந்தால்?

காந்தா: இழிவில்லே கண்ணே! நம் ஜாதியின் நீதிதானே இது? கேவலத்திற்கிடமேது? எத்தனேயோ தாசிகள் பத்தடுக்கு மாடியில் பத்தரைமாற்றுப் பசும் பொன் மாதிரி மின்னுகிறார்களே, நம் தொழில் புரிந்து. ஏன்? மாதவி, கோவலனேக் காதலனாகக்கொண்டு, கண்ணகியைக் கண்ணெடுத்தும் பார்க்கவிடாமல், அவள் இன்ப நாட்டிய மாடவில்லேயா? நீ மட்டில் எங்கிருந்து குதித்து விட்டாய்?

இந்தி: மனேவியை மறந்து, மாதவியைக் கூடிக்கிடந்த பண்புகெட்டக் கோவலன் தெறி இந் நாட்டிற்கு

வேண்டாம். போதும், உங்கள் புழக்கடை உதாரணங்கள். பார்ப்பவனிடத்திலெல்லாம் படுத்தூரங்கும் பள்ளியறைப் பதுமையாயிருப்பது பழிப்பிற்கிடமில்லையென்றால், வேறு எதைத்தான் கேவலமென்கிறீர்கள்? கேவலம் உங்களுக்குப் பூமணம்! கற்பை விற்பதைவிட, தற்கொலை தலைசிறந்தது தாயே! என்னை விடுங்கள்.

(மாமா இதில் குறுக்கிட்டு, காந்தாவிடம்)

மாமா: ஒளியைத் தேடும் கண்களுக்கு உதய சூரியன் போல் உன் வார்த்தைகள்! இந்திராவிற்கு அது தெரியுமா? கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவள் நெஞ்சைத் திருத்தவேண்டும். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ போ.

(மாமா சமிக்ஞை செய்கிறார். காந்தாவும் மாமாவிடம் சமிக்ஞை காட்டி செல்லுகிறாள்)

இந்திரா: என் தாயல்ல!

மாமா: பேய்தான்! பிச்சுப் பிடுங்கிவிட்டாளே, நச்சுவாய் சிறுக்கி. யானைப் புசிப்பதற்கு, ஆட்டுக்குட்டி சொல்லிக்கொடுக்கிறது! புலிப்பாய்வதற்கு, பூனையா உபாத்தியாயர்? எனக்குத் தெரியாததற்கு உனக்கு சொல்லிக்கொடுக்க வந்துவிட்டாள்; என்னைவிட அனுபவப்பட்டவள்போல்!

இந்திரா: வேசித்தொழில் புரிந்தாகிலும் காசு பெறவேண்டும்; கற்பைக் காணிக்கை வைத்தாகிலும், பொற்குவியல் தேடவேண்டும்; பண்பைப் பணயம் வைத்தாகிலும் பணம் திரட்டவேண்டும்; பணம்! காதல் இன்றேல் சாதல் என்று முழங்கிய நாட்டில், காதகச் செயலுக்குத் தண்ணீர் ஊற்றும் பாதகர்கள் ஓர் புறம்! கற்பு, கற்பு என்று மூர்சைறந்த நாட்டில், வற்புறுத்தி மிருகம்போல் இச்சையைத் தணித்துக் கொள்ளும் சிற்றறிவோர் மற்றொருபுறம். மாமா! இந்தக் கதை

யைப்பற்றி எதையும் பேசக்கூடாது, என்னிடத்தில்.

மாமா: நீ எதைச் சொல்லுகிறாயோ அதைச்செய்கிறேன்.

இந்திரா: மாமா! புத்தகம் கொடுத்தாரே திருநாவுக்கரசு, அவருக்கு எந்தத்தெரு தெரியுமா?

மாமா: அவரைத் தெரியும்.

இந்திரா: அவரை எனக்குத் தெரியாதா? புலி என்றால் எலி என்கிறீர்களே! வீடுதான் தெரியுமா?

மாமா: வீடு தெரிந்தால், தெருத் தெரிவதா கஷ்டம். சரி. எப்படியாவது அவரை ஒப்படைக்கிறேன் உன்னிடம், போதுமா?

இந்திரா: உங்களை அழைத்து வரும்படியா சொன்னேன்? அப்படித்தான் அழைத்தால் அவர் நம்மை எப்படி எண்ணுவார்?

மாமா: எண்ணுவது இருக்கட்டும்! அழைத்து வருவதால் குற்றமில்லையே?

இந்திரா: (புன்முறுவலுடன்) பரிகாசத்தை விடுவதில்லை.

(புத்தகத்தைத் திறந்து பார்க்கிறாள். குதூகலத்துடன்)

இந்திரா: மாமா! மாமா!! இதோ பாருங்கள். "சித்திரை வீதி." இப் புத்தகத்தில் அவர் முகவரி இருக்கிறது மாமா!

மாமா: அப்பா! கடலில் தத்தளிப்பவன் கண்ணுக்கு படகு தென்பட்டமாதிரிதான்!

(மேஜையைத்திறந்து இந்திரா, திருநாவுக்கு கடிதமெழுதி மாமாவிடம் கொடுத்து)

இந்திரா: இக் கடிதத்தைத் திருநாவுக்கரசிடம் உடனடியாகச் சேர்க்கவேண்டும். பத்திரம்!

(மாமா கடிதத்தை வாங்கிச் சென்றதும், தனியாக அமர்ந்து, தன்னிடம் மாமா கொடுத்த புத்தகத்தை புரட்டி வாசிக்கிறாள்)

இந்திரா: உலகில், இளைத்தோரை வலுத்தோர் அடக்கி ஆள எண்ணிய காலந்தான் நிலப்பிரபுத்துவக் காலம். ஆண்டான், அடிமைகள் தோன்றிய காலமது. இட்ட வேலைகளை அட்டி இல்லாமல் செய்ய ஆண் அடிமைகள். மிருக உணர்ச்சியைத் தட்டிக் கழிக்காமல் கட்டித்தழுவி சுகத்தைச் சுரக்கப் பெண் அடிமைகள். நாளெல்லாம் உழைத்துவிட்டுக் கூழுக்குக் கூக்குரலிடும் பண்ணை ஆட்கள். தலைக்கணையாய் நினைத்த நேரம் சுகங்கொடுத்து மனமுடையும் பெண்ணினங்கள். நிலப் பிரபுத்துவ ஆட்சியின் இந்த நிலித்தனத்திற்குப் புதுவேஷம் பூட்டி மூண்டெழுந்தது, முதலாளித்துவம். இதில், அடிமைகளுக்குப் பெயர் குடிபடைகள்! ஆசை நேரத்தில் பாசங்காட்டியவளுக்குப் பெயர், அன்பின் வடிவம்; இன்பத்தின் தேக்கம்! கொடுமைகள் என்னவோ பழமையின் சின்னந்தான்; ஆனால், கொஞ்சம் மெருகேற்றிய வார்த்தைகள்! இவைகளுக்கு அடங்கிச் சிறு நரிபோல் பொந்தில் கிடந்தவர்கள், அடிபட்டப் பந்தைப்போல் உந்தி எழுந்தார்கள். கோட்டைக் கொத்தளங்கள் ஓட்டையாயின; நாறு சுக்கானது அடிமைத்தளை. புதிய சமுதாயம் மலர்ந்தது! அங்கு ஆண்டான் அடிமை மாண்டது. ஏற்றத்தாழ்வு காற்றில் பறந்தது. மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமை நிர்மூலமாகிவிட்டது. எல்லாத் துறையிலும் பெண்களும், ஆண்களும் கைக்கோர்த்து நல்லது புரிகிறார்கள். விபசாரம் மண்மூடிப்போனது; ஒழுக்கம் விழுப்பம் தருகிறது. முதலாளித்துவ தேசங்களில், கண்காட்சிப் பொருளாகவே பெண்

கள் இன்றும் திகழ்கிறார்கள். சுதந்திரமிருப்ப தாக இதங்கொழிப்பார்கள்; வேடிக்கைப் பொரு ளாக மதித்துப் பெண்களிடம் லீலை புரிவதை வாடிக்கையாக்கிக் கொள்வார்கள். கலவிக்குக் குலவும் பதுமைதான் பெண்கள்! முதலாளித் துவ அமைப்பு எந்தப் பாகத்திலிருந்தாலும் அங்கு விபசாரம் இருந்துதான் தீரும்.

(யோசித்து, புத்தகத்தை மூடிவிட்டு)

இந்திரா: ஆம்! முதலாளித்துவ அமைப்பு இருக்கும்வரை எத்தனை வள்ளுவன் பிறந்தாலும், விபசாரம் இருக்கத்தான் செய்யும். உண்மையிது! கடமை யைச் செய்து முடித்தக் கர்மவீரர்கள், புது உலக சிற்பிகள்மீது ஆணை! இந்த வேசித் தனத்தை நாசம் செய்வேன்.

திரை 4.

இடம்: தாசி, **ஜீவரத்தினம் வீடு.** நேரம்: **மாலை**

(ஜீவா, தனக்குள்ளே முணுமுணுத்துப் பாடிக் கொண்டு தலைசீவி, பூமுடித்துப் பொட்டிட்டு அலங்கரித்துக் கண்ணாடிமுன், தன்னைப்பார்த் துக்கொண்டு)

ஜீவா: விலைமகளாகப் பிறந்தால், அவள் அழகைப்பேசித் திரியவேண்டும் ஆடவர்கள். மெருகேற்றியத் தங்கத் தகடுபோன்ற மருவற்ற மேனி! கடை சல் பிடித்த உடலமைப்பு! காமச்சுழல் நெளியும் கருவிழி! கொடி இடை! துடி நடை! இது மட்டுமா? இவைகளுக்கெல்லாம் மூலக்கேற்றும் இளம் பருவம். ஆகா! என்னைப்போன்றவர்கள் இருப்பதினால்தான், கவிகள் நெஞ்சில் கற்பனைக் குவிகிறது அந்தக் கற்பனை வெள்ளக்காட்டில் புகுந்து, பிரபுக்

கள் நம்மைக் கண்டெடுத்துவிடுகிறார்கள்! எவன் எக்கதியானால் நமக்கென்ன? கவியின் கற்பனைக் கேற்ற நமது அழகு, நம் இருப்பிடத்தில் பொருளைக் கொண்டுவந்து பொழியும்.

(சௌரிராஜன் வருகிறான். அவனைத்தோளோடு தோள் சேர்த்து அழைத்து வருகிறாள். இருவரும் அமர்ந்து)

ஜீவா: அன்பே! உங்கள் நினைவால் துன்பப்படுகிறேன். ஒன்றைப் பிரிந்து மற்றொன்று வாழாத மணிப் புறுப் போன்ற மாணிக்கமல்லவா நான்! உங்களைப் பிரிந்து எங்ஙனமிருப்பது? நீங்கள் என்னிடமே இருந்தாலென்ன எப்பொழுதும்?

சௌரி: நான் உன்னைப் பிரிந்திருந்தாலும், மறந்திருந்ததில்லை.

ஜீவா: முனிசாமி! முனிசாமி!!

(வேலைக்காரனை அழைத்து இரகசியமாகச் சொல்லி அனுப்புகிறாள். வேலைக்காரன் போகிறான்)

ஜீவா: இருந்தாலும், நீங்கள் என் பக்கத்திலேயே...

சௌரி: சொக்கிக்கிடக்கவில்லை என்ற கவலையா, கண்ணே? கட்டுக்கோப்பான எட்டடுக்கு மாளிகை பல வேலைக்காரர்கள் உனக்குப் பக்கத்துணை. இத்தனையுமிருக்க....

ஜீவா: சித்தத்தில் ஏன் கவலை என்கிறீர்களோ? ஆயிரம் துப்பாக்கி இருக்கிறது, கோவில் பதுமையாகுறி பார்த்துச் சுடும்? அளவற்ற போகமுண்டு! ஆனால், அனுபவிக்க? துணையற்றக் காதலுக்குப் பெயர் சகாரா பாலைவனந்தானே?

சௌரி: உடல் எங்கிருந்தாலும், என் உயிரை உன்னிடம் தான் விட்டுச் செல்லுகிறேன்.

ஜீவா: ஆமாம்! போகட்டும் போங்கள்.

(வேலைக்கார முனிசாமி ஒரு கிளாஸில் கலரை ஊற்றி, ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வருகிறான். தனவானிடம், ஜீவா எடுத்துக்கொடுத்து)

ஜீவா: சாப்பிடுங்கள், இதை.

சௌரி: விலக்கப்பட்ட பொருள் உன் வீட்டில்?...

ஜீவா: மயக்கந் தருவதல்ல; மனங் குளிர்வது. கூல் ட்ரிங். சாப்பிடுங்கள்.

(ஜீவா எடுத்துக் கொடுக்கிறாள்)

சௌரி: (குடித்துக்கொண்டே) ஜீவரத்தினம்! நீண்ட நாளாகிவிட்டது உன் பாட்டில் நான் பரவசப் பட்டு. எங்கே?

ஜீவா: இதோ பாடுகிறேன்.

பாட்டு

சௌரி: நன்றாய் பாடுகிறாய் இப்பொழுது! ப்ரேஷ்! உன் குரலோசை இனிமைக்குக் குழலும் அடிமை ஜீவா! தெவிட்டாத இன்பம்.

ஜீவா: குழலோசையில் மயங்கி நிற்கும் கோகுலத்தில் ஒருவர் நீங்கள்! அப்படித்தானே?

சௌரி: ஏன் இவ்வளவு கோணல்? மாடு என்று சொல்லித் தொலையேன்!

ஜீவா: போங்கள் நாதா! ஆனந்தத்தில் அயர்ந்தவரும் மொழியில்கூட...

சௌரி: பிழை கண்டுபிடிக்கிறேன் என்கிறாயோ? இல்லை! நீ தொடுவது உடலுக்கின்பம்; பேசுவது செவிக்கின்பம் கண்ணே!

ஜீவா: உங்களுக்குத்தெரியாமல் நான் ஒரு தவறுசெய்து விட்டேன். என் தங்கை வந்திருந்தபொழுது, உங்கள் அனுமதி இல்லாமல் தங்கச் சங்கிலியைக் கொடுத்துவிட்டேன் அவளுக்கு. அதனால் மன வலி.....

சௌரி: குணவதியிடத்திலா? யாழைத் தலைகுனியச் செய்யும் ரதன மொழியாளிடத்திலா மனவலி? இங்கு வந்திருந்தபோது உன் தங்கையிடம் நான் அனுபவித்த இன்பத்திற்கு அன்பளிப்பாக இருக்கட்டும், அந்த சங்கிலி. உனக்கு வேறு சங்கிலி வரும்.

ஜீவா: நீங்கள் கண்டவளையும் கொண்டணைக்கிறீர்கள், வண்டு மலரில் ஒண்டுவதுபோல. அதில் தேன் சுண்டிவிட்டால், வேறு மலரை அண்டுவீர்கள்; அப்படித்தானே?

சௌரி: உன் தங்கை என்ற ஒரே காரணத்தினால்...

ஜீவா: வெறொருத்தியிடம் அன்புகாட்டாமல் அவளிடம் இன்பமுற்றீர்கள் போலிருக்கிறது! என்ன ரசப்பு? நந்தவனத்தில் இந்திராவைத் தொந்தரவு செய்து, அங்கு வந்தவர்களிடம் அவமானப்பட்டது?

(சௌரிராஜன் ஆங்காரமாய்)

சௌரி: மட்ட ரகமானப் பொய்யிது! திட்டமில்லாமல் ஒருவளைத் தொட்டிழுத்து அவமானப்பட நான் என்ன மட்டியா? அவமானப்படுத்திவிட்டு இந்தப் புவியில் அவன் வாழ ஓர் அடி நிலம்? விளையாட்டாகப் பேசாதே, ஜீவா!

ஜீவா: தீப்பொறி பறக்கிறதே! இதைத்தான் நான் ஏன் சொன்னேன்? உங்களுக்கு என்மேல் கோபமா?

சௌரி: காதல் கோபுரத்தினிடத்திலா கோபம்? உலகத்தையே மயக்கும் கலகலத்த நகைப்புடைய உன்னைவிட்டு, யாரையோ நேசிக்கிறேன் என்று பேசியதை நம்பினையே; மிகத்தவறு அது.

ஜீவா: இனிமேல் நம்புவேனா, இவைகளை? அது போகட்டும், சங்கிலி எப்பொழுது வரும்?

சௌரி: பதது நாளில!

ஜீவா: ஏமாற்றிவிடக்கூடாது!

சௌரி: உன்னிடம்சொல்லி ஏதாவது இதுவரைஏமாற்றிய துண்டா?சொல்லும் செயலும்ஒன்றாய் உள்ளவன், நான். அறிவுஎன்றால், கடைச்சரக்கா என்று கேட்பான்; அவனுக்குப்பெயர் மதிவாணன்; இங்கே...!

ஜீவா: கல்வியென்றால், கழுத்தில் அணியும் நகையா என்று கேட்பாள்; அவளுக்குப்பெயர் கலைவாணி என்றில்லையா?

சௌரி. சரியாகச் சொன்னாய்! இந்நாட்டில் வைக்கப்படும் பெயர்கள், இவை! செய்கை ஒன்று, பெயரொன்றில்லை எனக்கு. சொன்னதைச் செய்வேன்; செய்வதைச் சொல்வேன். சங்கிலி பத்துநாளில் வரும்; பயப்படாதே! வேலை அதிகம். நான் போய் நாளை வருகிறேன்.

ஜீவா: மாலை ஐந்து மணிக்கே வந்துவிடவேண்டும்.

(சௌரி தனியாக வந்து)

சௌரி: அயோக்கியக் கழுதைகள்! இந்த உப்பற்றச் செய்தியை ஊர் சிரிக்க வைத்துவிட்டார்கள். அங்கே போலால், நண்பர்கள். இங்கே வந்தால் ஜீவா. தலைநீட்ட முடியவில்லை!

(சௌரி சென்றுவிடுகிறான். ஜீவா தனியாக)

ஜீவா: இதுவரை சௌரிராஜன் பெரும் பணத்தை நம் பொருட்டுச் செலவழித்துவிட்டார். இன்னும் கொஞ்சமிருக்கிறது. கல் நெஞ்சையும் மெழுகாக்கும் என் பிஞ்சு நகைப்பு, சௌரியின் எஞ்சியப் பொருளையும் புஞ்சிக்காமலா விடும்? பிறகு அய்யாதான் அந்தரமாய்த் தொங்குவாரே, இங்கிரா எங்கே?

திரை 5.

இடம்: **திருநாவுக்கரசு வீடு.** நேரம்: **காலை**

(திருநாவு நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். இந்திராவை நினைத்து)

திருநாவு: இந்திரா! (யோசனை) அழகுப் பொய்கையில் அசைந்தாடும் தாமரை அவள். நான் வண்டாக மாறவேண்டும், தேனுடன் காதலைத் தித்திக்கப் பருகிட. மலர்ந்தும் தேனைத் தானே வழங்காத வஞ்சமேன் இத்தாமரைக்கு? சுரக்குமுன், தேனைப் பறந்துப் பருகத் துடிப்பேன் இவ் வண்டுக்கு? சுந்தரி! உன் மன அழகை அறியுமுன், உன் வெளி அழகு என்னைக் கவர்ந்து விட்டது. உன் புன்னகையின் போக்கைத் தெரிந்த பின் உன்னைப்பற்றி எண்ணுவதுதானே காதல்? உன் மாசற்ற இதயக்கோட்டை வாசல், என் ஈடற்ற காதல் உத்வேகத்திற்கு வரவேற்பளிக்குமா? உன் சம்மதமின்றி விம்முகின்றேன் நான்!

(மாமா, கடிதம் கொண்டுவந்து திருநாவுக்கரசிடம் சேர்க்கிறார். வாங்கி வாசிக்கிறான் திருநாவு)

திருநாவு: அன்பே! கங்கு கரையற்ற ஆசைத்துடிப்பில் பொங்கி மலர்ந்த இக்கடிதத்தை, தங்கள் அன்பிற்குக் காணிக்கை யாக்குகிறேன். தங்களை நான் நன்றாய் அறிந்த பின்னரே இக்கடிதம் எழுதினேன். பெண்கள் பிந்துகின்ற காரியத்தில், இவள் முந்துகிறாளே என்று சிந்தை வியப்புறலாம். என் இதயக்குமுதம் விதைத்தப் பார்வையில் தங்கள் உருவம் எண்ணுள் லயித்துவிட்டது. அது வெளித்தோற்றத்திற்கு எப்படித் தெரியும்? தாங்கள், என் உள்ளக் கோவிலில் வீற்றிருக்கும் காட்சியை சாட்சி

கூறவில்லையா என் கடிதம்? நன்றாய்ப் பாருங்கள்! உச்சி முதல் உள்ளங்கால்வரையுள்ள கச்சிதமான என் வடிவழகை, இக் கடிதத்தில் காண்பீர்களானால் நான் பெரும் பேற்றுக்குரியவள்தான்.

தங்களே நேரில் காண விழையும்
தங்கள் காதற் பெட்டகம்,
இந்திரா.

(இதைப்படித்து, பிரமித்து கடிதத்தை மார்போடணைத்து முத்தமிட்டு)

திருநாவு: வாழப்பிறந்தேன்! வாழ்வையே கையிலேந்தி வாருங்கள் அன்பே என்கிறாள், என் இன்பத்தின் முன்னோடி!

(மாமாவைப் பார்த்து)

திருநாவு: ஐயா! இது இந்திராவின் சொந்த எழுத்துதானே?

மாமா: ஆமாம்! நிச்சயமாக அவள் இச்சையாய் எழுதியதுதான்.

(மீண்டும் கடிதத்தை மார்போடணைத்து, பதில் கடிதமெழுதி மாமாவிடம் கொடுத்து)

திருநாவு: இந்திராவிடம் நீங்கள் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. அவள் பாசக்கயிற்றால் வீசிவிட்டப் பம்பரம் நான்; இன்னும் உயிரோடுதான் உழன்றுக்கொண்டிருக்கிறேன் என்று மாத்திரம் சொல்லுங்கள். கடிதத்தைச் சேருங்கள்.

மாமா: காரியத்தைச் சொல்லி நேரில் கொடுக்கிறேன். வருகிறேன்.

(மாமா போய்விடுகிறார். திருநாவு நாற்காலியில் அமர்ந்து அக்கடிதத்தை மீண்டும் வாய்க்குள்ளேயே படித்துக்கொண்டிருக்கும் சமயம், ஷண்முகநாதன் வருகிறான்)

திருநாவு: ஷண்முகநாதன்! வா. நேற்று மாலை உன்னை எதிர்பார்த்தேன். நீ வரவில்லை.

ஷண்மு: பொறுப்புவாய்ந்த உத்தியோகந்தான். ஆனால், இறுமாப்பிருக்கக்கூடாது; பொது மக்களுக்குப் பணிபுரியவே போலீஸ் உத்தியோகம் ஏற்கிறோம் என்பதைப் புல்லுருவிகள் மறந்துவிடுகிறார்கள். தொண்டுசெய்யும் கருவியாக இன்று போலீஸ் இலாக்கா என் இருக்கக்கூடாது என்று எண்ணுவதுண்டு, நான்.

திருநாவு: அது ஆகக்கூடியதா, விவேகமற்றச் சமுதாய அமைப்பில்? ஒருவனை நோகவைத்து, இன்னொருவன் போகத்தில் புரள்வது! இதற்கு எதிராக நிற்கும் மக்களை ஒடுக்கத்தானே உங்களைப் பணம் கொடுத்து வளர்ப்பது?

ஷண்மு: இருந்தாலும், கூடுமானவரை பாடுபடலாம் என்பதுதான்.

திருநாவு: இருந்தாலும்...! கூடுமானவரை...! இது வீண் மயக்கம். இன்றைய அமைப்பின்கீழ் சுதந்திர வீரர்கள் கைக்கு ஆட்சி வந்தாலும் சரி; இச்சமுதாய அமைப்பிற்கு எதிராக ஆர்ப்பரித்தெழும் மக்களுக்கு, அது துப்பாக்கி குண்டுதான் பரிசளிக்கும். அதைச் சொல்ல, இதோ அண்மையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. தேசிய இயக்கத்தின் தந்தை சுண்யாட்சன்; ஆசியச் சொல்லை உயர்த்தினான். அவன் பரம்பரை சியாங்கேஷேக்; செல்வாக்குள்ளவன். ஆனால், உணவுக்குப் போரிட்ட மக்களைப் பிணமாக்கி நகைத்தான். ஏகபோகம் சிதைகிறது என்பதற்காக, ராணுவத்தின் கையில் பாணத்தைக் கொடுத்து வாணவேடிக்கை விட்டான்; போராட்டத்தில் கலந்த தேசியவாதி எப்படி? அது இருக்கட்டும். இக்கடிதத்தைப் பார்.

(ஷண்முகம் கடிதத்தைப் பார்த்துவிட்டு)

ஷண்மு: இந்திரா! (யோசனை) ஓகோ! நந்தவனத்தில் நம்மால் காப்பாற்றப்பட்டவள். சீனத்துப் பதுமை! கானத்தின் இன்ப ஒலி! நல்ல பொருத்தம். அவளைப் பார்த்ததுந்தான் கோர்த்துவிட்டாயே நீண்ட கவிதை. அதற்கு கைம்மாறுதான் இக்கடிதம்.

திருநாவு: கைம்மாறு கடிதந்தானு? நான் விரும்பியது கடிதமல்ல; அவள் மழலை துள்ளும் மொழியை! செடியையல்ல; ரோஜா மலரை! ஷண்முகம்! அவள் ஜாதியைக்கூட நாம் தெரிந்துக்கொள்ளவில்லை?

ஷண்மு: நாம் என்ன? நீ தெரிந்துக்கொள். பெண்ஜாதிதான்! மூளையில் உனக்குக் கோளாறே? நீ விரும்பியது அவள் கரும்புச் சொல்லை; ஜாதியையல்ல! முள் மொய்த்தச் செடியையல்ல; ரோஜா மலரை!

திருநாவு: மன்னிக்கவேண்டும். பன்னெடு ஆண்டுகளாக, பாலோடு உடலில் பாய்ந்ததல்லவா இந்த ஜாதிப் பித்து?

ஷண்மு: அதனால், மறந்துபோய் ஜாதியைக் கேட்டுவிட்டாய்? நல்லது!

திருநாவு: உன் இடக்குப்பேச்சை விடமாட்டாயே! இருக்கட்டும், எப்படி இருக்கிறான் உதைப்பட்டத் தப்பிலிப் பிரபு?

ஷண்மு: அதைச் சொல்வதற்கு மறந்து போனேன். என் உத்தியோகத்தில் நெருப்பை வைத்துவிட்டான். நான் லஞ்சம்வாங்கியதுபோல், வஞ்சகமாய் ஒரு வழக்கு ஜோடித்திருப்பதாகக் கேள்வி. இந்த நெறுக்கடியில் அரசாங்கம் என் உத்தியோகத்தில் குறுக்கிட்டால் நிலை குலைந்துவிடும், என்பாடு.

திருநாவு: பயப்படாதே! என்னுடைய வணிக நிலையத்தில் நீ தனியிடம் பெறுவாய்.

ஷண்முகம்: சரி. திருநாவு! நான் வருகிறேன்.

திரை 6.

இடம்: **போலீஸ் ஸ்டேஷன்.** நேரம்: **காலை.**

(இன்ஸ்பெக்டர் ஷண்முகநாதன், போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிறார். சிப்பாய்கள் மரியாதை செய்ய, அமர்கிறார்)

இன்ஸ்: 122! என்னைத் தேடிக்கொண்டு யாராவது வக்கீல்களா இங்கே?

122: இல்லை சார்!

(இன்ஸ்பெக்டர் மேஜையைத் திறந்து ரிக்கார்டுகளை எடுத்துப் புரட்டிப் பார்த்துவிட்டு)

இன்ஸ்: 250! ராமனை, அழைத்துவா.

(சிப்பாய் உள்ளே போய் ராமனுடன் வருகிறான்)

இன்ஸ்: உமது பெயரென்ன?

மாமா: என் பெயர் ராமன்.

இன்ஸ்: இந்திரா என்ற பெண்ணைச் சௌரிராஜன், அவள் வீட்டில் புகுந்து சேட்டைச் செய்ததாக, நேற்றிரவு டெலிபோனில் உதவிகேட்டது நீர்தானே?

மாமா: நான்தான் கேட்டேன்.

இன்ஸ்: நீர் என்ன ஜாதி? தொழிலென்ன?

மாமா: இசை வேளாளர். பாதகூட்டியம் புரியவைப்பது என் தொழில்.

இன்ஸ்: அங்கு நடந்ததைச் சொல்ல முடியுமா, விபரமாக?

மாமா: நன்றாகத் தூங்கினேன். இரவு ஒன்றரை மணி இருக்கும். உரத்தக் குரல் கேட்டது. பறக்கப்

பறக்க ஓடினேன். இந்திராவின் குரல்! தனவந்தர், அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தார். நான் போட்ட சப்தத்தில் ஓட்டமெடுத்துவிட்டார். உடனே தெரிவித்தேன், உங்களுக்கு.

இன்ஸ்: அதற்குமுன் தனவந்தர் அங்கு வந்திருக்கிறாரா?

மாமா: இல்லை.

இன்ஸ்: சரி. அப்படி இருங்கள். 250! இந்திராவை அழைத்துவா.

(சிப்பாய் உள்ளே போய், இந்திராவுடன் வருகிறான்)

இன்ஸ்: நீங்கள் என்ன ஜாதி?

இந்திரா: இசை வேளாளர்.

இன்ஸ்: மணமாகிவிட்டதா? குலப்பெண்தானே நீங்கள்?

இந்திரா: இல்லை. தாசியின் மகள்.

இன்ஸ்: தாசித்தொழில் செய்வதுண்டா?

இந்திரா: இதுவரை இல்லை.

இன்ஸ்: நடந்ததென்ன வீட்டில்?

இந்திரா: நித்திரையில் அயர்ந்துவிட்டேன். புத்தரவு சிறுவதுபோலிருந்தது. விழித்ததும் சண்டாள தனவந்தன் என்னைப் பெண்டாள வருவதைக் கண்டேன். அவன் காமப் பிடியிலிருந்து கரையேறச்செய்த முயற்சியில் ஒருவாறு வெற்றி பெற்றேன்.

இன்ஸ்: தப்பியது எப்படி?

இந்திரா: ஓவென்று அலறினேன். ஊரார் கூடிவிட்டார்கள். அவன் ஓடிவிட்டான்.

இன்ஸ்: தனவந்தர் உங்கள் விருப்பமில்லாமலா அங்கு வந்தார்?

இந்திரா: விருப்பமில்லாமல்தான்.

இன்ஸ்: புகழ்ந்தோ, இகழ்ந்தோ தனவந்தரைப்புற்றி பேச்சு நிகழ்ந்ததுண்டா உங்கள் வீட்டில்?

இந்தீரா: என் தாய் கூறியதுண்டு, தனவந்தன் சீரும் சிறப்பும் உள்ளவனென்று. பணமிருந்தால் நான் இணங்கவேண்டுமென்பது விதியா? முடியாதென்று கூறிவிட்டேன்.

இன்ஸ்: சரி. நீங்களும் இப்படி இருங்கள். 122! காந்தமணியைக் கொண்டு வா.

(சிப்பாய் உள்ளே போய் காந்தாமணியுடன் வருகிறான்)

இன்ஸ்: நீங்கள் இந்திராவின் தாய்தானே?

காந்தா: ஆமாம்!

இன்ஸ்: பருவத்திற்குப்பின் ஆடவர்களின் இச்சைக்கு இசையச் செய்ததுண்டா இந்திராவை?

காந்தா: இச்சைக்கா?

இன்ஸ்: அப்பட்டமாகச் சொல்லவேண்டுமோ? விபசாரத்திற்குள்ளாக்கியதுண்டா?

காந்தா: மீனாட்சி சுந்தரேசர் அறிய இல்லை. ஒன்றும் அறியாத குழந்தை.

இன்ஸ்: எப்பொழுதாவது உங்கள் வீட்டிற்குத் தப்பித் தவறி தனவந்தர் வந்திருக்கிறாரா? நினைத்துச் சொல்லுங்கள்?

இன்ஸ்: வந்ததே இல்லை.

காந்தா: உங்கள் அனுமதியில்தானே இந்திராவைத் தனவந்தர் பலாத்காரம் செய்தார்?

காந்தா: இல்லை. நான் நன்றாகத் தூங்கிவிட்டேன்.

(இன்ஸ்பெக்டர் ஆத்திரமாக)

இன்ஸ்: நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள். உங்

கள் வீட்டிற்குத் தனவந்தர் வந்தது, உங்கள் நாட்டத்தின் சமிக்ஞையால்தானே ?

காந்தா: இல்லை.

இன்ஸ்: இந்திரா விஷயமாக இதற்கு முன் தனவந்தர் உங்களிடம் ஏதாவது சொன்னதுண்டா ?

காந்தா: பேசியிருக்கிறார்.

இன்ஸ்: என்ன பேசியிருக்கிறார் ? நாசியைப் பிடித்துக் கொண்டு ஊசி முனையில் தவம் புரிவதைப்பற்றி யா ?

காந்தா: தாசிதானே இந்திரா; அவளை என் ஆசைக்குரிய வளாக்கிவிடு; உன் எளிய வேஷத்தை எல்லாம் கலைத்து விடுகிறேன், என்றார்.

இன்ஸ்: அதற்கு அவரிடத்தில் நீங்கள் கொடுத்த பதில் என்ன ?

காந்தா: இந்திராவைக் கேட்டுச் சந்தோஷமான பதில் சொல்லுகிறேன், என்று சொன்னேன்.

இன்ஸ்: பணம் வாங்கியதுண்டா, இதற்காக அவரிடத்தில் ?

காந்தா: இல்லை.

இன்ஸ்: சரி. அப்படி இருங்கள். 250 ! தனவந்தரை அழைத்து வா.

(சிப்பாய் வெளியேபோய் திரும்பி வந்து)

250: தனவந்தர் வரவில்லை சார்.

இன்ஸ்: போலீஸ் அழைப்பைக்கூட கேலி செய்துவிட்டான். இனி மேலிடத்தில் லஞ்சத்தைக் கொடுத்து, அவர்கள் காலைப் பிடிப்பான் தப்பிக் கொள்வதற்கு. பணமிருக்கிறது அவனிடம் ! அதை அள்ளிவிட்டால் நீதியெல்லாம் ஜோதியில் மறையும்; சட்டமெல்லாம் பட்டமாய்ப் பறக்கும்!

(இன்ஸ்பெக்டர், மேஜைமீதிருந்த டெலிபோனில் மணியடித்தல். காதில் டெலிபோனை வைத்து)

இன்ஸ்: யார் அது? கலெக்டரா? வந்தனம் சார்...இம்... (ஆச்சர்யமாக) என்ன? சரி.... சரி!

டெலிபோனை மாட்டிவிட்டு, விசாரணைக்கு வந்தவர்களிடம்).

இன்ஸ்: எல்லோரும் போகலாம்.

(எல்லோரும் போய்விடுகிறார்கள். இன்ஸ்பெக்டர் யோசனையில், தனியாக)

இன்ஸ்: அடுத்த உத்தரவு கிடைக்கும்வரை நடைபெறும் விசாரணைக்குத் தடைவிதித்திருக்கிறார், கலெக்டர். நல்ல நிர்வாகம்! சல்லித்தனமான இந்த உத்தியோகம் சரிந்து சாம்பலாகட்டும். தெரிந்ததுதான் இது. ஆனால், நெறியுள்ளவன் போலீஸ் நிர்வாகத்திற்கு பொருத்தமில்லை என்பதை இந்த நியதிமுறைத் திரைப்படம் காட்டுவதுபோலிருக்கிறது.

திரை 7.

இடம்: **இந்திரா வீடு.** நேரம்: **மாலை**

(இந்திரா நாற்காலியில் சாய்ந்து, திருஷ்டியைக் கரசை நினைத்து)

இந்திரா: ஆண்மையின் தேக்கம்! தீண்டா விளக்காய் இருந்த என்னை புதுக்காதல்தீ மூட்டிவிட்டக் கட்டழகன்! ஞானக் கொத்தளத்தின் ஏணி! மலை குலைந்தாலும் நிலை குலையாத வைர வடிவு! ஏன் இப்படிச் சொன்னுலென்ன? அன்பு சாற்றில் நல்லொழுக்கம், முதிர் கல்வித் தன்னைச் சாய்த்து, இன்பமெனும் வெய்யலிலே இறுக வைத்து, அதில் பண்ணினதோர் உருவமென்

ரூல்? ஆம்!

பாட்டு

இந்திரா: மாமா! (மாமாவை அழைக்க, வருகிறார்) மாமா! என்னை ஆளவரும் ஆணழகன் தோளழகைக் காண்பதெப்போ?

மாமா: போதும், போதும் உன் புளகாங்கிதம்! உன் தாய் கண்டால் நாய்போல் விழுவாளே!

இந்திரா: பேயைத் தாயென்று சொல்லாதீர்கள். ஞமலி அறியுமா ஞானவீட்டை? வெந்தப் புண்ணை வேல் அறியாது! என்னைக் காமத்தூணுக்கி கண்டவனையும் சாமத்தில் கட்டிப் புரளவிட்டு, தன் வாழ்வில் க்ஷேமம் காணத் துடிக்கும் துரோகி அவள். அவளைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலையில்லை எனக்கு. என் எதிர்கால வாழ்க்கைக்கு நானே வழிகோலிக் கொள்ளுகிறேன். நீங்கள் போய் தித்திக்கும் கனி, வெற்றிலைப் பாக்கு முதலியவைகளைத் தயார் செய்யுங்கள். குளிர்ந்த பானமுங்கூட. வரும் நேரமாகிவிட்டது, போங்கள் மாமா!

(மாமா போய் திரும்பி வந்து)

மாமா: மறந்துவிட்டேன் ஒரு சிறந்த சாமானை! அவர் சிகரெட்டு புகைப்பாரே, அதில் இரண்டு வாங்கி வரலாமா, என்று கேட்க வந்தேன்.

இந்திரா: விளையாடாதீர்கள் மாமா! போங்கள் சீக்கிரம்; அவர் வந்துவிடுவார்.

(மாமா போய்விடுகிறார். இந்திரா குதூகலத்துடன் முணுமுணுத்துப் பாடிக்கொண்டே மேஜை நாற்காலிகளை அலங்கரிக்கிறாள். திருநாவு வருகிறான். இந்திரா, வெட்கத்துடன் மெலிந்த குரலில்)

இந்திரா: வாருங்கள்; உட்காருங்கள்.

(அமர்கிறான். இந்திரா உள்ளே ஓடி பழத்தட்டைக் கொண்டுவந்து, நாணத்துடன் கொடுக்கிறாள்.)

இந்திரா: அருந்துங்கள்!

(திருநாவு ஒரு கனியைக் கையிலெடுத்து)

திருநாவு: உன்னிருக் கன்னக் கதுப்புகளே எண்ணித் தவமிருந்த எனக்கு இந்தக்கனிகள் தானே கைம்மாறு?

இந்திரா: கிளிகள் பார்த்துக் கொத்திவிடாதபடி காப்பாற்றி வைத்திருந்தக்கனியை, அக்கிளியே பார்த்தபின் விட்டு வைக்குமா? அந்தக் கிளிக்குத்தானே இது சொந்தம்?

திருநாவு: சந்தேகமில்லாமல்!

இந்திரா: கனியை அருந்துங்கள்!

(திருநாவு, தன் கையில் எடுத்தக் கனியையும் இந்திராவின் கன்னங்களையும் பார்க்கிறான்)

திருநாவு: உன் கன்னங்களின் பொன்னிறந்தான் இக்கனிகளே அலங்கரிக்கிறது, இந்திரா!

இந்திரா: ஏன்? என் முகத்திலிருந்த அழகைப்பருகித் தான் முழுமதிகூடப் பிரகாசிக்கிறது என்பீர்கள்! எனென்றால், உங்கள் கண்களுக்கு நான் உணவாக இருக்கிறேன், அல்லவா?

திருநாவு: உயிருக்கும் உணவு, இந்திரா!

இந்திரா: கனியை அருந்துங்கள்!

(திருநாவு கனியைப் புசித்துக்கொண்டு)

திருநாவு: இந்திரா! இன்பத்தின் ஒத்திக்கை!! ஆஹா!

(இந்திரா உள்ளே ஓடி குளிர்ந்த பானம் எடுத்து வந்துக் கொடுத்து)

இந்திரா: குளிர்ந்த பானம்! அருந்துங்கள்,

(திருநாவு அதை வாங்கிக் கையிலேந்தி)

திருநாவு: கடலிடை, அமுதம் பிறக்குமுன் பிறந்த அமுதோ இது?

இந்திரா: யாழிடை, இசை பிறக்குமுன் பிறந்த இசையாகக் கூட இருக்கும்! கொடுப்பது இந்திரா அல்லவா? அருந்துங்கள்.

(திருநாவு கொஞ்சம் சாப்பிட்ட பின்)

திருநாவு: தேன் கசியும் பழச்சுவையும், வான் உதிர்க்கும் பனித்துண்டும், மலரினத்தின் மணமனைத்தும் மண்டித் திகழ்கின்றதே இப் பானத்தில்! உன் கையிலிருந்து ஏறிய சுவையோ?

இந்திரா: எட்டிக்காயும் இனிக்கும், செந்தீயும் பனிக்கட்டியாகும், அதில் காதல் சுவை மோதி நின்றால்!

திருநாவு: ஆம் இந்திரா! ஆம்!! உணர்கிறேன்.

இந்திரா: மாமா! மாமா!! வெற்றிலை எங்கே?

(உள்ளிருந்தபடியே மாமா)

மாமா: இதோ கொண்டுவந்துவிட்டேன்.

திருநாவு: ஏன் இப்பொழுது மாமாவை அழைக்கிறாய்?

(வெற்றிலைத்தட்டுடன்வந்த மாமா, இதைக்காதில் வாங்கிக்கொண்டு)

மாமா: களிப்பு ஏற்பட்ட உடன் மாமாமேல் புளிப்பு ஏற்பட்டுவிட்டதோ? காலம் பண்ணும் கோலம்!

இந்திரா: யாரும் உங்கள்மேல் வெறுப்புக்கொள்ளமாட்டார்கள் மாமா. வெற்றிலையை வைத்துவிட்டு, நீங்கள் போங்கள்.

(மாமா பார்த்துக்கொண்டே போகிறார். இந்திரா திருநாவிற்கு வெற்றிலை மடித்துக்கொடுக்க, திருநாவு போட்டுக்கொண்டு)

திருநாவு: சுவைக்கொரு வரம்பில்லையோ உன் கரம் அளாவியப் பொருள்களுக்கு?

இந்திரா: மனம் வரம்பு மீறும் நோமல்லவா இது?

திருநாவு: ஆம்! நீ உட்கார் முதலில்.

இந்திரா: எனக்கு அவசரமில்லை. இதோ வருகிறேன்.

(உள்ளே ஓடி விசிறியுடன் வந்து திருநாவிற்கு வீசுகிறாள். திருநாவு விசிறியைப் பிடுங்கி)

திருநாவு: போதும்! தீஞ்சுவையில் தேன் வார்ப்பதுபோல, உன் புன்னகையில் என் உள்ளம் பின்னிக்கிடக்கும்பொழுது, காற்று ஏன்? நீ உட்கார்.

(திருநாவு எழுந்து, இந்திராவை உட்காரவைத்து கனியை எடுத்துக் கொடுக்கிறான். கனியைக் கையில் வாங்கி, அதைப்பார்த்து)

இந்திரா: என்னிரு கன்னங்களின் பொன்னிறத்தை உனக்களித்தபின், உண்ணையே புசித்தால் ருசிக்குமா? என்ன செய்வது? புசிக்கிறேன், உன்னை எனக்களித்தவரின் உள்ளத்தை!

(கனியைக் கொஞ்சம் புசிக்கிறாள். திருநாவு குளிர்ந்த பானத்தை இந்திராவிடம் கொடுத்து)

திருநாவு: இதையும் சேர்த்து உட்கொள் இந்திரா!

இந்திரா: அன்பில் குளித்திருக்கும் எனக்கு, இவைகளெல்லாம் ஏன்?

திருநாவு: பருகித்தானுகவேண்டும்.

(இந்திரா குளிர்ந்த பானத்தை சாப்பிட்டு)

இந்திரா: ஆகா! நான் கலவாத சுவையெல்லாம் இதில் மிளிர்கிறதே? தொட்டதெல்லாம் தேன்மாரி.

திருநாவு: ஏளனம் செய்கிறாய்!

இந்திரா: இந்த நிலையில், ஏளனம்புரிவது ஒரு கலையமுதம் போலில்லைத் தங்களுக்கு?

திருநாவு: ஆம்! காதல் கலையின் அலைகள்தானே, பாதையனைத்திலும் பண்பைக் குவித்தன!

(திருநாவு வெற்றிலையை மடித்து இந்திராவிற் குக் கொடுக்கிறான்)

இந்திரா: எனக்குப் பழக்கமில்லை.

திருநாவு: இயற்கையாகவே மணங்கமழும் உன் குவளைவா யிக்கு, வேறு மணம் தேவையில்லைதான்! சரி. மரியாதை செய்தவருக்கு பதில் மரியாதை செய் வதுதானே, அழகும், அறமும்?

(திருநாவு விசிறியை எடுத்து இந்திராவிற்கு வீசுகிறான். இந்திரா விசிறியைப் பிடுங்கி)

இந்திரா: இது என்ன விளையாட்டு?

திருநாவு: ஏளனத்தில் கலையைக்கண்ட நீ, விளையாடுவதில் கலையைக்காண ஏன் தவறுகிறாய்?

(இந்திரா எழுந்து அவனிடம்)

இந்திரா: நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் வரவில்லை இங்கு.

(திருநாவு கைக் கடிகாரத்தைப் பார்த்து)

திருநாவு: இல்லை. குறிப்பிட்ட நேரத்தில்தான் வந்திருக் கிறேன்.

(இந்திரா தனியாக வந்து)

இந்திரா: எனக்கு ஒன்றுமே புரியவில்லை! அவரிடம் எப் படிக் கூச்சமற்றுப் பேசுவது? வெட்கம் உயி ரைக் கொல்லுகிறது! (யோசித்து)

(திருநாவிடம் வந்து)

இந்திரா: என்னுடைய கடிதம் மாமாவின் மூலமாகத் தங் களுக்குக் கிடைத்திருக்குமே!

திருநாவு: ஆம்! அது என் உயிருக்கு உணவாகிவிட்டது. அந்த மயக்கத்தால் எழுதிய கடிதம் உன் கயல் விழிக்குக் காட்சியளித்திருக்குமே?

இந்திரா: அளித்தது! அந்தத் தெள்ளுதமிழ் என் உள் ளக் கோவிலில் ஊடுருவிவிட்டது.

திருநாவு: இந்திரா! இன்றுதான் என் வாழ்க்கையின் மாளிகை வானளாவ எழுகிறது. பேரின்ப வீட்டிற்கு இராணுவ நடைபோடும் பேற்றை அளித்துவிட்டாய்! இன்பக்கோட்டை இருவருக்கும் திறந்திருக்கிறது. வா, கண்ணே!

(திருநாவு, கட்டித்தழுவுகிறான் இந்திராவை)

இந்திரா: அன்பே! ஒடி ஆடி விளையாடிக் கொண்டிருந்த நான்; வாழ்க்கை ரதத்தின் போக்கை அறியாதவள். அன்புச் சுழலின் ஆர்வத்தில் உங்களைக் கதியென நம்புகிறேன். ஆதரியுங்கள்.

(திருநாவின்மேல் இந்திரா மெய்மறந்து சாய்ந்து விடுகிறாள். அச்சமயம் இந்திராவின் தாய் காந்தா இக்காட்சியை நேரில் காண்கிறாள், காந்தா வயற்றில் அடித்துக்கொள்கிறாள். திடுக்கிட்டு இருவரும் நகர்கிறார்கள்)

காந்தா: ஐயையோ! இது என்னடி அலங்கோலம்? என் வயற்றில் மண்ணைச் சரித்தாயே, பாவிச்சிறுக்கி! அந்தப் பயல் எந்த ஊரடி?

இந்திரா: அவரை ஒன்றும் பேசாதே! (திருநாவைப் பார்த்து) அன்பே! பூனைத் தன் குட்டியைக் கடிப்பதால், அது எலியின் கதி அடைவதில்லை! என்னுடைய தாய் உங்களுக்கும் தாய்தானே! அவள் வசைவு நம்மை அசைத்துவிடாது. நாளை மாலை கண்டிப்பாக வரவேண்டும் நீங்கள்.

(திருநாவு சோகத்தோடு பிரிகிறான். இந்திரா அவனைப்பார்த்து)

இந்திரா: உங்கள் பிரேமை மீது ஆணையாகச் சொல்லுகிறேன். வரவில்லையானால் உயிர்வாழ மாட்டேன்.

(திருநாவு போய்விடுகிறான். காந்தா, இந்திராவிடம்)

காந்தா: என்னடி பசப்புகிறாய் அவனிடம்? தன் சொத்தையெல்லாம் உன் காலில்வைத்து மாலையாய்ப்

போடுகிறேன் என்ற மகானுபாவனே மறுத்து விட்டு, தெருவில் திரிபவனிடத்திலெல்லாம் சல்லாபம்! சல்லாபம் பண்ணுகிறாயோ, மூளி? அந்த வரண்டக் கழுதை யாரடி?

இந்திரா: மன்னா, வாழ்விலும் தாழ்விலும் வைத்துப் படைக்கப் பிறந்த உத்தமன்.

காந்தா: அடடா! உத்தமன்!! குச்சி ஊன்றும் கிழவி பொரி மாவை மெச்சி மகிழ்வதைப்போல, உத்தமன்! இந்த உத்தமனிடம் போனால்மட்டும் உன் பத்தினித்தனம் பறக்காதோ? தலைகாய்ந்த பயல் ஒரு உத்தமன்; நிலைசாய்ந்த சிறுக்கி ஒரு உத்தமி! எண்டி கற்பரசி, சொல்லேண்டி?

இந்திரா: நிலையாக ஒருவனே மணப்பது இந்நாட்டின் தலையாய பண்பு என்பது, மானத்தை விலையாகக் கூறும் உங்களுக் கெப்படிப் புரியும்? உங்கள் வாக்கத்திற்குத்தான் சோர்க்கமாயிற்றே விபசாரம். இன்றைக்கொருவன்; நன்றாக இருந்தால் நாளைக்கொருவன்; உடுப்பு மாற்றுவதுபோல! நாட்டின் நாகரீகத்தை வேட்டையாடும் ஓநாய்கள்; பயிரை அழிக்கும் கோரைகள், நீங்கள்!

காந்தா: என்னடி பஞ்சாங்கம் படிக்கிறாய்! பொருளைக் கொடுத்து இருளைத் துடைப்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் விரும்பிடிப்பது நம் ஜாதிக்கு இயல்புதானே? நான் சொல்வதை மரியாதையாய்க் கேள். இல்லையானால் நீ படுவது வேறு, மூண்டை!

இந்திரா: சண்டைக்கிழுக்காதீர்கள் அம்மா! செல்வத்திற்காக எதையும் செய்வேன் என்பது இச் சென்மத்திலில்லை! இணையற்ற இன்ப வாழ்வை, பணத்திற்காக பணயம் வைப்பது என்னால் முடியாது; மானத்திற்குப் பேரம் பேசும் ஈனச் செய்கையை ஒப்பமாட்டேன். மன்னவன் தவறிழைத்தான்

என்றதும் புரட்சிக்கோலம் பூண்டு, மறத்தைக் கொன்று அறத்தை வென்றப் போர்க்களப் புதல்வி கண்ணகி பிறந்த நாட்டில், நீங்கள் எப்படிப் பிறந்தீர்கள்? அழியாத் தமிழ்கண்ட ஔவையின் பரம்பரையில்; வாழ்க்கை நெறி வகுத்த வள்ளுவன் மரபில், நீங்கள் எப்படிப் பிறவி எடுத்தீர்கள்? அறிவை நிலையத்தில் கரையான் புகுந்ததுபோல! உங்களோடமட்டில் குறை கூறி என்ன பயன்? அறவழி பேசிவிட்டு, அறையினுள் விபசாரம் புரியும் அரக்கர்கள் பலர் வீதியில் அலையும்பொழுது, உங்களுக்கேன் ஆணவம் பிறக்காது?

(மாமா மெதுவாக இக்கோலத்தைப் பார்க்கிறார்)

காந்தா: பெரிய பதிவிரதைதாண்டி நீ! வாய்த் துளிர்த்து விட்டது. இரு, இரு. (மாமாவைப் பார்த்து) ஏய்! நீயும் இதற்கு உடந்தைதானே?

மாமா: எதற்கு?

காந்தா: உனக்கு ஒன்றும் தெரியாது, பாவம்! எவனோ ஒரு பொறுக்கி; நாற்ற மீனைப் பூனை கோட்டமிடுவது போல, இங்கே வட்டமிடுகிறானே, அவனை உனக்குத் தெரியாது?

மாமா: என்னடி காந்தா, நம்பமாட்டேன் என்று வம்பு செய்கிறாய்? எனக்குத் தெரியவே தெரியாது.

காந்தா: உனக்குத் தெரியாது? சரி. நீ ஒரு கணங்கூட என் வீட்டில் இனி தலைக்காட்டக்கூடாது. போ வெளியே!

(மாமா திடுக்கிட்டு, சாந்தமாய்)

மாமா: காந்தா! எப்பொழுதும் விளையாட்டுதான் உன்னிடத்தில்.

காந்தா: சுளைபோல் இருக்கிறயல்லவா, மன்மதக்குஞ்சு மாதிரி; அதனால் விளையாடுகிறேன் உன்னிடத்தில்! போடா வெளியே!

மாமா: வார்த்தையெல்லாம் தடித்தனமாய் வருகிறதே?

காந்தா: இனி இருந்தால் மரியாதைக் குறையும்!

(மாமா கோபமாய் பேசுகிறார்)

மாமா: தேவடியாள் சிறுக்கியல்லவா? எவ்வளவு செய்தோம். மாசி வீதியில் உட்கார்ந்து, வாசலில் ஈ ஓட்டிக்கொண்டிருந்த உன்னை, கழுவிக் குளிப்பாட்டிக் கடைத்தேற்றியதற்கு, இதுதாண்டி கைக்கண்ட பலன்? பெரிய குடும்பத்தில் பிறந்தவள், நிறைந்த அழகுடையவள் என்று பறை சாற்றி, ஆயிரம்பேர்வந்து போகும்படி ஆளாக்கினேனே, அதற்கு இதுதாண்டி கைம்மாறு? எல்லாவற்றையும் எப்படிமறந்தாள் தப்பிலிச்சிறுக்கி?

காந்தா: ஏய்! வீண் பேச்சுவேண்டாம், மூச்சுவிடக் கூடாது இங்கே! போடா வெளியே! நாடோடி நாயே!

மாமா: காட்டுச் சிறுக்கி! கழுதை மாதிரி ஏன் கத்துகிறாய்? உன் வீட்டில் எந்த நாய் இருக்குமினி?

(இந்திராவைப்பார்த்துத் துக்கத்துடன்)

மாமா: இந்திரா! நான் போகிறேன். அவளுக்கு உன்னை வைத்துப்படைக்கத் தெரியாது. புத்தி சாலித்தனமாய் இரு. உனக்குத் தெரியாததற்கு நான் என்ன புரியவைக்கப் போகிறேன்.

(காந்தாவைப் பார்த்து ஆத்திரமாய்)

மாமா: இந்த வாழ்வு எங்கிருந்து சூழ்ந்ததடி உனக்கு? நான் போய்விட்டால், நக்கவேண்டும் அறங்கையையும், புறங்கையையும். மாவிடித்துக் கொண்டிருப்பதெல்லாம் இந்த மாமாவால்தான். உங்கள் குலப்புத்தி நிலைப்படுமா? உன் வீட்டில் இனி பழைய சோறு பலம் பதினைந்து ரூபாயடி, இந்த மாமா போய்விட்டால்! மூதேவி முண்டை!!

(போகும் மாமாவை, இந்திரா சமிக்ஞையால் அழைத்து அவர் காதில் ரகசியமாய் ஏதோ சொல்லி அனுப்புகிறாள்)

மாமா: அதெல்லாம் எனக்கும் தெரியும். இவள் கிடக்கிறாள் கிழக்குடுக்கை!

காந்தா: என்னை ஒன்றும் பண்ணிவிடாதடி இந்தக் கண்கட்டு வித்தையெல்லாம். இரு சிறுக்கி, பொறுக்க விடுகிறேன் தெருவில்!

திரை 8.

இடம்: **சௌரிராஜன் வீடு.** நேரம்: **மாலை**

(சௌரிராஜன், அவன் குழு எல்லோருமிருக்கிறார்கள். ஜீவரத்தினம் நடனமாடுகிறாள்)

பாட்டு

(நடனமாடி முடிந்ததும் சௌரிராஜன் ஜீவாவிடம்)

சௌரி: ஜீவா! பாட்டில் துன்பத்தை ஒட்டினாய்; நாட்டியத்தில் இன்பத்தைக் கூட்டிவைக்கிறாய். ஆஹா ஹா! சொக்கு! ஜீவாவின் நாட்டியம் எப்படி?

சோக்கு: ஊர்வசிதான்!

சௌரி: பொய்யால் கெட்ட மூதேவி! ஊர்வசியைப் பார்த்ததுபோல் பேசுகிறான்.

(ஜீவா, சௌரிராஜனை நோக்கி)

ஜீவா: அன்பே! பொழுது போகிறது; விளக்கேற்ற வேண்டும். வீட்டிற்குப் போகிறேன்.

சௌரி: வடிகட்டியக் குடும்பப் பெண்ணாகிவிட்டாய்!

ஜீவா: தேவடியாளாகப் பிறந்தால் அவளுக்குக் குடும்பமில்லையென்ற பொருள்?

சௌரி: அப்படித்தானே நூற்றுக்கு நூறு. நீ தவறிப் பிறந்தவள். சரி; இன்றைக்கு நடந்ததுபோல

வாராவாரம், இங்கே பொழுதுபோக்கிற்காக ஒரு விருந்து நடக்கும். அதற்கு தவறாமல் நீயும் வந்தாகவேண்டும்.

ஜீவா: தடையின்றி வருகிறேன். நீங்கள் அளிக்கும் விருந்தை அதிகம் உட்கொண்டால்...

சௌரி: சரிமானம் இல்லாமல் வயிறு உப்பிவிடுமோ?

ஜீவா: ஆம்! நான் அளிக்கும் விருந்தை, நீங்கள் எவ்வளவு அள்ளி அள்ளிப் பருகினாலும் உடலை வளர்க்கும்.

சௌரி: அமுத ஊற்றோ?

ஜீவா: ஆம்! செவிக்குணவு. நீங்கள் கொடுப்பது வயிற்றுக்கு உணவு. அதை அளவோடுதானே புசிக்க வேண்டும்? நேரமாகிறது நான் வருகிறேன். நீங்கள் இரவு வீட்டிற்கு வந்துவிடவேண்டும்.

சௌரி: கட்டாயம் வருகிறேன்.

(ஜீவா போய்விடுகிறான். சௌரி, சொக்கைப் பார்த்து)

சௌரி: ஜீவாவின் அழகு எப்படி?

சொக்கு: ரதிதான்!

சௌரி: ஏய்! பார்க்காத ஒன்றைப்பற்றி உதாரணங் கூறுவதை இன்றோடு நிறுத்திவிடு. நாட்டியம் எப்படி என்றேன்; ஊர்வசி என்கிறாய். அழகு எப்படி என்கிறேன்; ரதி என்கிறாய். இந்த இருவரில் யாரையாவது ஒருத்தியைப் பார்த்திருக்கிறாயா நீ?

சொக்கு: நான்மட்டிலா சொல்லுகிறேன். ஊரே சொல்லுகிறதே!

சௌரி: ஊர் சொல்லுகிறதோ? பெண்கள் அழகாலும், ரதி! ஆண்கள் அழகாலும், மதன்! கிடசரவி

யாலும், பீமன்! பொய் சொல்லாதவனானால், அரிச்சந்திரன்! என்னடா உவமை? எட்டில் படித்ததை நாட்டில்கடைவிரிக்கிறான், மடையன். அழகைப்பற்றி, பலத்தைப்பற்றி, மெய்யைப் பற்றிக் கற்பனைச் செய்யக் கையாலாகாதவன் சொல்லுகின்ற உவமைகளை, இங்கே கட்ட விழ்த்து விடுகிறாய்! சரியான உவமை சொல்லத் தெரியாவிட்டால், மூடு வாயை.

சொக்கு: ஏன் தெரியாது; சொல்லட்டுமா?

சௌரி: சொல் பார்ப்போம்.

சொக்கு: மின்னலைப் பிடித்து அதில் பண்ணிய பேசுஞ் சிலையவள். பொருத்தந்தானே?

சௌரி: ரத்தினச்சுருக்கம்! பேஷ்; இவ்வளவு பெரிய கற்பனையை வைத்துக்கொண்டு, கண்ணால்பார்க்காத ஒன்றைப்பற்றி புளுகிவிடுகிறாயே!

சொக்கு: இருக்கட்டும். இத்தகைய அழகியைப்பெற்ற நீங்கள், ஏன் மீண்டும் விபசாரம் செய்ய அலைகிறீர்கள்?

சௌரி: நான்மட்டிலுமா? விபசாரம் இந்த உலக நிலச்சுவான்தார்களின்; பணக்காரர்களின் சொத்து! நாட்டில் விபசாரம் துளிர்விட்டு இருந்ததினால் தான், கற்பு என்ற ஒன்றைக் கண்டார்கள். விபசாரந்தான் உலகம் தோன்றியபோது தோன்றியது. கற்பு, பொற்பு எல்லாம் இடைக்காலத்தில்; வளர்ச்சிபெற்ற காலத்தில் கண்டது. விபசாரத்தை நான் வளர்க்கிறேன் என்கிறாயே, இதோ பார்; ஒரு சிறு கதை. "சுதர்சனுக்கு ஓகவதி என்றொரு மனைவி. இன்பமான தம்பதிகள். யார் வந்து எது கேட்டாலும் கொடுக்க வேண்டும் என்று சுதர்சன் தன் மனைவி ஓகவதிக்குச் சொல்லியிருந்தான். கணவன் இல்லாத சமயம். ஒரு அகதிவந்து அவளையே கேட்டான்;

இசைந்தாள்! இச்சையைத் தணித்துக்கொண்டு போய்விட்டான். கணவனிடம் இதைச் சொல்லுகிறாள். அவன், அளவிலாமகிழ்ச்சியடைந்தான்." மனைவி விபசாரம் செய்தது, கணவனுக்கு அறமாகத் தெரிந்தது. ஏன்? எப்படியாவது, மக்கள் அதிகரிக்க வேண்டும் என்பதற்கு! இது மகாபாரதம்; தெரிந்ததா?

சொக்கு: கோடானுகோடிமக்களாகி, வளர்ந்த இந்நாட்டில் ஏன் விபசாரம் செய்கிறீர்கள்?

சௌரி: தொத்துநோய்! அனுபவித்து, அனுபவித்து ஆசைத் தணியாது அரைகுறையாய்ச் விட்டுச் சென்றவர்களின், விட்டகுறைத் தொட்டகுறையல்லவா நாங்கள்?

சொக்கு: சரியான பிரசங்கியாகிவிட்டாய்! அது தொலையட்டும். இந்திராவிற்காக தாங்கள் செலவு செய்தபணமத்தனையும் வீணாகத்தானேபோனது?

மாயா: நம் சௌரிராஜனை, வடிவேலு அடியோடு ஏமாற்றுகிறான். இந்திராவைச் சேர்த்து வைப்பதாகச் சௌரியிடம் கைப்பணம் வாங்கிவிட்டான். இவனை நம்பினால் எங்கேயாவது கம்பி நீட்ட வேண்டியதுதான்!

சொக்கு: வடிவேலுதானே! பரவாயில்லை. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானத்தைக் கிழித்து வைகுந்தத்தைக் காட்டப்போகிறானா? தோட்டக்காரி, முனியம்மாள் மகளையே இவனால் கொண்டுவர முடியவில்லையே!

வடிவேலு: இந்த வடிவேலுவின் திறமையை முடிவில் பாருங்களேன்!

சொக்கு: அடி வாங்கும்போதுதானே?

சௌரி: சூ...! குடியைக் கெடுத்துவிடுவேன், அடித்தால்!

வடிவேலு: அப்படிச் சொல்லுங்கள் முப்பது தடவை.

சௌரி: என் பணமெல்லாம் பாழானாலும் சரி, துடி இடையாளை மட்டும் அடையாமல் விடமாட்டேன். வடிவேலு! போய் காந்தாவை அழைத்து வா, சீக்கிரம்!

(வடிவேலு காந்தாவை அழைக்கப்போகிறான். மற்றவர்களிடம் சௌரிராஜன்)

மாயாண்டி! சர்க்கரை விலையெல்லாம் வக்கரிக்கும் போலிருக்கிறது. கட்டுக்கடையிலிருந்தால் நஷ்டமாகிவிடும். நம்மிடம் எத்தனை மூட்டைகள் இருக்கின்றன?

மாயாண்: எழுநூறு மூட்டைகள் இருக்கின்றன. நஷ்டப் படுமென்று எந்த மூட்டாள் சொன்னான்? பத்திரிகைகளெல்லாம் சர்க்கரைப் பஞ்சமென்று கத்தித் தொலைக்கிறது. சர்க்கரை விலை வக்கரிக்கிறதாம்! இன்னும் எத்தனை மூட்டைகளிருந்தால் வாங்கிப் பதுக்கினாலும், அத்தனையும் பவுன், சௌரிராஜன்.

சௌரி: எள்ளு மூட்டைகளில் கொள்ளை லாபமடிக்கலாம். பருப்பு மூட்டைகள் இருக்கின்றனவா? கொள் முதல் செய்வது நல்ல சரக்காகவும், மலிவாகவு மிருக்கட்டும். தெரிந்ததா?

மாயாண்: உணவிலாக்கா அதிகாரி என்னைப் பிணமென நினைக்கிறான். நான் சரக்குக் கொள்முதல் செய்யும் இடங்களிலெல்லாம் விருவிருப்பாக விசாரிக்கிறான். இந்த செய்தி முக்கிய இடத்திலிருந்து எனக்கு வந்தது.

சௌரி: திருடர்கள் அடுப்பங்கரையில் பிளவு? செய்தி இங்கிருந்துதான் போயிருக்கவேண்டும். உணவு இலாக்கா அதிகாரி, சொன்ன ஆளைச் சொல்ல மறுக்கிறான். இருப்பினும் ரூபாய் ஐயாயிரம்

வரைத் தொலைத்து வந்திருக்கிறேன். இனி உன்னைப் பின் தொடரமாட்டான். பயப்படாதே, போ.

(மாயாண்டி போகிறான். வடிவேலு காந்தாவை அழைத்து வருகிறான். செளரி காந்தாவிடம்)

செளரி: காந்தா! எதற்காக உன்னை அழைத்து வந்திருக்கிறேன், தெரியுமா?

காந்தா: தெரிந்துதான் வந்திருக்கிறேன்.

செளரி: நாளைக்கு நல்ல நாள்; இந்திரா என் பக்கத்தில் வந்தாகவேண்டும். இல்லையானால்!...

காந்தா: சொல்வது புரிகிறது.

செளரி: புரிவது தெரிகிறது! இனி நடப்பதே வேறு.

காந்தா: ஊரைவிட்டே ஓடவேண்டுமென்றுத் தெரியும்.

செளரி: சரியாகச் சொன்னாய்! பைப்பணத்தை வாங்கிக் கொண்டு, பொய்ப் பாய்ச்சல் காட்டிவிடலாம் என்று நினைக்காதே.

காந்தா: அய்யோ! நான் அவளுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அந்தத் தோசிப்பயல் திருநாவுக்கரசிடம் நேசம் வைத்துக்கொண்டு, என்னைக் கண்டவாறு பேசுகிறாள். அவனை அங்கு வராமல் செய்துவிட்டால், உங்களுக்குத்தான் இந்திரா.

செளரி: சந்தோஷம்! திருநாவு அங்கு வராவிட்டால் காரியம் முடியுமா?

காந்தா: படியவைத்துவிடுகிறேன்உங்களுக்கு; போதுமா?

செளரி: சொக்கு! மேஜை டிராயரில் மயக்க மருந்திருக்கிறது, கொண்டுவா.

(சொக்கு மேஜையைத்திறந்து சிறு பாட்டிலில் உள்ளதை எடுத்துக்கொண்டுவந்து கொடுக்கிறான். அதைக் காந்தாவிடம் செளரி கொடுத்து)

சௌரி: அவனறியாமல், அவன் அருந்தும் ஆகாரத்தில் இந்த மருந்தைக் கொட்டிவிடு. இறந்துவிட மாட்டான். உடனே எனக்கு ஆள் அனுப்பு. போ. (போகிறாள்) காந்தா! இங்கு வா. (வருகிறாள்) இச்சைமிகுதியால் என் மோகத்தைத் தீர்ப்பதெனக் கச்சைக்கட்டிவிட்டேன். நிச்சயமாக நீதான் பச்சை விளக்கு காட்ட வேண்டும், நான் இன்பமனுபவிக்க. என்னடா இப்படிச் சொல்லுகிறானே என்று நினைக்காதே. தபசி வேடம் போட்டுக்கொண்டிருந்தாள் மணிமேகலை. அப்படி இருந்தும் அந்நாட்டு மன்னன் அவளுடன் பின்னிக்கிடக்க ஆசைப்பட்டானு இல்லையா? நான்தான் இந்தநாட்டில் பெண்ணை விரும்புகிறேன் என்று எண்ணாதே. விரைவாக வேலையை முடி.

(காந்தா போகிறாள். மீண்டும் அழைக்கிறான்)

சௌரி: காந்தா! எங்கே ஓடுகிறாய்? வா இங்கே! இந்த சௌரிராஜன், மதுரகான வஞ்சியுடன் மனமோகன ராகமிசைத்து, மஞ்சமேற உன் வீட்டிற்கு நாளை மாலை வருவான், போ.

(பெட்டியிலிருந்து பணத்தை எடுத்துவந்து)

சௌரி: இந்தா! ஐந்நூறு ரூபாய். போ சீக்கிரம்.

(காந்தா மருந்துடன் போகிறாள். பின் சௌரியிடம் புது இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி வருகிறார். வரவேற்கிறான் சௌரிராஜன்)

சௌரி: அலோ மிஸ்டர் கிருஷ்ணசாமி! உட்காருங்கள்.

(சௌரிக்கு மரியாதை செலுத்திவிட்டு அமர்கிறான். கிருஷ்ணசாமி சௌரியிடம்)

கிருஷ்: தனவந்தரே! இந்த ஊரில் வேலை ஒப்புக்கொண்டவுடன், நேரில் உங்களைக்கண்டுகொள்ள வேண்டுமென்ற முதல் ஆக்ஞை எனக்கு.

செளரி: மிக்க மகிழ்ச்சி. இது யாருடைய...?

கிருஷ்: கலெக்டருடைய ஆக்ஞை! என்னைத் தெரியுமுன் என் பெயர் தெரிகிறதே தங்களுக்கு?

செளரி: இதைத் தெரிவித்ததும் அதே கலெக்டர்தான்.

(குளிர்ந்த பானத்தை ஒரு கிளாஸில் ஊற்றி) இன்ஸ்பெக்டருக்குத் தருகிறான், செளரி)

கிருஷ்: தடுத்திருப்பதைக் குடிப்பது...!

செளரி: அதுவல்ல இது! கூல் ட்ரிங்க். சாப்பிடுங்கள்.

(கிருஷ்ணசாமி குடித்துக்கொண்டே)

கிருஷ்: இதற்கு முன்னுள் இருந்த இன்ஸ்பெக்டர் எதனால் வேலை இழந்தார்?

செளரி: மூளை கெட்டு என் வேலையில் குறுக்கிட்டதினால்.

கிருஷ்: பொருளிருந்தால் எல்லா வசதியும்.....

செளரி: நிசமாகப் பெறலாம். உங்களுக்குப் போகப் போகத் தெரியும் என் விஷயம்.

கிருஷ்: என் வருகையில் தங்களுக்கு ஏதாவது நன்மை?

செளரி: உண்மையில் நல்லெண்ண மிருந்தால் செய்திக்கா பஞ்சம்?

கிருஷ்: கொஞ்சமும் பின்வாங்கமாட்டேன். சொல்லுங்கள் செய்கிறேன்.

செளரி: முதலில் நடக்கவேண்டியது, ஷண்முகநாதனைத் தான் உங்களுக்குத் தெரியும்; அண்மையில் போலீஸ் வேலையை இழந்தவனென்று. திருநாவுக்கரசு என்ற ஒருவனிருக்கிறான். இருவரையும் எப்படியாவது சிறைக்கு அனுப்பிவிடவேண்டும். (யோசித்து) ஆம்! ஒரு பொய் வழக்கு ஜோடித்துவிட்டால்...?

கிருஷ்: வேடிக்கைப் பார்க்கலாம்! அவ்வளவுதானே?

சௌரி: ஆம்! அவர்கள் கொஞ்சம் புரிந்தவர்கள். எஃகு வைப் பிளப்பதற்கு ஈயத்தால் வெட்டிரும்பு செய்துவிடாதீர்கள்! கெட்டிக்காரத்தனமிருக்கட்டும், உங்கள் வழக்கு ஜோடிப்பில்!

கிருஷ்: தபால்காரனுக்கு நடை பழகிக் கொடுக்கிறீர்கள்! போலீஸ்காரன், பொய்வழக்கு ஜோடிப்பது ஒரு தனிக்கலை!

சௌரி: முடித்துவிடுங்கள்! இதற்கு மத்தியில் நான் நினைத்த இந்திராவின்காரியமும் சித்தியாகிவிடும்.

கிருஷ்: திருட்டு வழக்கில் பொருத்திவிட்டால்?...

சௌரி: அது உங்கள் பொறுப்பு. (யோசித்து) இம்மாதிரி செய்வதற்கு, உங்களிடம் ஒரு வழக்கு வரும் வரை விழித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஜீவாத்தினம் என்று எனக்கொரு காதலி இருக்கிறாள். ஆவனவற்றை அவளிடம் முடித்துக் கொள்ளலாம்.

கிருஷ்: அந்தப் பெண் எங்கிருக்கிறாள்?

சௌரி: அடுத்தத் தெருவில்!

கிருஷ்: முடித்துக் கொடுப்பாளா, இம்மாதிரி காரியத்தை?

சௌரி: தாராளமாய் ஒப்புவாள். ஜீவாவிடம் உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். வழக்கு விழலாகக் கூடாது.

கிருஷ்: அழகாயிருக்கிறது! அவர்கள் நிழலைக் கண்டாலும் விடமாட்டேன், இனி.

சௌரி: சரி. இந்த வழக்கு சம்பந்தமாய் ஜீவாவிடம் கலந்துக்கொள்ளுங்கள்; நானும் சொல்லுகிறேன். ஏய் சொக்கு! இன்ஸ்பெக்டரை, நான் சொன்னதாக ஜீவாவிடம் அறிமுகப்படுத்திவிடு; அழைத்துக்கொண்டு போ.

கிருஷ்: நான் உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

(சௌரி, பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்து, இன்ஸ்பெக்டர் பாக்கெட்டில் சொருவி)

சௌரி: சரி. போய்வாருங்கள்.

(மரியாதை செலுத்திப் பிரிதல்)

திரை 9.

இடம்: **ஷண்முகநாதன் விடு.** நேரம்: **மாலை.**

(நாற்காலியில் அமர்ந்தவண்ணம் தன் நிலையை எண்ணுகிறான், ஷண்முகநாதன்)

ஷண்மு: தற்காலக் கல்லூரிப் படிப்புகள், பட்டத்தை வாரி வழங்கி உத்தியோக சந்தைக்கு நத்தித் திரியும், சொத்தை மனிதனுக்கு விடுகிறது. சுதந்திர நாட்டில் படிப்பவன். ஆனால், பயனற்றவன்! மணமுள்ள மாம்பழம், உள்ளே வண்டு! உத்தியோக வேட்டைக்குமட்டில் மனிதனைத் தீட்டும் கல்வி இருந்தென்ன; இறந்தென்ன? உயிரற்றக் கல்வி; கதியற்ற மனிதன்! பாடுபவன் ஊமை; கேட்பவன் செவிடன்! இதுதான் இன்றையக் கல்வி நிலை!

(இச்சமயம் திருநாவு வருகிறான், அவனை வரவேற்று)

ஷண்மு: வா, திருநாவு! உட்கார்.

திருநாவு: ஷண்முகம்! என்ன குரல் தழுதழுத்து, மங்கலாக இருக்கிறது.

ஷண்மு: ஆம்! நேற்று சொன்னதுதான். சீட்டுக்கிழித்து விட்டார்கள் என் உத்தியோகத்திற்கு!

திருநாவு: இது நேருமென்றுதான், என் வியாபார நிலையத்திற்கு நீ பொறுப்பாளி என்று, அன்றே கூறி

னேன். சௌரிராஜன் எத்தனையோ அரக்கத் தனங்களை செய்கிறான். அவனை விட்டு வைத் திருக்கிறார்கள். பணக்காரர்கள் புரியும் மறத் தன்மைகளுக்குக் குணவிசேஷம் கற்பித்து, அதற்குத் திரையிடுவதுதான் இன்றைய உலகப் போக்கு. பட்டப்பகலில் கொள்ளையடிக்கிறான், கள்ள மார்க்கெட் வியாபாரத்தில்! இது என்ன உலகம்?

ஷண்மு: நல்லவர்கள் இருக்கும் நாட்டில் பொல்லாதவர் களுந்தான் இருக்கிறார்கள். யாழின் இனிய தொனியைக் கேட்கும் காதுகள், கழுதையின் கத்துதலைக் கேட்கவில்லையா...?

திருநாவு: பசும் புல் தின்னும் கன்றுகள் மேயும் கழனியில், மலம் தின்னும் பன்றிகள் கூடத்தான் மேய்கின்றன ...!

ஷண்மு: அதுபோலத்தான்! இருக்கட்டும்; இந்திராவின் மேல் நீ கொண்டிருந்த பிரேமையை எந்த அளவில் வைத்திருக்கிறாய்?

திருநாவு: நித்தம் அவள் நினைவுதான். சிந்தனைச் சிற்பியால் செய்த சிலையல்லவா அவள்; மறக்க முடியுமா? திருமணம் செய்துக்கொள்வதென்று இருவரும் தீர்மானித்துவிட்டோம்.

ஷண்மு: இந்திராவைப்பற்றி நீ எண்ணும்பொழுதெல் லாம், கம்பனின், இளங்கோவனின், புகழேந்தி யின், காளிதாசனின் இன்னும் எண்ணற்றக் காதற் சிற்பத்தைச் செதுக்கித்தந்த கற்பனைக் கற்தச்சர்களான கவிஞர்களின் நினைவு உனக்குத் தோன்றத்தான் செய்கிறது. ஏன், தெரியுமா? அக் கவிஞர்களின் கற்பனை ரோட்டந்தான், மனித வர்க்க இதயக் கழனியில் பாய்ந்து, காதற் பயிரைப் பசுமையாக்கியது.

திருநாவு: உலகையே இயக்கும் காதலே கவிகளின் கற்பனை யென்றால்....!

ஷண்முக: யார்தான் நம்புவார்கள் என்கிறாயோ? கலைஞர் களின் திறமையான அடுக்கு மொழிகள்தான் காதல்! பெண்களே நினைத்தாலே அவளே, மிருதுவான இன்பக் கோயில் எனக் கருதுமாறு கவிகளின் கற்பனை ஓட்டம், ஆடவர்களின் உணர்ச்சிப் பொறியை அசைத்து விடுவதைப் பார்க்கிறாயா, இல்லையா?

திருநாவு: எது எப்படி இருப்பினும், இந்திரா என் மனைவி தான்!

ஷண்முக: என்றால், அவள் தாய் பெரும் பேயாக இருக்கிறாளே! எப்படியாவது தாசித் தொழிலில் இந்திராவை ஈடுபடுத்த யோசித்திருக்கிறாள்.

திருநாவு: அப்படியென்றால், இந்திரா என்ன ஜாதி?

ஷண்முக: இசை வேளாளர். தாசி மகள்.

(திருநாவு மறத்துவிடுகிறான். பின்பு பதறி)

திருநாவு: ஷண்முகம்! என் வாழ்க்கையின் அடி தளம் பொடியாகிறது! (யோசனை) மதி கெட்டுப்போய் விட்டேன். உரிமையை விற்று சிம்மாசனம் வாங்கிவிட்டேன்! தேவடியாளிடத்திலா காவடித் தூக்கினேன், காதலைப்பெற. காசு கொடுப்பவனிடத்திலெல்லாம் ஆசைமுகங்காட்டி, காசு வற்றியதும் அவனை நீசன் என்று திட்டியனுப்பும் வேசிமேலா காதல்?

(இந்தசமயம் "உச்சிமுதல் உள்ளங்கால்வரையுள்ள கச்சிதமான என் வடிவழகைக் காண்பீர்களானால் நான் பேற்றிற்குரியவள்தான்" என்றக் குரலைக் கேட்கிறான். தலையை பிய்த்துக்கொண்டு,)

திருநாவு: இல்லை! இல்லை!! நல்ல பாம்பு; சீறும் நாறு வெம்புலி! தேவடியாள் மகள் தேவடியாள்! விப

சாரத்திற்கென்றே இந்தப் பொறுப்பற்ற சமுதாய நிழலின் சோபையில், நறுமணம் தடவி வளர்க்கப்பட்டவள். மூர்க்கர்களிடம் பற்றி எரியும் போக்கற்ற உணர்ச்சியை அவிக்கின்ற சாக்கடை நீர்! கழுதையை உதைக்காமல் பழக்கிவிடலாம். விபசாரத்திலிருந்து தாசிகளை விடுவிப்பதென்பது பகற்கனவு. அறிவை விற்று, நீதி நூல் வாங்கிவிட்டேன்! இது என்ன சோதனை? இந்திரா! இதுகாறும் உன் புன்னகையில் பூரித்தேன்; அன்பை அள்ளிப் பருகினேன்! இப்பொழுது உன்னை இழந்துவிட்டேன்.

(இந்தச் சமயம் "அந்தத் தெள்ளு தமிழ் என் உள்ளத்தில் ஊடுருவிவிட்டது" என்ற குரலைக் கேட்கிறான். யோசித்து)

திருநாவு: இந்திரா! உன்னை இழக்கவில்லை! உன் மந்தகாச மதிவதனத்தை எப்படி மறந்திருப்பது? குணங்களின் குன்றுகிய உன்னை எப்படிக் குறை கூறுவது? அவள் காதலைப்பெற எவ்வளவு போராடுதல்?

(இந்தச் சமயம் "மூர்க்கர்களின் போக்கற்ற உணர்ச்சியை அவிக்கும் சாக்கடை நீர்" என்ற குரலைக் கேட்கிறான், அலறுகிறான்)

திருநாவு: ஆம்! ஆம்!! வேசி! தாசி!! விபசாரி!!! உள்ளே பொறுமல், வெளியே முறுவல்! அகத்துள் சூது, புறத்தில் அன்பு! பின்னால் காதகன், முன்னால் காதலன்! செம்பினுள் விளையும் களிம்பு. சுடலையைச் சோலையென நம்பிவிட்டேன்! திருந்த முடியாத விபசாரி! உன்னை வெறுக்கிறேன்; வெறுக்கிறேன்!

(நாற்காலியில் திடீரெனச் சாய்ந்துவிடுகிறான். அச்சமயம் காதலைப்பற்றி இனிமையான பாட்டு கேட்கிறது.

பாட்டு

(திருநாவு மதிமயங்கிக் கிடக்கிறான். ஷண்முக நாதன் திருநாவிடம்)

ஷண்மு: என் தடுமாற்றம்? மனதை தைரியப்படுத்து.

திருநாவு: மீன், இரையென்றுத் தூண்டி முள்ளை விழுங்குவதுபோல, நான் தாசியெனத் தெரியாமல் அவளை நேசித்துவிட்டேன். என்ன செய்வது? தன்னைத் தாசி என்று என்னிடம் சொல்லவுமில்லை; நான் கேட்கவுமில்லை. எதிர்பாராமல் நடந்தது. இது என் தவறு?

ஷண்மு: பிறகு யாருடைய தவறு?

திருநாவு: அவளுடையதுதான்.

ஷண்மு: நீ கவலையில் கதிகலங்கி நிற்கிறாய். அவளைப் பற்றி வர்ணனையை அள்ளிக்கொட்டியது, யார் முதலில்?

திருநாவு: அவள்தான் எனக்கு ஆரம்பத்தில் கடிதமெழுதியது; "உச்சிமுதல் உள்ளங்கால் வரையுள்ள கச்சிதமான என் வடிவழகைக் காண்பீர்களானால் நான் பேற்றிற்குரியவள்தான்" என்று.

ஷண்மு: அவளை, நீ விசாரிக்கும் முன்பே கடிதமெழுதினாளா உனக்கு?

திருநாவு: விசாரித்த பிறகுதான்.

ஷண்மு: இது விஷயத்தில் முன் கையெடுப்பது பெண்களிடம் காண்பது அரிது. சிறு வயதில், அவள் தாய், அவளைக் கடை வீதியில் நிறுத்தி ஏலங் கூறுகிறாள்! பொறுப்பற்ற சமுதாயத்தின் குறிக்கோளுக்கு, இந்திரா இரையானவள். இதை அவள் தவறென்று சொல்வது முறையா? பின்பு, பருவகாலத்தில் நேர்மையாக உன்னைத் தேர்ந்தெடுத்து, வாழ்க்கை நடத்த எண்ணுவதைத் தவறென்கிறாயா? அவளைப்போல் நீயும்,

அவள் கட்டழகில் மட்டுமல்ல; அவள் அறிவில், ஒழுக்கத்தில் விழுப்பம் கண்ட பின்பு உன்னுடைய உள்ளத்தை அவளிடம் அள்ளிக் கொடுத்திருக்கிறாய். இதுகூடத் தவறு? நீ கவனிக்க வேண்டியது, அந்தப் பெண்ணின் ஒழுக்கத்தில் கன்னக்கோல் வைக்கப்பட்டிருக்கிறதா, என்பதுதான். அது மாசற்றது; இதை நூறுமுறைக் கூறுவேன்.

திருநாவு: வேசியிடம் மாசில்லை என்கிறாய்! தேள் கொடுக்கில் விஷமில்லை என்பதுபோலிருக்கிறது, இவ் வார்த்தை!

ஷண்மு: புளூஜாக்கர்; நியூகட்டிங்; ஐப்பழுக்கற்ற வைரம்! இதைப் பரிசோதிக்கும் பூதக் கண்ணாடியில் கருப்பிருந்தால்? அதுபோல, கவிகளின் கற்பனைப் படி பெண்கள் வைரம் போன்றவர்கள்; அவர்களைப் பார்க்கும் ஆடவர் கண்களில் கரையிருந்தால்? பெண்கள்மேல் கரைத்தெரிகிறது; விலை பேசப்படுகிறார்கள். கண்ணாடியை மாற்றவேண்டும்; அதுபோல, இச் சமுதாயக் கண்களையும் மாற்றவேண்டும்.

திருநாவு: இந்த ஆறுதலெல்லாம், மீண்டும் அவள் காதலில் பேரவாகொள்ள வேண்டுமென்பதுதானே? நஞ்சைக் குடிக்கச் சொல்லுகிறாய்!

ஷண்மு: இல்லை. இந்திராவின் உயர்ந்த செய்கையை இன்னும் நீ அறியவில்லை. பாம்புடன் பழகிய பின் படமெடுத்தாடுவதைக் கண்டு அஞ்சுவதல்ல மனிதத்தன்மை. அவள் தாசி வயிற்றில் பிறந்ததுதான் ஒரு குற்றம். ஆனால், இந்த நாடுதன்னை ஒரு விபசாரி என்று தூற்றக்கூடாது என்ற நாட்டம் படைத்தவள். மூட்டைக் கெட்டுவிட்டது என்பதற்காக கோழியை வெட்டிவிட

முனைகிறாய்! சோறு வேகவில்லை என்பதற்கு பானையை உடைக்கிறாய்! நீ அவளை மறுப்பாயானால், உண்மையான கூட்டுறவை வேட்டையாடியக் குற்றவாளி யாவாய்.

(திருநாவு யோசிக்கிறான். பின்பு)

திருநாவு: விபசாரத்தை விளம்பரப்படுத்துவதற்காக கட்டிக்கொண்டிருக்கும் தாசி என்ற பட்டம்.

ஷண்மு: பிளந்தெறி, அந்த விளம்பரப் பலகையை. இதைச் செய்தால், சிக்குவதைச்சாப்பிட்டு ஏப்பமிடச் செப்பனிடப்பட்டிருக்கும், விபசாரச் சிலந்திக்கூட்டைக் கோலால் கலைத்தப்பெருமை உனக்குக் கிடைக்கும்.

திருநாவு: வானவில்லின் அழகு கண்ணைத் தொடும்; வாழ்க்கையைத் தொடாமல் மறையும். அதுபோல் உன் வார்த்தைகள் செவியைத்தொடுகிறது; உள்ளத்தைத் தொடாமல், மறைகிறது.

ஷண்மு: என்றுமே மறையாத கைதேர்ந்த ஓவியக் கலைஞனால் தீட்டப்பட்ட, அழகானச் சித்திரம்; இந்த உன்னதமான பேசும் சித்திரக் கலையமுதே உன் உள்ளத்தைத் தொடவில்லையே!

திருநாவு: பிறரைச் சுரண்டி வாழ்கின்ற முறை இருக்கின்றவரை; மற்றவர்களை அடிமை கொள்ளுகின்ற மடமை இருக்கின்றவரை; பெண்களை போகப் பொருளாய் எண்ணுகின்றவரை; ஒரு இந்திராவின் உள்ளத்தைத் தொடுவதால் என்ன ஆகுமென்று நினைக்கிறாய்? இந்திரா சுகப்படலாம்; இந்த நாட்டை வாட்டி வதைக்கும் விபசார சமூகம்?

ஷண்மு: அடிப்படையில் மாறுதல் வேண்டியது அவசியந்தான். ஆனால், மனிதன் அசைவற்றிருந்தால் புவனமும் அசைவற்று நிற்கும். உலகில் மாறு

தல் அலைமோதுகின்றதென்றால், அது மனித வர்க்க அசைவின் எதிரொலி. உன் அலுவலைத் தொடங்கு. நீ எழுப்பும் குரல் பொறுப்பற்ற சமுதாய நிழலில் புழுக்கும் விபசாரத்தை, அழிக்கும் பொதுஜனக் குரலாகட்டும். இதன்மூலம் நாடசையும்.

திருநாவு: சோடனை வார்த்தை! தாசிகளின் பொட்டைச் சுட்டெறிக்க நாடு சட்டமியற்றியுள்ளது. ஆனால், அதை நடைமுறையில் கடைப்பிடிக்க எந்த விபசாரிகளும் முன்வரவில்லை. விபசாரம் வேற்றுருக் கொண்டுவிட்டது; விபசாரத்திற்குத் தங்க முலாம் பூசப்படுகிறது. ராட்சஸக் கொத்தளத்தின் மூல சுகமான விபசாரத்தை, அவர்களின் அடியார்கள் எப்படி அடியோடு ஒழிக்கத் துணிவார்கள்?

ஷண்முகம்: இந்த அமைப்பே சரிந்தொழிய வேண்டியதுதான்! ஆனால், நீ உடனடியாகச் செய்யும் கடமை, விபசாரந்தான் நம்முடைய தொழிலென்றிருக்கும் செம்மையற்ற விபசாரிகள் உள்ளத்தில், எதிரிடையான ஓர் தன்மையை எழுப்பி விடுவதுதான். இது தடுமாற்றத்தில் நிற்பவர்களைக் கண் திறக்கச் செய்யும். திருநாவு! இந்திராவை மணம்புரி.

திருநாவு: பெண்களுக்குப் பொருளாதாரத்துறை மண் மூடப்பட்டிருக்கிறது. உரிமையில்லை; உடமையாக இருக்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் புரியும் அட்டகாசம்; அட்டா! பொன்னுபரணங்கள் பூட்டி, பட்டாடை போர்த்தி ஆண்களின் கண்களுக்கு விருந்தூட்டும் காட்சி பீடத்தில் நின்று ஆட்சி புரிய எண்ணுகிறார்கள்! விலைமகளின் சிங்கார நடை ஒட்டம்; வெளிப்பகட்டின் ஜிலுஜிலுப்பு! இவர்களை மீறி ஓடுகின்ற அளவு சமுதாயத்தில், குலமகளின் எதிர் நீச்சல்!

இந்த மானக்கேடான சூழ்நிலையில், அதுவும் தாசிகளின் ஒழுக்கத்தில் ஜீவன் இருக்குமா?

ஷண்மு: பொன்னுபரணங்கள் பூட்டி வேஷமிட்டுக்கொள்வது அவர்களல்ல. பூட்டிவிட்டு வேடிக்கைப் பார்ப்பது, கவிகளின் கற்பனையில் ஊறிய சொத்துரிமையுள்ளக் கலைஞர்கள்! தெரிந்ததா? இந்தா, தாசி குலத்தில் பிறந்தவள் என்பதை மறந்து சிந்தித்துப் பார்.

திருநாவு: சிந்திப்பதென்ன? மிருக உணர்ச்சியைத் தீர்த்து வைக்க அருகதையுள்ள லீலா விநோதப் பிண்டம்; இன்பத்தை அடைந்து சுரக்கும் மோகனமிர்தத் துலாக்கோல்! சாக்கடை நீர்; அதை சாப்பிடச் சொல்லுகிறாய்!

ஷண்மு: லாவணி பாடாதே! படுகுழியிலிருப்பவள் மேலே வர முயல்கிறாள்; அவளைத் தள்ளிவிடுவது மனித செய்கையல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக நீ அவள்மீது கொண்ட, காதல்?

திருநாவு. நீ சொன்னது இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆம்! "காதல்! அது, உணர்ச்சி ஆட்டத்தின் உப்பரிகை! இச்சைத் துடிப்பின் நிலா முற்றம்! ஆசை ஓட்டத்தின் பந்தயத் திடல்!" உண்மைதான், ஷண்முகம்! இது, அவள் அழகின்மீது கொண்ட வெறி! அவள் ஸ்பரிச உணர்ச்சியில் ஏற்பட்ட போதை!

ஷண்மு: வேதனைப்படாதே! ஒத்த குணத்துடன், ஒருத்தி ஒருவனோடு வாழ்கின்ற முறை நிலை பெற வேண்டும். மணம்புரி.

திருநாவு: ஆயிரம் கூறியும் சமாதானமில்லை.

ஷண்மு: வரலாறு புரியவில்லை, உனக்கு. மனித உற்பத்தி வரை முறையில்லாத, விபசாரத்திலிருந்தே விரிவடைந்திருக்கவேண்டும். காலக் கிரமத்தில்

வளர்ந்துவந்த நிலப்பிரபுத்துவ சமுதாயம், விபசாரத்தை சுகபோகத்திற்கெனத் தனக்கு உடமையாக்கிக்கொண்டது. அதை விழுங்கிவளர்ந்த முதலாளித்துவ சமுதாயம், விபசாரத்தை சந்தைப் பொருளாக்கியது. வளர்ந்து, வரப்போகும் விஞ்ஞான சமுதாயம், விபசாரத்தை ஒழித்துப் பெண் குலத்தை ஒழுக்கத்தின் உச்சியில் வைத்துத்தான் தீரவேண்டும். இது உலக வளர்ச்சியின் வரலாறு. இந்த முதலாளித்துவ சூழ்நிலையில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டப் பெண்கள் தான் கற்பரசிகள்! தெரிந்ததா? அலறும் ஆந்தையை மழலை கூறும் கிளியாக்கிவிடலாம்; ஊழ்வினையாலல்ல! சுற்றுச் சூழ்நிலையால், எப்படியும் செய்யலாம் உலகை! இதை மறந்து ஏன் புலம்புகிறாய்? புதிய சூழ்நிலைக்கு செயலாற்று. இந்திரா, பொறுப்பு வாய்ந்தவள்; மண்ணில் கிடைத்தப் பொன் அவள்! தெரிய வேண்டுமா? இவ் வுருவத்தை மாற்றிக்கொண்டு புறப்படு.

திருநாவு: சரி! எந்த உருவத்தோடு புறப்படலாம்.

ஷண்முः ஒரு முஸ்லிம் கோலம் பூண்டுக்கொள்.

(மாமா, அவசரமாக ஓடி வருகிறார். அவரைக் கண்ட, திருநாவு)

திருநாவு: என்ன, இவ்வளவு அலங்கோலமாக ஓடி வருகிறீர்கள்?

மாமா: தனவந்தர், இன்றிரவு இந்திரா வீட்டிற்கு வரப் போகிறாராம். கொலைகாரி காந்தாவின் அலுவலிது. தங்களிடம் இதை இந்திரா சொல்லச் சொன்னாள்; உதவியை நாடுகிறாள்.

ஷண்முः திருநாவு! இனி தாமதிக்கக் கூடாது. மாமா! சீக்கிரமாக ஓடுங்கள். கிழட்டு தாசிகளுக்கு இதுவே வழக்கமாகப் போய்விட்டது. தேவடி-

யாள் வீட்டில் எப்பொழுதுமே, ஒரு கிழவி சாகாமல் இருந்துக்கொண்டிருப்பாள், இதற்காக. உருவத்தை மாற்று. புறப்படு சீக்கிரம்.

திரை 10.

இடம்: **இந்திரா வீடு.** நேரம்: **மாலை.**

(இந்திரா, திருநாவுக்கரசை எதிர்பார்த்து உற்சாகமாய் பாடிக்கொண்டிருக்கிறாள், அவன் படத்தை வைத்துக்கொண்டு.)

பாட்டு

(பாட்டு முடிந்ததும் யோசனையுடன். கவலையாய்)

இந்திரா: கேடுகெட்ட எனக்கொரு மகிழ்ச்சி? பணத்தைப் பெற்று, மனதார மானத்தைவிற்கும் ஈன குலத்தில் வந்த எனக்கு ஒரு மகிழ்ச்சி? பெண், ஒரு துடி நடையாள்; ஆனால், அடுப்பூதுவதற்குப் படைக்கப்பட்டவள்! பெண், ஒரு மான் விழியாள்; ஆனால், காமத்தைத் தணிக்க ஏற்பட்ட ஓர் உடமை! இந்தக்கண்ணவிந்த செய்கைக்கு உடந்தையாய் நிற்கும் வழியில் வந்த எனக்கு ஒரு மகிழ்ச்சி? கேவலம்! பெண், அறிவுத் துறையில் தற்குறி! பொருளாதாரத் துறையில் இருள் நிறைந்தவள்! ஆணுக்கு அடிமை, உடமை! இந்த சூராவளித்தனமான சூழ்நிலையில், பெண்கள் தன் கண்களுக்குக் கருமையிட்டு அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள், பார்ப்பவர்கள் தன்னைப் பார்த்து மகிழ்வதற்கு! இத்தகைய சமுதாயம் ஏன், தனவானிடம் பணத்தை வாங்கி என்னைவைத்துப் பகடை உருட்ட அனுமதிக்காது? யாருடைய உத்தரவில் பேரம் பேசினான் என் மானத்திற்கு, அந்த மடையன்? வரட்டும் அவனை விரட்டுகிறேன். (யோசனை) ஆம்!

(உள்ளே போகிறாள். கையில் மருந்து சீசாவுடன் வெளியில் வந்து, சீசாவின்மேல் ஒட்டப் பட்டிருக்கும் தாளைப் படிக்கிறாள். பின் நடுநடுங்கி)

ஆ! (Poison) பாயிஸன்! மரணப் பரிட்சைக்குத் தருணம் பார்க்கும் முன்னெச்சரிக்கை. என் வீட்டில் இந்த நஞ்சு இருப்பதாகக் கேட்டதுமில்லை பார்த்ததுமில்லை. அய்யோ! வசந்தம் வீசும் வாழ்க்கைச் சோலையில் சுரிருள் கப்பிக் கனல் சுடுகிறது. (யோசனை) ஆம்! என் காதலர் உயிருக்குப் பாதகர்களின் விஷக் காணிக்கை. அய்யோ! பயமாக இருக்கிறது. என் கவனிப்புக் குறைவால் அவர் இப்புவனத்தை இழந்தால், இந்த அவனியில் எனக்கேது வாழ்வு? சாவுதான்! (யோசனை) அடாதுடிக்காரி; விபசாரி என்தாய்! காமலோலன்; கயவன் தனவந்தன்! இவர்கள் நமது வாழ்க்கை ரதத்தின் அச்சாணியை முறித்தெறியப் பார்க்கிறார்கள். திருநாவு! உங்களைக் காப்பாற்றுவது என் பொறுப்பு.

(காந்தாமணி வருகிறாள். அவளைக் கண்ட இந்திரா விஷ சீசாவை மறைத்துக்கொண்டு பின் வாங்குகிறாள். காந்தாமணி இந்திராவிடம்)

காந்தா: இந்திரா! இப்படி உட்கார். நான் சொல்வதெல்லாம், நீ செல்வத் தொட்டிலில் ஆடி மகிழத்தானே? தனவந்தர் அன்பைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்ளம்மா!. அவர் வரும் நேரமாகிவிட்டது. தடுக்காதே!

இந்திரா: எடுக்காதீர்கள் அந்த வார்த்தையை! யாரைக் கேட்டுக்கொண்டு அவனை, வீட்டிற்கு அழைக்கிறீர்கள்? நூல் இழையை, குரங்கைவிட்டு முடியச் செய்கிறீர்கள்!

காந்தா: உன்னுடைய பேச்செல்லாம் புதுமை வீச்சாக இருக்கிறதே! நாட்டிலுள்ள தாசிகளைக் கேட்

டுப் பார். தேவடியாள் வீடுகளில் என் னைப் போல் ஒரு தாய்க்கிழவி ஓடி ஆடுவது எதற்காக? சிறு பெண்களுக்குப் பெரும் பணக்காரனைப் பார்த்துப் பொருத்தி வைக்கத்தானே! நம் குல தர்மப்படி இது குற்றமல்ல. வழக்கப்படித்தான் வாரிசையும் பழக்க வேண்டும்! இதிலென்ன தவறு?

இந்திரா: அனுமதி கொடுப்பது மட்டும், குல தர்மப்படி உமதுரிமை? இளமை தவழும் எழிலை, எமனுக்கு இரையாக்க இசைய வேண்டுவதுமட்டும் என்னுடையது? இதைச்சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை? துக்கமாக இல்லை? பெண்களைத் தண்டமிழ்ச் சோலை என்றும், வண்டினமென்றும் கண்டபடி கற்பனைசெய்யக் கவிகளும், அதைக் கலை உருவாக்கி மகிழப் பலக் கலைஞர்களும் இருக்கும்பொழுது, உங்களுக்கு எப்படி இது வெட்கமாகப்படப்போகிறது? பெண்கள் அசைந்தால் பூங்கொடி; நடந்தால் சிலம்பொலி; நகைத்தால் முல்லைமலர்! இதுபோன்று பணத்தொப்பைகள் மனங் குளிரக் கவி தொடுத்து, அதில் சுவைகாணும் மேதைகள் பலரிருக்கும்பொழுது, எப்படி உங்களுக்கு இது பாதகமாகப் படப்போகிறது? அம்மா! வேண்டாம். நான் ஒன்றும் அறியாதவள். பலரின் மிருக உணர்ச்சியில் பயிர்ச்சிபெற என்னால் முடியாது. அதற்குப் பொருத்தமற்றவள் நான்.

காந்தா: சொல்வதைத் தட்டாதே, கண்ணே! வேம்பை விரும்பினால் கரும்பு! தொல்லைக்குப் பின்தானே அல்லல் தீரும்.

இந்திரா: அப்படி என்றால்; இன்றைக்கு, உன் மேனியில் கத்தியால் குத்துகிறேன்; நாளைக்கு மிருதுவான பஞ்சால் அதே இடத்தில் சுகமாக ஒத்துகிறேன்

என்று சொல்லுகிறீர்களா? இது அடுக்குமா தாயே?

காந்தா: தடுக்காதே இந்திரா! உதாரணங்கள் ஒய்யார வாழ்வைக் கொடுக்காது. தனவந்தர், கல்லக் கறவை மாடு. காலத்தைக் கை நழுவவிடாமீது, கண்ணே!

(இச் சமயம் சௌரி தன் தோழன் சொக்குடன் வருகிறான்)

சௌரி: டேய்! சொக்கு! நீ வெளியிலிரு நான் வரும் வரை.

சொக்கு: சரி.

(சொக்கு போய்விடுகிறான். தனவான் கனைத் துக்கொண்டு வருகிறான். எழுந்து, ஒதுங்கி, நடுங்கி நிற்கிறாள், இந்திரா. காந்தாமணி ஓடி வரவேற்கிறாள்)

காந்தா: வாருங்கள்! நீங்கள் எங்களை நாடி வர, நாங்கள் கோடித்தவம் செய்திருக்கிறோம்! உட்காருங்கள்.

(தனவான் அமர்ந்து, இந்திராவைப் பார்த்து)

சௌரி: இந்திரா! எதற்காக நிற்கிறாய்? உட்கார். சந் தேக அலைபுரண்ட உன்மனம் இப்பொழுதுதான் நிலைக்கு வந்ததோ? உட்கார், நிற்காதே!

(இந்திரா உட்காருகிறாள். அவள் பக்கத்தில் தனவான் நாற்காலியை இழுத்துஉட்காருகிறான். அவள் நகர, இவனும் அவளுடனே நகர்ந்து உட்காருகிறான். காந்தா, தனவானிடம்)

காந்தா: வாழ்க்கைச் சுகமறியாத முகத்தெளிவைப் பாருங் கள், குழந்தைக்கு! சிறுமை தெரியாதவள்; அருமையாக வளர்த்த அன்னத்தை உங்கள் உணர்ச்சிக்கு விருந்தூட்ட ஒப்பிவிட்டேன்.

சௌரி: இந்திரா அன்னமானால், நான் அப்பட்டமான ஆவின் பால்! என் மனமாளிகை, அவள் அசைந் தாடும் தாமரைப் பொய்கை!

காந்தா: நீங்கள் இந்தை குலுங்கிச் சிரித்து விளையாடத் தானே இந்தப் பாடு. இந்திரா, உங்கள் சொந்தப் பதுமை புதுமையாய் சோடித்துப் பாருங்கள். எனக்கு வயதாகிவிட்டது. இந்திராதான் இருவருக்கும் சொத்து. இந்திரா! பக்குவமாய் நடந்துக்கொள். வருகிறேன்.

(காந்தா போய்விடுகிறாள். இந்திரா எழுந்து தனியாக வந்து)

இந்திரா: வேடன் குறிக்கு மாடப்புறுவை வைத்துவிட்டாள்! என்னை அமுதம் என்கிறார் திருநாவு; அதை அசுரனுக்குப் பரிமாறிவிட்டாள் என்தாய்! திருநாவுக்கரசையும் காணோம்; மாமாவும் பிரிந்து விட்டார். இந்தச் சமயத்திலா இமயம்போன்ற இடி விழுவது? (யோசித்து) ஆம்! மயக்க மருந்திருக்கிறது; பயமேன்?

(தனவானிடம் சென்று ஒதுங்கி நிற்கிறாள், இந்திரா. இந்திராவிடம் தனவான்,)

சௌரி: இந்திரா! என் மிரளுகிறாய், காவலனைக்கண்ட திருடன்போல? உன்னை நான் சிறையாக்க வரவில்லை; விடுதலையாக, பூங்காவில் நடை பழக விடுவதற்கு!

இந்திரா: முள் வேலி அமைத்து என் உள்ளத்தில் விலங்கிட!

சௌரி: பொய்! பலியாக உன் புன்னகையில்; பயப்படுகிறாயா? உட்கார்.

(இந்திரா உட்காருகிறாள்)

சௌரி: இந்திரா! நான் உன் வலையில் சிக்கிய மீன், துடிக்கிறேன்; பிடித்து உன் இதயப் பொய்கையில் விட்டுவிடு.

இந்திரா: இல்லையானால், புயற்காற்றின் முன் நான் ஒரு பஞ்சாகிவிடுவேன். மறுத்து, நீதி பேசினால் ஊதி விடுவீர்கள். அப்படித்தானே?

சௌரி: ஊதுவது உன்னையல்ல. உன் வறுமையை; ஏழ்மையை; துன்பத்தை! எங்கே? ஒரு பிஞ்சு முத்தம்!

இந்திரா: ஏன், கெஞ்ச வேண்டும்? நீங்கள் என்னிடம் அன்பு காட்டும் முறையில்...

சௌரி: கறை பிடித்திருக்கிறது என்கிறாயா? களங்கமில்லாத என் பளிங்கு மனதைப்பார்! நீ எது சொன்னாலும் கேட்கிறேன், கண்ணே! சொல் சீக்கிரம்!

இந்திரா: போக்கிடம் ஏது? அருமையான மாம்பழம்; நாகிமுன் நர்த்தனமாடுகிறது. அனுபவித்த பின் கொட்டையும், தோலும் குப்பைத் தொட்டியில்! அதுபோல நான், உங்களுக்கு உல்லாச யாத்திரையின் தோணி; அதனால், என்னைப் பார்த்தாலும் மோகனச் சிரிப்பு! அனுபவித்து அடங்கியதும் சுக்கானைவிட்டுக் கரையிறங்கிச் சென்று விட்டால்?

சௌரி: மறக்கமாட்டேன், இது சத்தியம்! நான் இருக்கும்வரை உன்னைப் பிரியமாட்டேன். இதை எண்ணாயிரம் கோவிலில் உண்மை செய்யச்சொன்னாலும் செய்கிறேன். என்னை நம்பு இந்திரா!

இந்திரா: நம்பு ஏன்? எண்ணம் ஒரு நிலையுள்ளதல்ல. உங்களை நான் ஏதாவது கேட்டால்; இந்தச் சிறுமி தங்கள் பரம்பரையின் தொழில் முறையைக் காட்டுகிறாளே, என்று நினைப்பீர்கள். அதனால்தான் சொல்லுவதற்கு...

சௌரி: வெல்லமல்ல உன்னை விழுங்க; அஞ்சாமல் சொல்!

இந்திரா: இன்ப துன்பமிரண்டிலும் அன்புடனிருக்கும்

அடையாளமாக, எனக்குக் கொஞ்சம் சொத்து எழுதி வைத்தால்...

சௌரி: சித்தம் சூளிர்வாய், அவ்வளவுதானே? நீ என் ராணி! இதை நான் எந்தப் பாணியில் பேசினாலும் நம்பமாட்டேன் என்கிறாய். சரி. என் வீட்டிற்கு எதிரிலுள்ள பெரியதோட்டமும், அதைச் சேர்ந்த மாளிகையும் தெரியுமல்லவா? அவைகளை உனக்கு விற்கிரயம் செய்துத் தருகிறேன். திருப்திதானே?

(இந்திரா தலையை அசைக்கிறாள். சௌரி ஒரு தாளை எடுத்து அதில் எழுதுகிறான். இந்திராவிடம் காண்பிக்கிறான்)

சௌரி: சரிதானே பார்!

இந்திரா: இதை கோர்ட்டில் பதிவு செய்ய வேண்டாமா?

சௌரி: சொக்கு! சொக்கு!!

(சௌரி, சொக்கை அழைக்கிறான். சொக்கு வருகிறான்)

சௌரி: இந்தா! இதை (தாளைக் கொடுத்து) ரிஜிஸ்டர் ஆபீஸில் நான் கொடுத்ததாகச்சொல்லி, நடைமுறையில் எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்படிப் பதிவு செய்துக் கொண்டு வா.

(சொக்கு வாங்கிக்கொண்டு போகும்பொழுது, சௌரி மீண்டும் அழைத்து)

சௌரி: அதில் நான் கையெழுத்திட்டிருக்கிறேனு பார்? (வாங்கிப் பார்த்து) சரி. எத்திராஜலும், முத்துவேலும் இருப்பார்கள்; ஒத்துப் பார்த்துவிட்டு அவர்களைச் சாட்சிக் கையெழுத்துப் போடச் சொல். நான் சொன்னதாகச் சொல். போ!

(சொக்கு போய்விடுகிறான். இந்திராவிடம் சௌரிராஜன்)

சௌரி: மகிழ்ச்சிதானே, இந்திரா?

இந்திரா: நீங்கள் மகிழ்ந்தாலே போதும்!

சௌரி: என் இன்னும் நாணம்? இந்திரா! அன்புவைத்து ஒரு முத்தம் பதித்துவிடு என் கன்னத்தில்; செத்து மடிந்தாலும் எனக்கு முக்தியுண்டு. எங்கே?

(சௌரி, இந்திரா கையைப் பிடிக்கிறான். அதை இந்திரா தட்டிவிட்டு, உள்ளே போய் பால் கொண்டுவந்து, அதில் விஷத்தைக் கலந்து)

இந்திரா: இதைச் சாப்பிடுங்கள் முதலில்!

(இந்திரா சௌரியை மயக்க, நடனம் ஆடிக் கொண்டு, பாடிக்கொண்டு பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக தன் கையாலேயே ஊட்டுகிறாள். சௌரி காம வெறியில் அதனைத் தாவித் தாவி உட்கொள்ளுகிறான்)

பாட்டு

(பாட்டோடு பாலையும் சாப்பிட்டு முடிந்தது. சௌரிக்குச் சிறு மயக்கம், சந்தேகமுங்கூட. அச் சமயத்தில் சொக்கு பத்திரத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறான். சௌரி அதை வாங்கி மயக்கத்தில் இந்திராவிடம் கொடுத்து)

சௌரி: இந்திரா! (வாய்க்குளறி) இதைப் பத்திரமாக வைத்துக்கொள். சொக்கு, நீ போ!

(சொக்கு போய்விடுகிறான். இந்திராபத்திரத்தை வாங்கி வைத்துக்கொள்ளுகிறாள். சௌரி மயக்கத்தால் தலை தடுமாறி, நாற்காலியைப் பார்த்து புலம்புகிறான்)

சௌரி: இந்திரா! (நாற்காலியிடம்) என் இன்பக் களஞ்சியமே! அன்பின் சிகரமே! என் மோகனாங்கி, தாகம் தீரடி! எங்கே நிற்கிறாய்? இந்திரா! இந்திரா!! (நாற்காலியைத் தடவி) வாழைக் குறத்

தடி உன் காங்கள்! பஞ்சு மெத்தையடி உன் மேனி! அதில் தஞ்சம் புகுந்தேன்; கொஞ்சி விளையாடடி! (நாற்காலியை ஆட்டுகிறான்) என்னை மறக்காதே, இந்திரா! நான் உன் வாழ்க்கையின் அமுதம்!

(உளறிக்கொண்டு மல்லாந்து விடுகிறான். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இந்திரா)

இந்திரா: வாழ்க்கையின் நஞ்சு! தொலைந்தான்.

(அதிக மயக்கத்தால் உணர்வழிந்து விழுந்து விடுகிறான். இந்திரா உள்ளே போய் கருப்பு-வெள்ளைச் சாந்துகளைக் கொண்டுவந்து அவன் முகத்தில் பல விடங்களில் தடவி விட்டு, அவனை உள்ளே உருட்டித் தள்ளிவிடுகிறாள். வெளியே வந்து)

இந்திரா: இனி ஒருக் கணமும் இருக்கக்கூடாது, இங்கே.

(இச் சமயத்தில், ஷண்முகநாதன் திருநாவை முஸ்லிம் வேஷத்தோடு ஒரு புறமாக இருக்கச் செய்து, தான் இந்திரா முன் செல்லுகிறான். அவசரமாக ஓடிவந்த இந்திரா ஷண்முகத்தைப் பார்த்து)

இந்திரா: அண்ணா! என்னைக் காப்பாற்றுங்கள்.

(அவன் காலடியில் திடீரென விழுந்து)

இந்திரா: என்னைத் திருநாவுக்கரசிடம் சேர்த்து விடுங்கள்.

(ஷண்முகம் அவளைத் தூக்கிவிட்டு)

ஷண்மு: காத்திருக்க வேண்டியதுதான்! உன்னைத் தாசி குலத்தில் பிறந்தவள் என்பதை யோசிக்காமல் காதலித்துவிட்டானும். இது தெரிந்த பின் உன் காதலை மறந்துவிட்டான். உன்னிடம் இதைச் சொல்லவே என்னை அனுப்பினான். நீ அங்கு சென்றுச் செய்யப்போவதென்ன?

(இந்திரா திடுக்கிட்டுக் கதிகலங்கி)

இந்திரா: என்னை மடந்துவிட்டாரா? இமய உச்சியிலிருந்து இடறி விழுந்தது போலிருக்கிறது, அண்ணு!

(கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கும் இந்திராவிற்கு, "பேரின்ப வாழ்விற்கு ராணுவ நடை போடும் பேற்றை அளித்துவிட்டாய்" என்ற குரல் காதில் தொனிக்கிறது)

இந்திரா: பேரின்ப வாழ்விற்கு ராணுவ நடைபோடும் பேற்றை அளித்துவிட்டாய்! ஆம்! ஆம்!! இந்தத் தேறுதலைச் சொன்ன நீங்களா என்மேல் சீறி விழுகிறீர்கள்? எத்தனையோ தொல்லையிலும் சித்தம் கிரும்பாது, வைத்த வைராக்கியத்தை முடித்த என்னையா காலால் எத்துகிறீர்கள்? தனவந்தன் வற்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கற்பைக் காப்பதற்காகவே உயிர் வாழ்ந்த என்னையா கைவிடுகிறீர்கள்? அடுக்காது! அடுக்காது!! அண்ணு! அறங்கூறும் வையம் அயோக்கியர்கள் கையில் சிக்கிவிட்டதா? எனக்கொன்றும் புரியவில்லை! (யோசித்து) தாசி! தாசியாய்ப் பிறந்தது என் தவறல்லவே? இந்த இழித்தொழிலைக் கண்டு களித்துக் கொண்டிருப்பது வழிகெட்டச் சமுதாயமல்லவா? என்னை வெறுப்பதை விட்டு, இந்தச் சமுதாய நிழலில் வீசும் தூர் நாற்றத்தின்மேல் அவர் வெறுப்பைக் காட்டியிருந்தால் எவ்வளவு பெருமையாய் இருந்திருக்கும்? அதை மறந்துவிட்டார், பாவம்! பெண்களை வேண்டுமென்றே சித்ரவதை செய்யும் கண்கெட்டச் சமுதாயத்தை மண்மூடிப் போகவென நானுவது சபிக்கிறேன். அண்ணு! திருநாவுக்கரசிடம் ஒப்படைத்த உயிர் இது. அவர் என்னை ஏற்காவிட்டால், மரணங்கூடவா ஏற்காது என்னை?

ஷண்முகு: நீ அவனுக்காக மரணத்தை விரும்புவது புரியாத்தனம்.

இந்திரா: தெரிந்துதான் சொல்லுகிறேன். மணமற்றப் பூவுக்கு மதிப்பேது? இன்பத்தின் அடிவாரம் இடிந்த பின் வாழ்வேது, அண்ணா?

ஷண்மு: மீண்டும் எழுப்பிவிடுவது? அதற்கு நானிருக்கிறேன், இந்திரா!

இந்திரா: அப்படி என்றால்?

ஷண்மு: திருநாவுக்கரசின் இடத்திலிருந்து!

இந்திரா: யார் என்னிடம் பேசுவது?

ஷண்மு: முன்னாள் இன்ஸ்பெக்டர் ஷண்முகநாதன்!

இந்திரா: இந்த வரண்ட சொல் வருவது உமது திரண்ட அறிவிலிருந்துதானா?

ஷண்மு: உன் சருகான வாழ்க்கையைத் தளிராக்குவதற்கு?

இந்திரா: நீரற்றப் பாழும் கிணறுகட்டும். அதைப்பற்றி நீர் நெற்றிச் சுருக்கவேண்டாம்.

ஷண்மு: தாசி! நீ காசுக்கு காமப்பால் சுரப்பவள்தானே?

இந்திரா: நீர் கூறுவது, வெறி பிடித்தவர்கள் குறிக்குத் தென்படுவது!

ஷண்மு: ஊரார் கட்டிய உப்பரிகையில் தாராளமாய் ஓடி விளையாடுபவள். என் உள்ளக் களிப்பை அள்ளிப் பருகக் கசக்கிறதோ?

இந்திரா: அறிவுலகம் பொறுக்காத வார்த்தை. கண்ணாடி போன்ற என் இதயத்தில் கல்லாலடிக்கிறீர்கள்! மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், வெளியேறுவதுதான் நேர்மை.

ஷண்மு: எனக்குத் தெரியும், யாரிடம் மரியாதை பெற வேண்டுமென்பது. இன்றைய போராட்டம் அனைத்தும் உன் கற்பிட்டம் சூதாட்டம் நடத்துவதுதான். இசைந்துவிடு.

இந்திரா: ஆ! (யோசித்து) அப்படியானால் நில்லுங்கள்.
(உள்ளே சென்று கத்தியுடன் வந்து)

இந்தி: ஈனமொழிகளால் என்னை மானபங்கப் படுத்துவதைவிட, இதோ (கத்தியைக் காட்டி) இந்தக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு என்னை நித்துங்கள்.

(கத்தியை ஷண்முகதாதன் கையில் கொடுத்து விடுகிறாள். பின்பும்)

இந்தி: அன்று மீட்ட உங்கள் கையால் இன்று தாட்டப் படுவதை கௌரவமாக ஏற்கிறேன். வேறொருவருக்குச் சொந்தமானது இச் சரீரம். அதில் யாரும் ஆசைவைக்க அனுமதிக்க மாட்டேன்.

(மார்பைக் காட்டி)

இந்தி: என்னைப் பிணமாக்கி, என் அழகைப்பற்றி, என் காதலைப் பற்றி ஓவியந் தீட்டுங்கள். ஏன் நிற்கிறீர்கள்?

(இந்திரா கொடுத்தக் கத்தியை ஷண்முகம் கீழே எறிவ விடுகிறான்,)

ஷண்மு: சகோதரி! என்னை உன் சகோதரன் என்ற மகோன்னத எண்ணத்தில் பார். பார்க்கிறாயா?

இந்தி: பார்த்துப் பயன்? வார்த்தையில், செய்கையில் நேர்மை வேண்டும்.

ஷண்மு: என் தார்மீக ஆதரவு என்னுடைய நேர்மையை விரைவில் நிரூபிக்கும். இந்திரா! நீ தாசியெனத் தெரிந்ததும் உன் மேலிருந்த பாசத்தை அறுத்துக்கொண்டதால், உங்கள் இருவரையும் மீண்டும் ஒன்று சேர்த்துவைக்கத் தோன்றியக் காட்சிதான், சற்றுமுன் நீ கண்டது. உன்னைப் புண்ணாக்கிய என் செய்கைக்கு இதயபூர்வமான மன்னிப்பைக் கொடு.

இந்தி: விஷப்பரீட்சைக்கு ஒருமன்னிப்பு? இம்... இளகிய மனம் படைத்தக் குலமல்லவா பெண்கள்? மன்னிப்புத் தருகிறேன். அண்ணு! அவர் எங்கே?

ஷண்மு: சகோதரி! இதோ உன் பக்கத்திலேயே!

(பக்கத்தில் பதுங்கி நின்று பார்த்துக்கொண்டிருந்த முஸ்லிமிடம் இந்திராவை அழைத்துச் சென்று, தலைமீதிருந்த குல்லா, மீசை, தாடி முதலிய கோலங்களைக் கலைத்துவிடுகிறான். இந்திரா, திருநாவை ஒடித்தழுவி)

இந்தி: என்னை மறக்காதீர்கள். என் மீது கொண்ட எண்ணம் பொருக்க முடியாதது.

திருநா: உன்செய்கையைப் பொருத்து உன்னைக் கைநழுவ விடவில்லை. இந்த ஈரமற்றச் சமுதாயத்தின் கோரச் செயலைப்பொருத்தது. உன் காதல்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், மனமாற்றத்திற்கு இனி இடமிராது.

ஷண்மு: திருநாவு! இந்திராவின் சிறந்த குணம் இப்பொழுது உனக்குப் புரிந்ததா? என் மாசு மருவற்ற வாழ்வில் உன் பொருட்டு ஒரு கறை.

இந்தி: அண்ணு! என்னை மன்னிக்கவேண்டும். உங்கள் நெறியறியாதவள்.

ஷண்மு: இப்பொழுது மகிழ்ச்சிதானே?

இந்தி; இருந்தாலும், மீன் கூடையில் கிடந்தவள்; கவுல் வாடைமாற வேண்டும்! விபசாரியின் வாரிசு; இது மாறவேண்டாமா?

திருநா: மாறியே தீரும், அல்ல தும் மாற்றுவோம். நிலை கெட்டச் சமுதாயத்திற்கு உலகெங்கும் சவப் பெட்டி தயாரிக்கப்படுகிறது. கடைசி ஆணி அறைவது நமது பணியாக இருக்கட்டும்.

(தனவந்தர் மூர்ச்சை தெளிந்து, முகத்தில் கரும்புள்ளி, செம்புள்ளியுடன் வெளியில் தள்ளாடிவந்து காட்சி அளிக்கிறான். வரும்பொழுது,)

சௌரி: இந்திரா! எங்கிருக்கிறாய்? மயக்கம் தலையைச் சுற்றுகிறது. சற்றுவா இப்படி!

(அவன் முகத்தைக் கண்ட ஷண்முகம், திருநாவு இந்திரா மூவரும் ஓவென்று நகைத்தல். இதைக் கண்ட சௌரிக்குத் தெளிவுகண்டு அவனும் பரிகாசத்திற்கு நகைத்தது)

சௌரி: என்னடா நகைக்கிறீர்கள்? பஞ்சை நாய்களா! உங்களுக்கு இங்கே என்னடாவேலை? இந்திரா! இங்கேவா.

இந்தி: கடிவாளம் அறுபட்டக் குதிரை மாதிரி ஓடிக்கிறாயே, பொறு.

திருநா: இந்திரா! சீக்கிரம் போய் முகம் பார்க்கும் கண்ணாடி கொண்டுவா.

(இந்திரா உள்ளே ஓடி கண்ணாடியைக் கொண்டு வந்து திருநாவிடம் கொடுக்கிறாள். திருநாவு கண்ணாடியைத் தனவானிடம் காட்டி)

திருநா: மகாப்பிரபு! உங்கள் வடிவழகு எப்படி ஒழுகி ஓடுகிறது என்பதை கண்ணாடியில் பாருங்கள்.

(மீண்டும் மூவரும் நகைத்தல் இக்கோலத்தைக் கண்ட தனவான் துடித்துப் பல்லை நெறித்து)

சௌரி: அயோக்கியக் கழுதைகளா!

இந்தி: இந்திராவிடம் இன்பம் காணவந்ததில் நடந்த இடைவேளை விருந்து, மடையா!

சௌரி: மானங்கெட்ட நாயே!

திருநா: உன் காசுத்திமிரை பெண்களிடம் வீசுகின்றாயோ? திமிர்கொண்ட மிருகமே!

சௌரி: உன்னிடமே வீசுகிறேன். பொறுக்கி நாயே! தூ.....(உமிழ்கிறான்)

(இந்திராவும், மற்றவர்களும் உமிழ்ந்து)

இந்தி: தூ....! முகத்தைப்பார்; கொகுசிழந்தக் கோட்டான். அண்ணு! திருநாவு!! நாம் இனி இங்கே ஒருக்கணங்கூட இருக்கக்கூடாது. கதையைப் பிறகு சொல்லுகிறேன். புறப்படுங்கள்.

(மூவரும் போய்விடுதல். அவமானப்பட்ட தனவான் முன் காந்தா வருகிறாள். தனவானின் அலங்கோலத்தைப்பார்த்து)

காந்தா: பிரபு! அய்யய்யோ! இது என்ன கோலம்?

சௌரி: (ஆத்திரமாய்) அலங்கோலம்! என்னுடைய பணத்தை வாங்கிக்கொண்டு என்னை நடைப்பிணமாக்கி விட்ட நாடோடிநாய்களா? உங்கள் மேல்பிசகில்லை. விபசாரிகளிடம் பணத்தைக்கொடுத்துக் காமாந்தகாரத்திலில் ஏமாந்து, பதில் நடவடிக்கை எடுக்க முடியாமல் வேதாந்தம்பேசி மாண்டுபோன பலப் பிரபுக்களின் சரித்திரம் உங்களைத் தெரியமூட்டுகிறது? வேசி நாய்களா! விபசாரிகளின் வஞ்சகசொரூபமிது? மோசக்காரிகளா!

காந்தா: அய்யோ! இன்பத்தை அளித்த இந்திரா எங்கே போய் தஞ்சம் புகுந்தாள்?

சௌரி: அந்தப் பஞ்சைப் பிசாசுகளுடன் பறந்தோடிவிட்டாள் கொஞ்சிக்குலவ! வஞ்சகப்பேய்! பஞ்சக் கோலம் காட்டிப் பசப்புகிறாயோ? கிழ மூளி!

காந்தா: அந்தப் பழிகாரி செய்ததற்கு என்னைக் கோபித்து ஆவதென்ன?

சௌரி: தண்ணீர்த் துறையில் தாயைப்பார்த்தால், பெண்ணை வீட்டில்போய் பார்க்கவா வேண்டும்? மானங்கெட்டவளே!

காந்தா: அவள் தொலையட்டும். என்னால் நடைபெற வேண்டிய காரியம் எது இருந்தாலும் சரி; முடிக்கிறேன், சொல்லுங்கள்.

சௌரி: சீ! பேயே!! (பழித்து நகைத்து) உன்னுல் நடை பெறவேண்டிய காரியம்? ஆத்திரத்தைக் கிண்டி விடுகிறாய். இந்த ஆத்திரத்திலும் பாரதத்தில் எனக்கொரு கதை ஞாபகம் வருகிறது, கேளடி! "உத்தாலகன் என்ற ஒருவன். அவனுக்கு சுவேதகேது என்ற வீர மகனொருவனிருந்தான். இருபத்தைந்து வயது நிரம்பியவன். உத்தாலகன் வீட்டிற்கு விருந்தினனாக ஒரு அகதி வந்தான். அவன், சுவேதகேதுவின் திறமையைக் கண்டு வியந்து, உத்தாலகனை நோக்கிக் கேட்கிறான்: உத்தாலகனே! உனக்கு அருமையான வீர மகன் ஒருவனிருக்கிறான். எனக்கோ பிள்ளைப் பேறில்லை. ஆதலால், உன் மனைவியை என்னுடன் அனுப்பும்; ஒரு வீர மகனைப் பெற்றுக்கொண்டு, திரும்ப உன் மனைவியை உன்னுடன் சேர்க்கிறேன், என்றான். உத்தாலகன் அவனுடு தன் மனைவியை அனுப்பி வைத்தான்" இருபத்தைந்து வயது மகனிருந்தும் விபசாரத்தைத் தடுக்கவில்லை; விரும்பினாள். இது நாட்டின் பெருக்கத்தைக் குறித்து அந்த நாளில், அவள் செய்தாள் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தாலும்; (கோபத்துடன்) ஒழுக்கங்கெட்டப் பிசாசே! வளர்ந்த நாட்டில், உன்னை எவன் விரும்புவான்? உன் உடலில் மினுமினுப்பு எங்கே? குலுக்கு நடை; வாசனை தடவிய மேனி; மெருகிட்டக் கன்னங்கள் எங்கேயடி? உன்னை விரும்பித் தாலியலாம் என்றாலும்! மலைக்கும் மடுவிற்கும்! ஐம்பதிற்கு மேலாகிவிட்டது, வயது! தெம்பில்லை உடலில்; வம்பு செய்கிறாள் இன்பத்திற்கு! தேவடியாளின் ஜாதித் தொழிலோ? கிழமானாலும் காசுக்கு ஆடவரைப் புழங்க விடும் தயாளம்! விபசாரி! ஒழிந்து போ, சல்லிப் பிசாசே!

திரை 11.

இடம்: **ஜீவரத்தினம் வீடு.** நேரம்: **மாலை.**

(ஜீவரத்தினம் தன் நிலையைக் குறித்து வருந்து கிறாள்)

ஜீவா: என்னுடைய எண்ணம் வேங்கடம்முதல் குமரி வரைத் திரிகிறது. தனவான் சௌரிராஜன் ஒழிந்துவிடும் திசையை நோக்கி ஓடிக்கொண் டிருக்கிறான். அவனிடம் கொஞ்சம் பொருளிருக் கிறது. என் கொஞ்சு மொழிகளால் கெஞ்சிப் பறித்துவிடுகிறேன் அதையும். பணம் போனால் பிணந்தானே? கள் சுரக்கா மரத்தில் பாளைக் கட்ட ஏறுவாருண்டா? இன்ஸ்பெக்டர் கிருஷ்ண சாமி நமக்குப் புதுக் காதலராக அமைந்தபின், பசையற்ற சௌரியின் உறவு நசிந்தொழியட்டும்! எங்கே கிருஷ்ணசாமியை காணேம்.

(இந்த வார்த்தையைச் செவியில் வாங்கிக்கொண்டு கிருஷ்ணசாமி, ஜீவாவிடம்)

கிருஷ்: இதோ! உன் ஆசையின் ஏணி! எதிரே நிற்கி றேன்.

(அவன் இரு கரங்களையும் பற்றி, ஜீவா சந்தோ ஷத்துடன்)

ஜீவா: அலோ இன்ஸ்பெக்டர்! உட்காருங்கள். உங்க ளைச் சிறிது நேரம் பார்க்காவிட்டால்...?

கிருஷ்: சித்தம் பேதலித்ததுபோலிருக்கிறதோ? எனக் கிருப்பதுமாதிரி.

ஜீவா: இல்லை! உயிரே போய்விடும்போலிருக்கிறது.

கிருஷ்: அந்தமாதிரி சமயங்களில் உன் போகக் களஞ்சிய மான நான்வந்து, சாகாவரம் கொடுக்கிறேன், உனக்கு! அப்படித்தானே?

ஜீவா: வேறென்ன? கைதேர்ந்த வைத்தியர் நீங்கள்!

கிருஷ்: நீ, நோய்வாய்ப்பட்டவள்? வேடிக்கையாகத் தான் பேசுகிறாய்!

ஜீவா: கூடிப்பிரிந்தால், வாடி வதங்காமல் எப்படி இருக்கமுடியும்? அந்த நோய்தான். அதைத் தீர்க்கும் மருத்துவர் நீங்கள்தானே?

(இருவரும் பாடுதல்)

பாட்டு

கிருஷ்: ஜீவா! நீ என்மீது கொண்டிருக்கும் அன்பை, என்றும் மறக்கமாட்டாயே?

ஜீவா: என் அப்படித் தப்பிதமான எண்ணம்?

கிருஷ்: நான் உன்மீது வைத்திருக்கும் பிரேமையில் நீ என்னை பத்துநாள் மறந்திருந்தால் போதும்; நான் சுத்தமாக காவி உடை தரித்துவிடுவேன்.

ஜீவா: என்னை நம்பாதிருங்கள் ஏற்பட்டக் கனவு இது! அதனால்தான் மனதில் இந்த நினைவுப் போர்! காசுக்காக பலரிடம் கட்டுகொள்ளும் தாசி, பாசாங்குகாரி; இவள் எங்கே நம்மிடம் நீடிக்கப் போகிறாள், என்று நாடி துடிக்கிறது உங்களுக்கு! இதுவும் என் காலந்தான்!

கிருஷ்: இல்லை ஜீவா! நான் விளையாட்டிற்காகச் சொன்னேன்!

ஜீவா: நான் நம்பமாட்டேன்! இனி யார் முகத்தையும் பார்க்கமாட்டேன் என்று தேவடியாளாகிய நான் சொன்னால், எப்படி ஒப்புவீர்கள்? ஜாலவித்தைக் கற்றவர்கள் தாசிகள்; நீலிக்கண்ணீர் வடித்து ஞாலத்தையே ஏமாற்றுவார்கள் என்று, எத்தனையோ புதுமை எழுத்தாளர்கள் தீட்டியப் புத்தகங்களைப் படித்திருப்பீர்களல்லவா? எப்படி ஒப்புவீர்கள்?

கிருஷ்: நான் விளையாட்டிற்காகச் சொன்னதை வினையாக எடுத்துக்கொண்டாயே? சத்தியமாக உன்னை உத்தமி என்று நம்புகிறேன், போதுமா?

(ஜீவா புன்முறுவல்கொள்ளுகிறாள்.)

கிருஷ்: அப்பா! உன் முல்லை நகைப்பு என் தொல்லையைத் துறத்திவிட்டது, ஜீவா! அது போகட்டும் திருநாவு, ஷண்முகம் இருவரின் சங்கதியை எதுவரை வைத்திருக்கிறாய்?

ஜீவா: இது வீண் வேலை. திருநாவுக்கும், தனவானுக்கும் இந்திரா விஷயமாகச் சொந்த விரோதம். அதில் தலையிடுவதை நான் தடுக்கிறேன்.

கிருஷ்: சௌரிக்கு இதைச் செய்தால்தான், உன்னிடம் நான் தாராளமாய் வரமுடியும்.

ஜீவா: ஆசாமியை, இப்பொழுது ஒட்டாண்டியாக்கிவிட்டேன். அவனைப்பற்றிச் சற்றும் கவலை வேண்டாம் உங்களுக்கு.

கிருஷ்: அவனுடைய பழைய நிலை இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு என் உத்தியோகத்திற்கு உலை வைத்துவிட முடியும். அவன் சொல்லி நடக்காத அளவிற்கு அவன் பெயர் கெடவில்லை.

ஜீவா: இந்தக் காரியமாய் நானும் சாட்சிகூற போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டுமோ?

கிருஷ்: வந்தால் நல்லது. இல்லாவிட்டால் என் எழுது கோலிருக்கிறது.

ஜீவா: நீங்கள் தானே விசாரிப்பீர்கள்?

கிருஷ்: ஆம்! நான்தான் விசாரிப்பேன்.

ஜீவா: நீங்கள் விசாரிக்கும்பொழுது எனக்கென்ன வெட்கம்? வருகிறேன்.

கிருஷ்: என்ன ஆனந்தம்? சரி! நான் துரிதமாகப் போகவேண்டும், ஜீவா!

ஜீவா: வந்தால், போகவேண்டும்; போகவேண்டும்! இதற்குத்தானு வருவது? பிறகு எப்பொழுதோ?

கிருஷ்: இரவு கண்டிப்பாக இங்குதான் என் காலம் கழியும்.

(கன்னத்தில் தட்டிவிட்டுப் போகிறான்)

திரை 12

இடம்: **திருநாவுக்கரசு வீடு** நேரம்: **காலை**

(திருநாவுக்கரசும் ஷண்முகானந்தனும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.)

திருநா: இன்றைய சமுதாயத்தைப்பற்றி நமது கவிஞரின் கற்பனையைப் பார்த்தாயா? பாடுகிறேன், கேள்!

பாட்டு

ஷண்மு: போக்கற்றச் சமுதாயப் போக்கைப் புலனுக்குக் கொண்டுவரும் கவிதை. நன்றாக இருக்கிறது.

திருநா: நாட்டில் ஒரு சாராரை விபசாரிகளாக்கிக் கூட்டிலடைத்து வைத்திருக்கிறார்கள், தன்னடக்கமற்ற ஊதாரிகள். தன் குடும்பத்தில் ஒரு பெண்ணை விபசாரியாகப்பார்க்க உடல் துடிக்கும் ஒருவன், சமூகத்தின் பெயரால் சாஸ்வதமாக ஒரு விபசாரக்கூட்டத்தை நாட்டிக் களிக்கிறான். பெண்கள் பிறவியில் அடிமை! ஆண்கள் அவர்களை ஆளப்பிறந்தவர்கள்! பெண்களுக்குப் பின்புத்தி! ஆண்களுக்கு அறிவு அகண்டது! பெண்களைப் படிக்கவைத்தால் கண்கெட்டக் காதற் கடிதமெழுதுவார்களென்பான்! இவன் படிப்பில் மூளைத்தது, விபசாரிகளை வளர்த்து வேடிக்கைப் பார்ப்பது! பெண்களுக்குச் சொத்துரிமை அளித்துவிட்டால், கணவனை நத்தித் திரியமாட்

டால் என் பான்! இவன் சொத்துரிமையின் புத்தி, மனிவி இருக்க மற்றொருத்திமேல் மையல் கொள்ளச் செய்யும்! இவன் எங்கிருந்து அங்கமெடுத்தான் என்பதைக்கூட மறந்து உளறுகிறான், துரோகி!

ஷண்மு: பேசுவதால் தேசம் முன்னேறுவதில்லை. நடவடிக்கைதான் சமுதாயத்தை மாற்றியமைக்கும். மனித அனுபவத்தின் அடிப்படையிலும், சரித்திரப் படிப்பினையின் அடிப்படையிலும், சமுதாய விஞ்ஞானக் கொள்கையிலும், விஞ்ஞான முறை ஒன்றைப் போலவேதான் இருக்கமுடியும். அதனால்தான், விஞ்ஞானம் முற்றுப்பெறுவதேயில்லை. மனிதவர்க்க அறிவு–அனுபவம் அதிகரிக்குந்தோறும், வரலாறு முன்னேறுந்தோறும் விஞ்ஞானம் கரைபுரண்டுப் பெருக்கெடுக்கிறது. இக் கொள்கை புதிய சரித்திர உண்மைகளில் ஊடுருவி அன்றாடம் புதுமையடைந்து வருகிறது, சமுதாயம்.

திருநா: புதுமைபெற்று வரும் சமுதாயம், சௌரிராஜன் போன்ற தனவானின் பண வேட்டையைத் தகர்க்கவேண்டும்; சிலர் குவித்து வைத்திருக்கும் செல்வ மேட்டைச் சரித்தெறிய வேண்டும். நாட்டின் ஜீவகளைப்போன்ற உழவர்கள்; முதுகெலும்புபோன்றத்தொழிலாளர்கள்; இவ்வுலகை உயர்த்திப் பிடிக்கும் சிற்பிகள். இவர்கள் முகத்தில் சோகக் கோடுகள் ஏகமாகி நலிகின்றார்கள். உழைக்காதவனுடைய இரும்புப் பேழைப் பூரிக்கிறது. இது தகர்ந்து உழைப்பவனுக்கு இச் சமுதாயம் தழைக்கவேண்டும்.

ஷண்மு: தழைக்கும்! பொதுமக்கள் குருதியில் புரளும் வர்க்கத்துள் கருப்பு-வெள்ளை-மஞ்சள் என்ற நிறபேதமில்லை; இந்தியா - தமிழ்நாடு - வடநாடு இங்கிலாந்து - அமெரிக்கா என்ற நாட்டு பேத

மில்லை. உலக ரீதியாய் இவர்கள் பிடிப்பிலிருந்து விடுவித்து, எதிர்கால சமுதாயத்தை விஞ்ஞான சமுதாயமாக உருவாக்குவதுதான் உண்மையான சுகந்திரமாகும். "ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்" இந்த மகோன்னத திட்டத்தில்தான் உலகம் கட்டப்படவேண்டும். அன்றுதான் மனித சமுதாயம், பெண்கள் சமுதாயம், பாட்டாளி சமுதாயம் நாட்டில் வாட்டமின்றி, வறுமையின்றி வளர்ந்தோங்கும். இந்தச் சமுதாயத்தை அமைத்தாகவேண்டும்; அமையும்.

(இந்தச் சமயத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி இரண்டு சிப்பாய்களுடன் உள்ளே வந்து, திருநாவுக்கரசு, ஷண்முகம் இவர்களைப் பார்த்து)

கிருஷ்: திருநாவுக்கரசு யார்?

(திருநாவு எழுந்து வந்து)

திருநா: என் பெயர்தான்.

கிருஷ்: உனது இருப்பிடத்தைப் பரிசோதிக்கவேண்டும்.

(ஷண்முகம் எழுந்துவந்து)

ஷண்மு: எதற்காகப் பரிசோதிப்பது?

கிருஷ்: உமது பெயர்தான் ஷண்முகநாதன் என்பதோ?

ஷண்மு: என் பெயர்தான்!

கிருஷ்: தாசி ஜீவரத்தினம் வீட்டில் காசுமாலையைத் திருடியதாகச் சந்தேகம்!

திருநா: அவள் யார் ஜீவரத்தினம்?

கிருஷ்: தெரியாதோ? நேற்றிரவு உங்கள் நேரம் அங்குதானே கழிந்திருக்கவேண்டும்? சௌரிராஜனின் காதலி!

(இருவரும் திகைக்கிட்டு)

ஷண்மு: பொருத்தமான பொய்! திருநாவு! விபரீதத்தை விதைக்கிறான், செளரிராஜன்!

திருநா: நிகழாத சம்பவத்தைச் சுமத்தி, நிரபராதிகளின் பொறுமையைப் பரிசோதிப்பது நேர்மையற்ற வேலை. பரிசோதனைக்கு மேலதிகாரியின் உத்தரவு இருக்கிறதா?

கிருஷ்: இருக்கிறது!

(இருவரிடமும் உத்தரவுத்தாளைக் காட்டுகிறான். ஷண்முகம் அதை வாங்கிப்பார்த்து)

ஷண்மு: இவரை ஆக்கிய உலோகத்தால்தானே இவர் மேலதிகாரியையும் ஆக்கி இருக்கவேண்டும்? சரி. பரிசோதிக்கலாம்.

(இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்கள் இவர்கள் வீட்டைப் பல பாகத்திலும் பரிசோதிக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் தான் கொண்டுவந்த காசுமாலையை அங்கிருந்ததாக அவர்களிடம் காட்டி)

கிருஷ்: ஜீவாவின் இல்லத்தையே பார்த்தறியாத நல்ல மனிதர்களாயிற்றே, நீங்கள்? உங்களுடைய வீட்டில் அவளுடைய நகை, வகை தெரியாமல் கிடக்கக் காரணம்?

திருநா: அது, வழக்கைச் சித்தரித்த உத்தமர்களாகிய உங்களுக்குத்தான் தெரியும்!

கிருஷ்: திறமைசாலிகள்! ஆனால், நீங்கள் குற்றவாளிக் கூண்டில் நிற்பவர்கள்! யானைத் தன் காலே இரும்புச் சங்கிலிக்குக் கொடுத்த பிறகு அடஞ் செய்தால், அங்குசந்தான் நீதி வழங்கும்! ஜாக்கிரதை!! திருட்டு நாய்களுக்கு அதிகப்பிரசங்கித்தனம்? 112! இந்தக் கழுதைகளுக்கு முதலில் விலங்கிடு.

(சிப்பாய்கள் விலங்கிடுதல், மனங்குலைந்த திருநாவு, ஷண்முகத்தை நோக்கி)

திருநா: ஷண்முகம்! நாம் சிறைக்குப் போவது திருட்டு வழக்கிலா?

ஷண்மு: ஆம்! இன்றையசமுதாயம் தனக்கு வேண்டாதவர்களைக் கொலை வழக்கில்கூட தூண்டி விடும்! கலங்காதே! நீ கலங்கினால், இந்திராவின் நிலை?

(இந்திராவும், மாமாவும் சந்தோஷமாய் வருகிறார்கள். திருநாவும், ஷண்முகமும் விலங்கிடப் பட்டிருப்பதைக்கண்டு, இந்திரா. ஓவென்றலறி திருநாவின் காலடியில் விழுகிறாள்)

இந்திரா: என் நெஞ்சு உள்ளம் தகர்கிறது; இன்பக்கோவில் இடிகிறது! இது என்னகொடுமை? அன்பே! அண்ணா! எனக்கு ஒன்றும் புரியவில்லை?

(ஷண்முகநாதன் காலைப் பிடித்துக்கொண்டு)

இந்திரா: அண்ணா! விபரத்தைச் சொல்லுங்கள். நான் இதுவரை உங்களையே தஞ்சமென்றிருக்கிறேன். ஏன் விலங்கு? கற்றறிவின் களஞ்சியமாகிய திருநாவு குற்றமா புரிந்தார்? சாந்தத்தின் உருவாகிய நீங்களும் தண்டனைக்குரியவரா? தலை சுற்றுகிறது, அண்ணா! (எழுந்துவிடுகிறாள்)

ஷண்மு: சகோதரி! அஞ்சாதே. ஓர் மகன். போர்க் களத்தில் புறமுதுகிட்டான், வீரமற்றவன்! அவனுக்குப் பால் ஊட்டிய மார்பை அறுப்பேன் என்று, வாளை எடுத்துச் சூளுரைத்த, தாய்மார்கள் சரித்திரம் படித்த நீயா அஞ்சுவது? ஜீவா என்ற தாசிவீட்டில் காசுமாலைத் திருடிய தாகப் பழி.

இந்திரா: நீங்களா? திருநாவுக்காகவா? உலகம் ஒப்பாது, அண்ணா!

திருநா: நீ ஒப்பவில்லை, இந்த உப்பற்றச் சமுதாயம் ஒப்புகிறது. இந்திரா! பயப்படாதே.

இந்திரா: பயப்படாதே! கண்களில் ஒன்றைக் கத்தியால் குத்திக் காட்சியளிக்கும் பொழுது, தேறுதல்? அண்ணு! திருநாவு!!

(தலையிலடித்துக்கொள்ளுகிறாள். இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு)

கிருஷ்: ஏய்! மாஜி இன்ஸ்பெக்டர் ஷண்முகநாதன்! அயோக்கியப் பயலே! (திருநாவிடம்) இந்திராவின் அந்தரங்கக் காதலனு நீ? திருட்டுக் கழுதை! (இந்திராவிடம்) ஏய் இந்திரா! அவனை விட்டு இப்புறம் போ! (சிப்பாய்களிடம்) சிப்பாய்! இந்த நாய்களை இழுத்துக்கொண்டு வாஸ்டேஷனுக்கு!

(இன்ஸ்பெக்டர் விசையாகப் போய்விடுகிறான்)

இந்திரா: என்னைத் தனியாகக் கொடிய நச்சரவுகள் சூழ்ந்த காளில் விட்டுச்செல்லுகிறீர்களே! (கதறுகிறாள்) நீங்கள் சென்றவுடன் நான் எப்படித் தனியாக வாழ்வது, இங்கே?

திருநா: மாமா! நாங்கள் வரும்வரை, உங்கள் பொறுப்பில் இந்திரா இருக்கட்டும்.

மாமா: என்னுடைய குழந்தை அவள். அவளைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

ஷண்மு: நாங்கள் தண்டிக்கப்பட்டால் இந்திரா இங்கே இருக்கவேண்டாம். மீண்டும் சௌரியின் தொல்லைக்கு ஆளாக நேரிடும். ராமநாதபுரம் அழைத்துச் சென்றுவிடுங்கள்.

(சிப்பாய்கள் இழுக்கிறார்கள். ஷண்முகமும் திருநாவும் இந்திராவைப் பார்த்து)

திருநா: நாங்கள் வருகிறோம், இந்திரா!

(இந்திரா மரம்போல் சாய்ந்து, அலறி)

இந்திரா: நீங்கள் வரும்வரை உயிரோடு இருப்பவளை வந்து பாருங்கள்.

திரை 13.

இடம்: சௌரிராஜன் வீடு. நேரம்: மாலை.

(சௌரிராஜன் இல்லாத சமயம், அவன் சகாக்கள் அங்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள்)

சொக்கு: எங்கே சௌரிராஜன்? இதோ வருகிறேன் என்று போனார், இதுவரைக் காணோமே?

மாயாண்: கள்ள மார்க்கெட் வியாபாரியல்லவா? பல விடங்கள் போகவேண்டி யிருக்கும். அதைக் கேட்க முடியுமா?

வடிவே: கள்ளமார்க்கெட்டில் நமது சௌரிராஜன் சக்கைப் போடு போட்டார். யாராவது அவர் பக்கத்தில் வர முடிந்ததா? ஓட்டுக்கடைக்காரன் தீப்பெட்டி ஒன்றுக்கு ஒரு துட்டு அதிகம் வைத்து விற்றான் என்று, எட்டு தாறு அபராதம் போட்டுவிட்டார்கள்.

மாயாண்: சௌரிராஜன் பணம் அதளபாதாளத்தில் வேலை செய்திருக்கிறது. எந்த உத்தியோகஸ்தன்தான் அவர் பணத்தைச் சாப்பிடாதவன்? விலைவிடு. ஒருவன் உண்டா?

(சௌரிராஜன் தனக்குள்ளேயே பேசிக்கொண்டு வருகிறான், அங்கு)

சௌரி: தொலைந்தார்கள். என்னை எதிர்த்தவர்கள் யார் உருப்பட்டார்கள். மலையிடம் மோதி விளையாட வேண்டாம் என்று, அந்த மாடுகளிடம் சொன்னேன்; கேட்டால்தானே! ஷண்முகநாதனுக்கும், திருநாவுக்கரசிற்கும் ஆறுமாதம் சிறை.

(பேசிக்கொண்டிருந்த தன் சகாக்களிடம்)

சொக்கு! மாயாண்டி! வடிவேலு! ஆறுமாதம் சிறை. திருநாவுக்கரசும், ஷண்முகநாதனும் கம்பி எண்ணுகிறார்கள்.

(எல்லோரும் "சபாஷ்" என்று கத்துகிறார்கள்)

சோக்கு: உங்களிடத்திலா முடியும்?

(காற்காலியில் சௌரி அமர்கிறான். எல்லோருமாக சீட்டு விளையாடுகிறார்கள்)

சௌரி: வடிவேலு! சீட்டுக்கட்டை எடுத்துவா.

(வடிவேலு சீட்டுக்கட்டை எடுக்கப்போகிறான்)

மாயாண்டி! மனம் சரியாக இல்லை. நான் பணம் திரட்டியதற்கு ஒரு அளவில்லை. பூர்வீக சொத்தும் கணக்கு வழக்கில்லாதிருந்தது. ஆனால், கையில் என்னவோ ஒரு தம்படிகூட இல்லை.

மாயாண்: வருகிறவர்களுக்கெல்லாம் வாரி வாரி எடுத்துக் கொடுத்தவர்கள் யாராவது கடைத்தேறியிருக்கிறார்களா? கொஞ்சமல்ல, லஞ்சம் கொடுத்தது. காசைக் காசு என்று பாராமல் பல தாசிகளுக்கும் அள்ளிவிட்டீர்கள்.

சௌரி: தொல்லைகள் அனுபவிக்கத்தான். சரி.

(வடிவேலு வருகிறான்)

வடிவேலு! சீட்டுக்கட்டை இப்படிக் கொடு.

(கொடுக்கிறான். சௌரிராஜன் சீட்டுக்கட்டை மேஜையில் போட்டு, அவர்களிடம்)

விளையாடலாமே!

மாயாண்: ஓ, விளையாடலாம்!

(மாயாண்டி சீட்டைக் கலைத்துவைத்தல்)

சோக்கு: வடிவேலு! சீட்டை வெட்டு!

(வடிவேலு சீட்டை வெட்டுகிறான்)

போடு சீட்டை!

(மாயாண்டி சீட்டைப் போடுகிறான். வடிவேலு கையிலிருக்கும் மற்றொரு பகுதி சீட்டைக் காட்டுகிறான்)

வடிவே: ஜாக்கி ! அடி நூறு ரூபாய் !

(மாயாண்டி சீட்டை அடிக்கிறான். வடிவேலு சொக்கிட்டம் பந்தயம் கட்டுகிறான்)

நிறுத்து ! உள்ளே விழுகிறது இருநூறு ரூபாய்!

சொக்கு: சரி ! கட்டு !!

(சௌரியும் பந்தயம் கட்டுகிறான்)

சௌரி: வடிவேலு ! வெளியே, முன்னூறு ரூபாய் !

வடிவே: இம் ! கட்டுங்கள் !!

(வடிவேலு சீட்டை அடிக்கிறான். எல்லாம் அவனுக்கே அடிக்கிறது)

சௌரிராஜன் ! சொக்கு !! போடுங்கள் பணத்தை !

(பணத்தை வாங்கிக்கொண்டு மீண்டும் கலக்கிறான், சீட்டை. சௌரிராஜன் சீட்டை வெட்டி ஒரு பகுதியைக் கையில் வைத்துக்கொண்டு)

சௌரி: கிங் ! அடி, ஐந்நூறு ரூபாய் !

(வடிவேலு சீட்டை அடிக்கிறான்)

நிறுத்து, ஒருவரும் பந்தயம் கட்டவில்லையே ?

(இல்லையெனத் தலையை அசைக்கிறார்கள்)

சரி, அடி சீட்டை !

(அடிக்கிறான். அவனே ஜெயிக்கிறான். சௌரியிடம் பணம் தீர்ந்துவிடுகிறது. சொக்கை நோக்கி)

சொக்கு ! பணம் குறைந்துவிட்டது ! விரைந்து போய், வட்டிக்கடை வாசுதேவமுதலியிடம் என் பத்தில் இரண்டாயிரம் ரூபாய் வாங்கி வா, போ !

(சொக்கு பணம் வாங்கப்போகிறான்)

ஆட்டத்தை நடத்துங்கள், சொக்கு ஓட்டமாய் வந்துவிடுவான்.

வடிவே: வரட்டுமே ! அதற்குள் என்ன குடி முழுகியா போய்விடுகிறது ? யானை வாய்ப்போன கரும்பும்,

டன் சொல்லிச் சூதாடியப் பணமும் திரும்பு வது.....

மாயாண்: குதிரைக் கொம்புதான்!

சௌரி: வம்புக் கொடுக்கிறீர்கள்! நான் சூதாட்டத்தில் எப்பொழுதாவது கடன் சொல்லியதுண்டா?

வடிவே: இல்லே! இப்பொழுது பணப் புழக்கம் கொஞ்சம் மூணே மழுங்கி இருப்பதினால்தான்!

சௌரி: பணப் புழக்கம் மூணே மழுங்கியா இருக்கிறது? இப்பொழுது சுணே ஏறிவிடும் பார். இரண்டா யிரம் ரூபாய் வரப்போகிறது.

[சொக்கு வெறுங்கையுடன் வருகிறான். சௌரி அவனைக் கண்டதும்]

சௌரி: அதோ, சொக்கு வந்துவிட்டான்; ஆட்டத்தைப் போடுங்கள்.

சொக்கு: முன் பாக்கி ஆறுயிரம் ரூபாய் வந்தால்தான் புதிய பாக்கி என்று, தூக்கிப்போட்ட மாதிரி சொல்லி விட்டான்.

சௌரி: போக்கற்றப் பயல்; அவன் கிடக்கிறான். எவ் வளவு வட்டி வாங்கியிருக்கிறான் என்னிடத்தில். வடநாட்டானைத் தலை குனிய வைத்துவிட்டான் வட்டி வாங்குவதில், தமிழ் நாட்டு வாசுதேவ முதலி. எத்தனை குடி கெட்டிருக்கிறது, இவ னால்! இந்த யோக்கியதையில், வட நாட்டான் சுரண்டுபவனும்; தமிழ்நாட்டான் வழங்குபவ னும்! சுரண்டுபவன் எல்லா நாட்டிலுமுண்டு. குடியேறி சுரண்டுவான்! அதற்கு அந்தந்தநாட்டு சுரண்டும் வர்க்கமும் இடமளிக்கும். சுரண்டுப வனில் எவன் யோக்கியன்? உலகரீதியாய் சுரண்டு பவன் ஒரு தனி ஜாதி என்பதை மறந்து சிலர் பிதற்றுவது வேடிக்கையாக இருக்கிறது, இந்த கிழச்சியைப் பார்த்தபின். நான் கேட்கவேண்

டிய நேரத்தில் இந்த முதலியை கேட்டுக்கொள் ளுகிறேன். என்னிடத்திலிருக்கும் பருப்பு மூட்டை பதினைந்து; எள்ளு மூட்டை இருபத் தைந்து; சாக்கரை மூட்டை மூப்பது; இவைகளை வைக்கிறேன். ஆட்டத்தை நிறுத்தவேண்டாம்.

[இந்தச் சமயம், உணவு இலாக்கா அதிகாரி, மற் றும் நான்கு போலீசுடன் நுழைகிறான். சௌரி யும், மற்றவர்களும் காரணம்தெரியாது திகைத்து நிற்கிறார்கள். உணவு இலாக்கா அதிகாரி ஒரு தாளை சௌரியிடம் கொடுத்தல். சௌரி வாங் கிப் பார்த்துவிட்டு]

சௌரி: நான் கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்ததாக எந்தக் கபோதி சொன்னான்? நன்றாகப் பரி சோதித்துக்கொள்ளலாம்.

[வீட்டில் புகுந்து போலீஸ் பார்க்கும்பொழுது சௌரி, சொக்குவிடம் தனியாக]

சௌரி: சொக்கு! மூட்டைகள் உள்ளே இருக்கின்றன. நான் இந்தமுறை தப்பிக்க முடியுமென்று நினைக் கவில்லை. புலிவாய் முயலாகிவிட்டேன். என் னிடம் லஞ்சம் வாங்கித்தின்று வால்குழைத்த ஒரு நாயைக்கூட இந்த சமயத்தில் காணோம். புதிய வேட்டை நாய் இது! சொல்லிக்கொள்ள வும் முடியாது. எந்த பாதகனோ இந்தத் தீராத வேதனையை உண்டாக்கிவிட்டான். ஒரு உதவி செய். நீ சூதில் வெற்றியான பணம் இருக்கிற தா? அதைக் கொடு.

[போலீஸ் மூட்டைகளைக் கண்டுபிடித்து சௌரி யிடம் காட்டி]

உ. அதி: கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்தறியாத சண் முகமிக்க உம்மிடம் இத்தனை மூட்டைகள் எங் கிருந்து வந்தன?

சௌரி: மளிகை, மாணிக்கம்பிள்ளையுடையது. கடையில்

உ. அதி: இடமில்லை என்று உங்கள் வீட்டில் வைத்திருக்கிறீரோ? சௌரிராஜன்! உங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவோ பொருளை வாரி இறைத்திருக்கிறீர்கள் எனக் கேள்வி. இந்தச் சிறு காரியத்திற்கு ஏன், பொய் பேசவேண்டும்? தப்பித்துக்கொள்ள இது தகுந்த எடுத்துக்காட்டல்ல.

சௌரி: ஆம்! ஒப்புக்கொள்ளுகிறேன்.

உ. அதி: அப்படி என்றால், நீங்கள் குற்றவாளி! பொது மக்கள் உணவைப் பதுக்கி, அவர்களுக்கு துரோகம் செய்த குற்றம். போலீஸ்! ஒரு பாரவண்டி கொண்டுவா.

[ஒரு போலீஸ், வண்டி கொண்டுவரப்போதல்]

சௌரி: ஐயா! நான் குற்றத்தை ஒப்புக்கொண்டது, மன்னிப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையால்.

உ. திரு: மன்னிப்புக் கொடுக்கமுடியாத குற்றம்.

சௌரி: என் எதிர்கால வாழ்க்கையின் கடைசி நம்பிக்கை இந்த மூட்டைகள்தான். இது போனால், நான் போகவேண்டிய இடம் சவக்குழி. தயவு செய்யுங்கள். நான் உங்களைக் கவனிக்கிறேன்.

[உணவு இலாக்கா அதிகாரி கோபமாய்]

உ. அதி: விசனிக்கவேண்டியவார்த்தை. பரம் பரையாக லஞ்சம் கொடுத்து ஏமாற்றிப்பழகிய வார்த்தை இது. சட்டம் இரும்புபோன்றது; ஆனால், என் மனம் இரும்பல்ல. மன்னிக்கமுடியாத இந்த வார்த்தைக்கு, நீங்கள் வாழ்ந்தவர் என்பதற்காக நான் இரக்கங்காட்டுகிறேன். சரக்குப் பறிமுதல். சிறையிலிருந்து தப்பிக்கலாம். அபராதம் கட்ட நேரிட்டால் கட்டிவிடுங்கள். போலீஸ்! வண்டி வந்துவிட்டதா பார்.

[வண்டி கொண்டுவரப்போன போலீஸ்காரன் வருதல்]

போலீஸ்: வண்டி வந்துவிட்டது, ஸார்!

உ. அதி: மூட்டைகளை வண்டியிலேற்றுங்கள். சௌரி ராஜன்! நீங்கள் இதிலிருந்து தப்பித்துக்கொண்டது ஒரு பெரிய அதிர்ஷ்டம். போகிறேன். அழைக்கும் நேரத்தில் வரவேண்டும்.

[சரக்குடன் உணவுஇலாக்கா அதிகாரி, போலீஸ் எல்லோரும் போய்விடுதல். சௌரி தன் தலையில் கையை வைத்துக்கொண்டு தன் தோழர்களிடம்]

சௌரி: சொக்கு! வடிவேலு! மாயாண்டி! வாழ்க்கையின் நம்பிக்கை இற்றுவிட்டது. ஏமாற்றியவன் ஏமாற்றப்பட்டான். லஞ்சம் கொடுத்தேன். கள்ளமார்க்கெட் வியாபாரத்தில் கொள்ளை லாபமடித்தேன். அதே லஞ்சப் பேயின் கோரப் பற்களில் சிக்கி ஓட்டாண்டியானேன். நேரத்தை எதிரி பயன்படுத்திஞன்; என்னிடம் பணமில்லாததால் அதை அரசாங்கம் நிறைவேற்றிவிட்டது. கற்றும் தற்குறி. பொருள் தேடியும் நிர்க்கதி.

[அந்தச் சமயம் கடன்காரர்கள் வருதல். எள்ளு மண்டிக்காரர் சௌரியிடம் ஒரு பில்லைக் கொடுத்து]

மண்டி: இந்த பில்லிற்கு உடனே பதில்சொல்லவேண்டும்.

[சௌரி வாங்கிப்பார்த்து]

சௌரி: எள்ளு மூட்டைகள் கொள்முதல் செய்த வகையில் எண்ணூறு ரூபாய் பாக்கி! அதற்கென்ன?

மண்டி: மண்ணைப்போச்சு! உடனே கடனே வாங்கிவரும்படி மண்டி முதலாளியின் உத்தரவு.

சௌரி: சத்தம் போடாதே! நான்கு நாளில் உண்டியல் அனுப்பிவிடுகிறேன் போய்ச்சொல்.

மண்டி: பத்துத்தடவை அலைந்துவிட்டேன். இனிப் பித்தலாட்டப் பேச்சுப் பேசுவது நல்லதல்ல, என்று சொல்லச் சொன்னார்கள்.

சௌரி: சொன்னதைப் போய்ச் சொல்.

மண்டி: நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள், அடுத்துவரும் அமீனுவிடத்தில். நான் வருகிறேன்.

(சொக்கு இந்தச் சமயத்தில் ஜாடையாகப் போய் விடுகிறான். எள்ளுமண்டிக்காரன் போனவுடன், அத்தர் வியாபாரி வருகிறான். ஒரு பட்டியலை நீட்டுகிறான் சௌரியிடம். சௌரி வாங்கிப் பார்த்து)

சௌரி: அத்தர் வாங்கிய வகையில், மொத்தம் ஒன்பது நூறு என் பத்தாகிவிட்டதோ? மெத்த சுருக்தோ ஷம்! நான்கு நாளில் வாங்கிக்கொள்ளலாம்.

அ. வியா: என்ன ஐயா! ஆறு கடிதங்கள் எழுதிவிட்டோம். காரணம் தெரிவிக்கவில்லை! நேரே வந்து கேட் டாலும் வீராப்புப் பேசுகிறீர்! காரியம் இப் பொழுது ஆகவேண்டும்.

சௌரி: தாண்டிப்பயன்? இன்னும் நான்கு நாளில் அனுப்பிவிடுகிறேன்.

அ. வியா: ராஜக் கெடுவுதான்! சேலத்திற்கும் இதற்கும் எத்தனை தடவை வேலையற்று அலைவது? வீணன் என்று நினைத்தீர்களா, என்னை?

சௌரி: போ, ஐயா! போ!! தருகிறேன்.

அ. வியா: இறுமாப்புமட்டிலும் உருமாறவில்லையே! நான்கு நாள் பார்ப்போம். தவறினால் வாங்குகிற வழி தெரியுமெங்களுக்கு!

(கோபத்தோடு அத்தர் வியாபாரி போய்விடுகி றான். அவன் பின்னே. மாயாண்டியும் சுருட்டி செய்யாமல் போய்விடுகிறான். சௌரிக்குத் தலைச் சுற்றுகிறது. இச்சமயத்தில், அவன் யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமோ அவர்களை எல்லாம் நினைக்கிறான். ஒவ்வொருவர் குரலும் சௌரிக்கு எதிரொலிக்கிறது. சௌரி மிரளு

கிறான். சக்கரை மூட்டை வாங்கிய பாக்கி எங்கே?'' ஒரு குரல். ''பருப்பு மூட்டைகளுக்குப் பணம் எப்பொழுது தருவாய்?'. மற்றொரு குரல். ''பட்டுப் புடவைகளுக்குத் தரவேண்டியதை என் தட்டிக் கழிக்கிறாய்?'' இன்னொரு குரல். இவைகளுக்கெல்லாம் சௌரி, ''நான்கு நாளில்'' தருகிறேன் என்று ஒவ்வொன்றிற்கும் பதில்சொல்லுகிறான், கத்துகிறான், கதறுகிறான். யோசனைக்குப் பின் மிகக் கவலையுடன்)

சௌரி: சொத்து! எல்லாம் வைத்தவிடம் தெரியவில்லை! கொடுக்கவேண்டியவர்களுக்கு இனி அடகுவைக்க வேண்டியது, ஒன்றுதான் பாக்கி இருக்கிறது, மானம்!

(சுற்றிப் பார்க்கிறான் சௌரி, ஒருவரும் காணவில்லை. வடிவேலும் சந்தடி செய்யாமல் மறைகிறான். இதைக்கண்ட சௌரி தலையிலடித்துக் கொண்டு)

சௌரி: வடிவேலு! நீயும் போகிறாயா? போ! கையில் பணமில்லை; அதன் மெய்க்காவலாளர்களாக மொய்த்துக்கொண்டிருந்த, நீங்களும் இல்லை! வரண்டுபோன சமயத்தில் நம்மைச் சுரண்டுவதற்குமட்டும் சூழ்ந்துக்கொண்டிருந்த இவர்களுக்கு இங்கு வேலை? தாய்ப் பூச்சியற்றத் தேன் கூடு, நான்! (யோசித்து) எதற்காக நான் வருந்தவேண்டும்? எனது திரண்ட செல்வத்தில் உருண்டுக்கொண்டிருக்கும் ஜீவா இருக்கும் பொழுது! ஆம்!

திரை 14.

இடம்: **ஜீவரத்தினம் வீடு.** நேரம்: **மாலை**

(ஜீவா, தன் பணமெல்லாம் கரைந்துபோனதை நினைத்து வருந்துகிறாள். எனினும் கிருஷ்ணா

சாமியின் மேலுள்ள ஆசையை மட்டும் மறக்க வில்லை)

ஜீவா: எங்கே இன்ஸ்பெக்டரைக் காணேம்? என்மனம் என்னவோ அனுதினமும் அவர் நினைவாகவே இருக்கிறது. அவருக்காகவே என் பணத்தைப் பல வழிகளிலும் அழித்தேன். கடலோரப் பட்டினம் அலைமோதிக் குறுக்கிடுவதுபோல் குறுகி விட்டது என் வாழ்வு! (யோசனை) ஆம்! சரீரத்திலும் தளுக்குக் குறைகிறது, மெருகற்ற நகைபோல்! என் இளமை வனப்பழிந்துவிட்டது. சாறெடுத்த கரும்பு; பொலிவிழந்த பட்டாடை நான்! என் அழகில் இன்ஸ்பெக்டருக்கு இருக்கும் நம்பிக்கைபோல் மற்றவர்களுக்கு இருக்காது, இனி. அவரைவிட்டால், கட்டாற்றில் நிற்கவேண்டியதுதான்!

(இன்ஸ்பெக்டர் வருகிறார். தனியாக)

இன்ஸ்: ஜீவா, எனக்காக செலவழித்தப் பணம் கணக்கில் அடங்காது. ஆடம்பர வாழ்க்கை! நாடகம், சினிமா போன்ற சோடனைச் சகடை ஓட்டம் நாடறிந்ததுதான் இங்கிலையில் எனக்கிருக்கும் இரண்டாயிரம் ரூபாய் கடனை, உடனடியாய் எப்படிக் கேட்பது, அவளிடம்? தென்னந்தோப்பு வட்டத்திற்கு முன்னாளே என்னை மாற்றிவிட்டார்கள் எனத் தெரிந்தால்; ஒரு தம்பிடிக்கூட நம்பிக் கொடுக்கமாட்டாள். கடனைக் கொடுக்காமல் போனால் போலீஸ் உடைக்கும் ஆபத்து! குற்றவாளியைக் கொலைக்களம் அழைப்பதுபோலிருக்கிறது, நிலைமை! (யோசனை) ஆம்! ஜீவாவைவிட்டால் கதியில்லை!

(ஜீவாவிடம் வருகிறான். அவளிடம் சென்று இரு தோள்களையும் நெறித்து)

இன்ஸ்: ஜீவா, என்ன செய்கிறாய்?

(ஜீவா, உடனே திரும்பி இன்ஸ்பெக்டர் தோளில் கைகளை வைத்துக்கொண்டு)

ஜீவா: உங்களைப்போல் ஒரு பதுமை செய்கிறேன்!

இன்ஸ்: முதுமை ரேகைகள் என் முகத்தில் குவிந்தபின், பதுமை செய்தால், புதுமை கொழிக்கவா போகிறது?

ஜீவா: பழமையில் புதுமை காண்பதுதான் உலகம்!

இன்ஸ்: உன் பேச்சு ஒரு கலை வளம் ஜீவா!

(ஜீவா, இன்ஸ்பெக்டர் கன்னத்தில் தட்டி)

ஜீவா: இமைப்பொழுது உங்களைக் காணவிட்டால் அமைதி அலை மனதிலில்லை. ஒரே கவலை! அதனால் தூக்கம் திவலைகூட வரவில்லை, இன்ஸ்பெக்டர்!

இன்ஸ்: சட்டத்தில் இழுத்த சரடுபோல, ஒட்டிமெலிந்து விடாதே ஜீவா! நான் வாழ்வது நீ வாழ்வதினால் தான்!

ஜீவா: இங்கென்ன வாழ்கிறது? நானும் அப்படித்தான்.

(வெளியில் காலடி சப்தம் கேட்க, இன்ஸ்பெக்டர் போய்ப் பார்த்து வருகிறார்)

ஜீவா: என்ன போய்ப் பார்த்தீர்கள்?

இன்ஸ்: யாரோ வந்த காலடி சப்தம் கேட்டது...!

ஜீவா: வீட்டுக்காரி; நான் போய்ப்பார்த்து வருகிறேன்

(இன்ஸ்பெக்டர் உட்காருகிறார். ஜீவா வெளியில் வருகிறாள். தனவான் செளரிராஜன் எதிர்ப்படுகிறான். ஜீவாவைக்கண்ட செளரிராஜன் சந்தோஷமாய்)

செளரி: ஜீவா! என் கண்ணே!

(ஜீவா, செளரியை உள்ளே விடாமல் மறைத்துக் கொண்டு)

ஜீவா: நீங்களா? என்ன சேதி?

சௌரி: வீதியில் நின்றுக்கொண்டா சேதியைக் கேட்கிறாய்? உள்ளே, வா! சொல்லுகிறேன்

ஜீவா: இத்தனை மாதங்களாக என் வீட்டை நத்தவில்லை; இப்பொழுது வித்தைக்காட்டவா உள்ளே அழைக்கிறீர்கள்?

சௌரி: செத்திருந்தாலும் பத்து முடிந்திருக்கும், ஜீவா! உடல் நலம் படுமோசம்! அத்தோடு, கடன்காரர்களின் கெடுபிடி! இதற்காக பொருளுதவி செய் என்று, தெருவில் நின்றுக்கொண்டா சொல்வது?

ஜீவா: குந்திக்கொண்டே சொல்வதுதானே? பேஷ்! வந்த மாதிரியைப் பார்த்தாலே தெரிகிறது கண்ணே; மூக்கே! தேவடியாளிடம் கொடுத்ததைத் திரும்பி வாங்கியதாக எங்கேயாவது ஒரு சரித்திரமிருக்கிறதா? சரித்திர உலகைப் புரட்டி அமைக்க வந்தத் திரு அவதாரமோ நீங்கள்? சபாஷ்!

சௌரி: ஜீவா! அதிக நெருக்கடி. இந்தச் சிறு உதவியை...

ஜீவா: மதி இருந்தால் செய் என்கிறீர்கள்! சிறு உதவி பெறுவதற்குத்தான், சேவிங்ஸ் பேங்கில் போட்டமாதிரி, என்னிடம் நீட்டினீர்களோ, பணத்தை? அப்படித்தான் என்ன கொப்பும் குலையுமாக வாரி வழங்கிவிட்டீர்கள்? நீங்கள் தந்த பணம் என் காலில் சிந்திய அழுகிற்குத்தான் காணுமா? மணத்தை எறிந்துக்கொண்டிருந்த மலர்மாலையாகிய என்னை, புறங்காட்டி ஓடும் ராணுவத்தின் காலடியில் போட்டுவிட்டீர்கள்! கண்ணுடியால் பண்ணிக் கண்காட்சிக்கு வைத்திருந்த என்னை, தண்ணீரில் விழுந்த பிண்ணுக்கு மாதிரி செய்துவிட்டீர்கள்! இந்த யோக்

கிரையில் கை ஏந்த வந்துவிட்டீர்களோ, பணத்திற்கு? பணம்!

சௌரி: மனம் சிதறுகிறது ஜீவா! புரியவில்லை நீ சொல்வது!

ஜீவா: கல்லா நீங்கள்? என்னிடம் நீர் அனுபவித்த சுகத்திற்கும் கொடுத்தத் தொகைக்கும் சரிக்குச்சரி கூட அல்ல; நீர் பாக்கிக் கொடுக்கவேண்டும். என் கட்டமைப்பைக் கசக்கியதற்கு! புரிகிறதா? கடன்காரன் தொல்லையானால் கொடுத்தவன் பாடு, உமது பாடு!

சௌரி: என் சங்கடத்தில் பங்கில்லையா உனக்கு?

ஜீவா: அங்கத்தை தங்கத்திற்காக விற்றவளுக்கு என்ன ஐயா பங்கு? தாலிகட்டிய மனைவியிருந்தால் கூலி கிடைக்கும்! அங்குபோய்ப் பாருங்கள்.

சௌரி: ஜீவாதானே, என்னிடம் பேசுவது?

ஜீவா: ஆமாம்! ஜீவாதான்!!

(கண்களை துடைத்துப் பார்க்கிறான், சௌரி)

சௌரி: நீ அப்படித் தப்பிதமாகப் பேசமாட்டாய், ஜீவா! பரிகாசத்திற்கு இதுநேரமல்ல! சரி, வா உள்ளே!

ஜீவா: உள்ளே வா! இன்பக் கடலில் படகோட்டிப் பண்பு பெற்றப் பழைய நினைப்பேபா இது? உள்ளே வேறொருவர் இருக்கிறார்; எண்ணைக் கொள்ளைகொண்டவர்! நீர் போகலாம்!!

(சௌரி துடிதுடித்து)

சௌரி: அவன் யார்? பட்டாடை போர்த்திப் பஞ்சணையில் வைத்து, இமைக்கொட்டாது உன்னைப் பார்த்த வண்ணமே இருந்த என்னைவிட உயர்ந்தவனா அவன்?

ஜீவா: உயர்ந்தவராக இருந்ததினால்தான் உள்ளே இடம்! அதுமட்டுமல்ல; என் உள்ளத்திலும் இடம்!

(சௌரிராஜன் ஆத்திரத்துடன் ஜீவாவைத் தள்ளிவிட்டு உள்ளேபோய்ப் பார்க்கிறான். நாற்காலியில் சாய்ந்து கிடக்கும் கிருஷ்ணசாமியைப் பார்த்துப் பிரமிக்கிறான். கண்களைக் கசக்கிப் பார்க்கிறான், ஆத்திரத்துடன்)

சௌரி: நான் காண்பது உண்மைதான்! உண்மைதான்!! கண்ணீர்விட்டால் கன்னிவிடுவாள் என்று, உள்ளத்தை எல்லாம் அள்ளிக்கொடுத்தேன்; அவள் புன்சிரிப்பே என் சஞ்சலத்தைப் போக்கும்களஞ்சியம் என்று நினைத்தேன்! அந்த ஜீவாதான், இன்று இந்தப் பாவனையைச் செய்யத் துணிந்திருக்கிறாள்! என் ஜீவியத்தைக் கொடுத்தேன் அந்த பாவிக்கு! (தலையை பிய்த்துக்கொண்டு) மலையில் மோதுண்ட வான ஊர்தியாகிவிட்டது, என் வாழ்வு! மனக்காட்டையில் மண்வெட்டி பாய்ந்துவிட்டது! (யோசனை) ஆம்! விபசாரி! இமிட்டேஷன வைரம்போல் போக வாழ்வில் மின்னுவதற்குத் தன்னை ஒரு விளையாட்டுக்கருவியாக்கி, ஆடவர்கள் கையில ஆடிக் களிப்பவள்; முச்சந்தியில் நின்று இச்சகம் பேசுபவள்! பாம்பைப் பழுதென நம்பி வெம்புகிறேன். தூ...! வேசி நாய்! இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி! (பல்லை நறநறவெனக்கடித்து) நன்றிகெட்ட துரோகி! அன்பனின் இன்பக் கோகிலத்தைச் சூரையாடும் கருங்காலிக் கழுதை. தூ...! (யோசனை) அவன்மேல் தவறென்ன? மோட்டாரின் கைப்பிடியை மந்தி கையில் கொடுத்துவிட்டேன்! ஆம்! அந்தத் தேவடியாளிடம் நான் தானே இவனை பந்தப்படுத்தி வைத்தேன்? பணப்பெட்டிக்குப் பக்காத்திருடன் காவல்? என் புத்தியில்தான் காரித் துப்பிக்கொள்ளவேண்டும். (ஜீவாவைப் பார்த்து) விபசாரி! பணத்திற்காகப் படுக்கையைத் துடைத்துப் பளபளப்பாக்கும் கேடுகெட்ட உனக்கு பாடுபட்ட நான், இந்த

மானக்கேடடைவனைத் தலைவணங்கி ஏற்கிறேன்! இது போதாது!

(தலையிலடித்துக் கொள்ளுகிறான்)

ஜீவா: சரித்திரத்தை அரங்கேற்ற என் வீட்டின் அந்தப்புறத்தைத்தான் பார்த்தாயோ? நிற்காதே இங்கே!

சௌரி: ஆம்! தரித்திரக்காரனுக்கும் தாசிக்கும் உறவேது? விரலே இழந்த நான் வீணை வாசிக்க முற்படுகிறேன்...!

ஜீவா: கற்பனையை விற்றுவிட்ட நீ, கவிபுனைய அலைகிறாய்!

சௌரி: ஆம், ஜீவா! நல்ல புத்தி புகட்டினாய்! களைபறித்தப் பயிராக்கிவிட்டாய், என்னை!

ஜீவா: நரம்பறுந்த வீணையாக்கிவிட்டேன் என்று சொல்ல வெட்கமாக இருக்கிறதா?

சௌரி: வெட்கமென்ன? விளக்கை ஏந்திக் கிணற்றில் விழுந்தவனுக்கு!

ஜீவா: இந்த ஞானோபதேசத்தைக் கேட்க, இச்சை மிகுதியால் பணத்தைக் கொடுத்துவிட்டு, தாசிகளைத்துச்சமாகப் பேசும் ஏமாந்த சோணகிரிகள் கூட்டம் ஒன்றிருக்கிறது; அங்கே போ! வீணைப் பேசி மானமழியாதே. வெளியே!

சௌரி: வணக்கம் ஜீவா! நான் போகிறேன். ஏமாந்த சோணகிரிகள் அரங்கேற்றும் சரித்திரத்திற்கு வேதாந்தப் பாத்திரம் தாங்கி நடிக்கவருவாய், நீ. என் நிர்க்கதியைப்பற்றி அப்போது கற்பனை செய்வாய். போகிறேன், ஜீவா!

(சௌரி. கண்ணீரும் கம்பலையுமாக போய்விடுகிறான். இன்ஸ்பெக்டரிடம் ஜீவா கைகாட்டுகிறது)

ஜீவா: பெரிய முனிபுங்கவனல்லவா? சாபம் கொடுக்கிறான்; சாபம்!

(சௌரி, வெளியில் வந்து தன் நிலையை நினைத்துக் கதறுகிறான். அச் சமயம், "அன்பே! ஒன்றைப் பிரிந்து மற்றொன்று வாழாத மணிப்புறா வல்லவா நான். உங்களைப் பிரிந்து எங்ஙனமிருப்பது?" என்ற ஜீவா குரலைக் கேட்கிறான்)

சௌரி: ஒன்றைப் பிரிந்து மற்றொன்று வாழாத மணிப்புறா! வேசி! விபசாரி மகள் விபசாரி!! தேவடியாள்!!! (தலையிலடித்துக்கொண்டு) அய்யோ! என்மீது அவள் கொண்டிருந்த காதலைக் கண்டால், இவ்வளவு துரிதமாய் நம்மைப் பிரிவாள் என்று உலகம் நம்பாது! இது விபசாரிகள், பொருளை அப்பிக் குவிக்கக் கையாளும் செப்படி வித்தை என்பதைத் தெரிந்தும் மறந்தேன், அவள் பேசிய நடிப்பில்; அவள் காட்டிய நொடிப்பில்! மயிலுக்கும், வான்கோழிக்கும் வித்தியாசம் தெரியாத மடையன், நான்!

(இந்தச் சமயத்தில் "துணையற்றக் காதலுக்குப் பெயர் சகாரா பாலைவனந்தானே நாதா"! என்ற ஜீவாவின் குரல் மீண்டும் கேட்கிறான்)

சௌரி: ஒருவனல்ல; நூறு பேராலும் இச்சையை வாரித் தெளிக்கும் உணர்ச்சியற்ற இயந்திரம், நீ! துணையற்றக் காதலுக்குப் பெயர் சகாரா பாலைவனமா? கைக்காரி! உன் வாயால் காதலென்று ஒயாமல் குரைக்காதே! நாசக்காரி!! பொன்னுக்குக் கட்டிப்புரண்டு, பின்னுக்கு விஷ ரத்தத்தை பிரேமையோடு கலந்துவிடும் வெறி நாய், நீ! இசைந்தவனிடத்திலெல்லாம் இதழோடு இதழ் பின்னி, மோக வெறியூட்டும் போகப் பேய், நீ! அதற்குப் பெயர் காதலா? விபசாரி! வாயை மூடு!! (யோசித்து) வீணாய்ப் புலம்புகிறேன். அவள் மேல் பிசகில்லை! மனிதனின் வாழ்க்கையைப் பிணக்குழியில் தள்ளத்தானே சுருண்ட குழல்; மருண்ட விழி; ஒடிந்த இடை; துடித்த

கடை! கவிகளின் கற்பனை; அதனுல் உந்தி விடப் பட்டக் காமத் தீ; என் கண்களை மறைத்தன! கள்ளில் ஈ விழுவதுபோல, துள்ளி விழுந்து மடிந்தேன்! அய்யோ! கற்பைப்பற்றிக் கடை வாயில் நுரைத்தள்ள சொற்போர் நடத்திய நாட் டில், விபசாரம் செய்வதற்கு என் ஒரு வர்க்கம்? விபசாரிகளால் அவிந்தவர்களின் சரித்திரம் இம யம் போல குவிந்திருக்கும்பொழுது, நான் எங் கிருந்து முளைத்தேன்? மானமழிந்து மடிவ தற்கு இந்தச் சமுதாயம், காளான்களைத் தண் ணீர் ஊற்றி வளர்க்கிறது!

(இந்தச் சமயம் "அடுத்து வரும் அமீனுவிடத்தில் சொல்லிக்கொள்" என்ற எள்ளு மண்டிக்கார னின் குரல் கேட்கிறது)

சௌரி: அமீனுவிடத்தில் பதில் சொல்லிக்கொள்! முடி யாது!! தூக்குக் கயிற்றினிடத்தில் வாக்குமூலம் கொடுத்து விடுகிறேன்! நான் எப்படித் தெரு வில் நடப்பது? கடன்காரர்கள் காரி உமிழ்ந்து, கரங்களில் விலங்குடன் தெருவழியே இழுத்துச் செல்வார்களே அந்த நிலையிலா? மானம் அழிந்த பின் எனிந்த உயிர்? தற்கொலை! ஆம்!! தற்கொலைதான்!!!

(தன் தொண்டையை நெறித்துக்கொண்டு கதறு கிறுன். வெளியில் பாடும் சப்தம்)

பாட்டு

(அப் பாட்டைக் கேட்ட சௌரிராஜன், மனதை தேற்றிக்கொண்டு போகிறுன். சௌரி போன தம் ஜீவாவும், இன்ஸ்பெக்டரும்)

ஜீவா: ஓட்டாண்டியானபின் போடும் காட்டுச் சப்தமிது! ஏனதை நாம் காதில் வாங்கவேண்டும்? ஏன் சுணக்கமாக இருக்கிறீர்கள்? மாஜிப் பணக்காரன் உளருவது, இந்தத் தாசித் திருப்பணியின் விளைவு என்றுதானே?

கிருஷ்: என் மனம் அலைவதெல்லாம், எனக்கும் இரண்டாயிரம் வரை கடனிருக்கிறது; அதுவும் உடனடியாகக் கொடுக்கவேண்டியது. உன்னிடம் கேட்க...

ஜீவா: நாக்கு உள்ளே இழுக்கிறதோ? செளரிக்கு நேர்ந்த கதிதானே நமக்குமென்று! எங்கே திருடினாலும் கன்னக்கோல் வைக்க ஒரு இடம் வேண்டுமல்லவா? உங்களுக்குப் பிறகுதான் மற்றதெல்லாம்.

கிருஷ்: அப்படி ஒன்றும் சந்தேகப்படவில்லை!...

ஜீவா: பின், எப்படிக் கேட்பதென்று நினைத்தீர்களோ?

கிருஷ்: இப்பொழுது கொடுக்கவேண்டிய கடன்; இல்லையானால் என் இவ்வளவு தொல்லை?

ஜீவா: சரி! வீடு ஒன்றுதான் மிச்சம்...

கிருஷ்: அடமானம் வைத்துப் பணம் வாங்கினால், உடனடியாக மீட்டுவிடுவது?

ஜீவா: மூன்றாயிர ரூபாய் வாங்குங்கள். கைச் செலவிற்குக் கொஞ்சம் வைத்துக்கொள்ளலாம். வீட்டுப் பத்திரம் வேண்டுமல்லவா? வாருங்கள் தருகிறேன் (போய்விடுதல்)

திரை 15.

இடம்: செளரிராஜன் வீடு. நேரம்: மாலை.

(செளரிராஜன் தன் நிலையை எண்ணிக் கவலைப்படுகிறான், கதறுகிறான்)

செளரி: நிலை குலைந்துவிட்டேன்; கொந்தளிக்கும் கடலில் நான் ஒரு படகு! நல்லொழுக்கத்தின் ஞாபகச் சின்னமாய் இல்வாழ்வு நடத்தி நிலைகுலையவில்லை! தீச் செயலின் கோலோச்சிப் பாழடைந்தேன்!

ஆடவர் மயங்கும்வண்ணம் உடல்மினுக்கி, மாடப் புறவே, நீங்கள் தெத்தால் நானும் சாவேன் என்று ஜாடைப் பேசும் விபசாரிகளின் தொடர்பால் வாழ்விழந்தேன்! மற்றொருபுறத்தில் லஞ்சப் பேய்கள் என் ரத்தத்தை உருஞ்சிவிட்டன! இன்று நெஞ்சுடைந்துப் புகைகிறேன்; நெருப்பு திராவகத்தில் விழுந்த பித்தளை போல! அய்யோ!!

(இப்படிக் கலங்கிக்கொண்டிருக்கும் சமயம், அமீனு இரண்டு மூன்று ஆட்களுடன் வந்து சௌரியிடம்)

அமீனு: தனவந்தரே! உங்கள் வீடு ஜப்தி. உங்களை இந்த இடத்தைவிட்டு வெளியேறும்படி சட்ட மன்றம் ஆக்ஞையிட்டிருக்கிறது. (ஆட்களைப் பார்த்து) பெட்டி சட்டிகளையெல்லாம் அப்புறப் படுத்துங்கள்.

(ஆட்கள் சாமான்களை அப்புறப்படுத்தல். சௌரி தலையிலடித்துக்கொண்டு அலறுதல்)

சௌரி: நேற்று தனவந்தன்! இன்று தரித்திரக்காரன்!! நாளைக்குப் பிச்சைக்காரன்!!! வீட்டைவிட்டு வெளியேறு. இது சட்ட மன்றத்தின் ஆக்ஞை! இல்லை; தேவடியாள் சிறுக்கியின் ஆக்ஞை இது! என்னை அதோகதியாக்கிய விபசாரிக்கு, ஏன் இந்த சட்டமன்றம் ஆக்ஞையிடவில்லை? ஏ சமுதாயமே! நீ, ஒழுக்கத்தைப் பற்றிக் கொழுப் புருகக் கத்திவிட்டு, நாட்டின் இளமையை மற்றொரு புறத்தில் கருக வைக்கும் விபசாரத்தை ஏன் வளர்க்கிறாய்? நீ, கற்பைப்பற்றிக் காதுபுளிக்கப் பேசிவிட்டு தப்பிலித்தனங்களை ஏன் ஒரு புறத்தில் ஒப்பிப் பிழைக்கிறாய்? தெரிந்தும் தவறுகிறாய்? மன்னிக்க முடியாத உன் பித்தலாட்டத் தத்துவத்தை, மண்மூடிப் போகும்படி வரும் உலகம் கண்டிப்பாய்ச் செயலாற்றும்! இது

என் வரண்டுபோன உள்ளத்திலிருந்து பிறந் திடும் ஆணை ! ஆணை !!

(சௌரிராஜன் உணர்வழிந்து வெளியில் போகும் பொழுது, "தொலைந்தார்கள். ஷண்முகமும், திருநாவுக்கரசும். மலையிடம் மோதி விளையா டாதே என்று அந்த மாடுகளிடம் சொன்னேன்" என்ற குரலைக் கேட்கிறான்)

சௌரி: அய்யோ ! திருநாவு ! ஷண்முகம் !!

(தலையைப் பிய்த்துக்கொள்ளுகிறான்)

ஒன்றுமறியா உங்களுக்குத் தண்டனை ? கேவ லம் ! நாட்டிற்கு ஆயிரம் துரோகம் செய்தேன். ஆனால், எனக்குப் பாசுரம் பாடியது இந்தச் சமு தாயம். என்னிடம் வாங்கிய லஞ்சத்திற்காக உங்களைப் பஞ்சாய்ப் பறக்கவிட்டிருக்கிறது. பணம் ! அது என்னிடமிருந்து ஒழிந்தது. இன்னொரு பக்கம் லஞ்சத்தை வாங்கிக்கொண்டு என்மீதும் வஞ்சத்தைத்தீர்த்துக்கொள்ளுகிறது. பணமிருக்கும்வரை ஒருநாயும் என்னிடம் நெருங் கவில்லை பணமிருப்பவனிடம் நெருங்காது ! அய்யோ ! இந்த நிலையில், உங்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்? எல்லா விதத்திலும் பொல் லாதவனானேன். (போய்விடுகிறான்)

திரை 16.

இடம்: **இந்திரா வீடு.** நேரம்: **மாலை.**

(இந்திரா, திருநாவுக்கரசையும் ஷண்முகத்தை யும் நினைத்து வருந்துகிறாள்)

இந்திரா: என் திருடுகிறான் ? யோக்கியமான சமுதாய அமைப்பில் திருடன் ஏது? திருட்டு வழக்கேது? திருட்டிற்கே வழியில்லாத அந்த போகபூமியில், திருடனுல் சிறை ஏது ? அங்கே, திருடன் பைத்

தியக்காரன் வரிசையில் நிறுத்தப்படுவான்; மூளைக்கோளாறு என்று அவன் சிகிச்சை பெறுவான்; புதிய மனிதனுக்கப்படுவான்! அந்த விஞ்ஞான சமுதாயம் எங்கே? நிரபராதிகளைத் திருடன் என்று சிறைக்கனுப்பும் இந்தச் சமுதாயம் எங்கே? அனியாயத்திற்கே இன்றைய சமுதாயம் ஆக்கமளிக்கின்றதென்றால் புனிதமான வாழ்வெங்கே? பணம் படைத்தவர்கள் நினைத்ததை முடிக்கும் வரம்பற்ற முறை முறிந்தொழியும் வரை, நியாயம் தேயத்தான் செய்யும்.

(காலண்டரில் தேதியைக் கிழித்துக்கொண்டு)

இந்திரா: திருநாவு! அண்ணா! உங்கள் இருவரையும் ஒரு முறைச் சிறையில் கண்டபொழுது, இன்னும் மூன்று மாதங்களிருக்கின்றன; எப்படியாவது போக்கிவிடு, என்றீர்களே! நீங்கள் குறிப்பிட்ட திகதித்தாள் இன்று கிழிகின்றதே. வழியைப் பார்த்தவண்ணமிருக்கிறேன்.

(இந்திரா, வருந்திக்கொண்டிருக்கும் சமயம் மாமா வருகிறார். மாமா, இந்திராவிடம்)

மாமா: இந்திரா! உனக்குப் பொழுதுவிடிந்து பொழுது போகும்வரை, அழுவதே தொழிலாகிவிட்டது.

இந்தி: புழுங்குகிறது மாமா, என் உள்ளம் இதைநினைத்தால். ஆறுமாதகாலம் எத்தனைக் கொடுமைகளுக்கு ஆளானார்களோ?

மாமா: மாளவைக்காமல், ஆளையாவது கண்ணில் காட்டுகிறார்களே, அது போதாதா! சரி, அதுபோகட்டும். இன்றைக்குத்தான் வரவேண்டிய நாள். தெரிகிறதா? வீணாக வருந்தாதே. கானடா ராகத்தில் அமைத்தப் பாட்டிற்கு நாட்டியம் ஆடுவாயே; அது என் மனதை கவர்ந்திருக்கிறது. எங்கே? நான் பாடுகிறேன். நீ பாவம் பிடி.

(மாமா பாடுகிறார். இந்திரா அழகாக நடனமாடுகிறாள்)

பாட்டு

(நடனமாடிக்கொண்டிருக்கும் சமயம், திருநாவும், ஷண்முகமும் வந்துவிடுகிறார்கள். இந்திரா பார்த்துவிடுகிறாள். நடனத்தை நிறுத்திவிட்டு, ஓடோடி திருநாவைக் கட்டித் தழுவிக் கொள்ளுகிறாள்.)

இந்தி: அன்பே! வாழ்க்கையில் வசந்தம் வீசுகிறது.

திருநாவு: இன்பத்தின் அடிவாரத்தில் பொன்னிறம் மலர்ந்துவிட்டது, கண்ணே! உனக்கு இனி குறைவில்லை.

(இந்திரா, ஷண்முகநாதன் கரங்களைப்பற்றி)

இந்தி: அண்ணா! உள்ளம் குளிர்ந்தது.

ஷண்மு: சகோதரி! கள்ளமில்லாக் காதலர்கள்; இன்பத்தை அள்ளிப் பருகுங்கள்.

(இந்தச் சமயம் மாமா, இந்திராவிடம்)

மாமா: வந்தவர்களை மறைத்துக்கொண்டு ஏன் தொந்தரவு செய்கிறாய்? அழைத்துக்கொண்டுபோய், களைப்பிற்குப் பரிகாரம் செய்யாமல் தொண தொண என்று பேசுகிறாயே! வந்து உட்காருங்கள்.

இந்தி: ஏன், மாமா! பார்த்த கண்கள் பூத்துவிட்டன. வரவிற்குக் காத்துக்கொண்டிருந்தோம். ஆசையாற சில வார்த்தைகள் பேசுவதற்குள், பறக்கிறீர்களே! நீங்களாவது போய் ஏதாவது சிற்றுண்டி கொண்டுவாருங்கள். போங்கள் மாமா, சீக்கிரம்.

மாமா: கைதிகளை சிறையில் யார் கவனிக்கிறார்கள்? ஆட்சியில் அமர, சிறைக்குப் போகும்பொழுது தியாகிகள் விட்ட மூச்சு, மனித வர்க்கத்தை மயக்கி

யது. ஆட்சியில் அமர்ந்தபின், சிறைக்குப் போகின்றவர்களுக்கு தியாகிகளால் அளிக்கப் படும் பரிசு, அப்பப்பா! குலை நடுங்குகிறது. அதிலும், பணக்காரர்களிடம் முணுமுணுத்து விட்டுச் சிறைக்குப் போனால் உயிருடன் திரும்புவதே கஷ்டம். சரியான சோறுகூட இல்லாமல் வயிறுகூட சுருங்கி இருக்கும். நீ கன்னுபின்னு என்று கண்டதையும் கொடுத்துக் குடலைக் கெடுத்துவிடாதே.

இந்தி: எனக்குத்தெரியாதா இன்றைய சிறை நிர்வாகம்? போங்கள், மாமா! குளிர்ந்த பானம்தான் முதலில் கொண்டுவாருங்களேன். போங்கள், மாமா!

(உள்ளே போய் மாமா குளிர்ந்த பானத்துடன் வருகிறார். இந்திரா எடுத்து இருவருக்கும் கொடுக்கிறாள்)

இந்தி: இருவரையும் சிறைக்கு வழியனுப்பிய கரங்களால் தருகிறேன் சாப்பிடுங்கள். சாப்பிடுங்கள், அண்ணா!

(இருவரும் அருந்துதல். திருநாவு இந்திரா விடம்)

திருநாவு: மீண்டும் என்று காண்போம் என்று வழியனுப்பியது உனது கை. சௌரிராஜனின் செய்கை, எனக்கு மீளா வரம் கொடுத்தனுப்பியது.

(இந்திரா உள்ளே சென்று விசிறி எடுத்துவந்து வீசுகிறாள்)

ஷண்மு: அம்மா! வீசுவேண்டாம். உட்கார். சௌரிராஜன் செய்கை என்ன? முடிச்சுமாறித்தனம் செய்து குடிமக்களின் உழைப்பைச் சுரண்டிச் செல்வாக்குப் பெறுவது குபேரர்களின் குலத்தொழில்!

திருநாவு: ஒழுக்கத்தைக் காற்றில்விட்டு, படபடப்பான ஐயார வாழ்க்கை நடத்துவது விபசாரிகளின் குலத்தொழில்!

இந்தி: இனப் பொருத்தம் கனஜோஷாக இருக்கிறதே!

ஷண்முகம்: விபசாரிகள், பணம்பறித்துத் தன்னைப் பகட்டாக்கிக்கொள்ளும் பரீட்சையில் பரிசுபெற்ற பட்டதாரிகள்!

திருநாவுக்: காட்டின் செல்வத்தைத் தேட்டையாடிக் குவித்துச் சுகபோகமனுபவிக்கும் அரங்க மேடையின் பிரதான நடிகர்கள், பிரபுக்கள்!

இந்தி: சீர்கெட்ட சமுதாய அமைப்பு! பிறரைச் சுரண்டும் கும்பல் ஒன்று; அதைச் சுற்றிக்கொண்டிருக்கும் விபசாரிகள் கூட்டமொன்று; இருவரையும் சாகாமல் கண்காணிக்க அரசாங்கம் ஒன்று! நன்றாக இருக்கிறது!!

திருநாவுக்: உலகில் நடக்கும் இதுபோன்ற அநீதிகள் அனைத்திற்கும் ஊற்றுக்கண், ஈரமற்ற நெஞ்சுடையவர்கள்தான். இதோ பார்! இருநூறு பணக்கார குடும்பத்தினர், புரட்சிப் பரம்பரையில் உதித்த சுதந்திர பிரேமிகளான பிரான்ஸ் மக்களை நாஜி அரக்கர்களிடம் விலை கூறினார்கள். கலைக் கோயிலான பிரான்ஸ் பெண் மக்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள் என உலகம் கதறியது. தங்கள் பணப்பெட்டியைக் காப்பாற்றிக்கொள்ள, பெண்கள் சூரையாடப்பட்டதைக்கூட சட்டைப்பண்ணவில்லை. முதலாளித்துவ பாஷையில் இதற்குப் பெயர் என்ன தெரியுமா? "தேசீயம்"! அல்லது "தேசபக்தி"!

இந்தி: இரும்புப் பெட்டியை நிறப்பிக் காக்கும் தோல் பதுமை ராணுவந்தான் விபசாரிகளோ? பேஷ்! இவர்களைக்காட்டிப் பொருள் ஈட்டத்தான், விபசாரிகளின்மேனியில் இச்சமுதாயம் மெருகேற்றுகிறதுபோல் தெரிகிறது! பிறகு, ஒழுக்கம் என்று ஒரு பக்கத்தில் ஓவியம் தீட்டுகிறார்களே, அது?

ஷண்மு: இச் சமுதாயத்தில், பொருள் திரட்டுவதற்குச் செய்யப்படும் சூதாட்டங்களுக்குப் பெயர்தான் "ஒழுக்கம்!" திருநாவு! இந்திராவிற்கு விஷயங்களைப் புரிந்துக்கொள்ளும் ஆற்றல் முன்னைவிட அதிகமாக இருக்கிறது.

திருநாவு: ஆம்! "புதுமைப் பெண்" என்ற நூல் இந்திராவிடமிருப்பது பயனளித்திருக்கிறது.

இந்தி: பாட்டு, நாட்டியம்; இதுமுடிந்ததும் படிப்புதான் என் கவலையைத் துடைத்து வந்தது.

ஷண்மு: இந்திரா! ஊருக்குப் போகவேண்டியதுதானே?

திருநாவு: என் மாமா! ஊருக்கு எப்பொழுது போகலாம்?

இந்தி: ஆறுமாதகாலம் இங்கிருந்தது போதாதா? புறப்பட வேண்டியதுதான்.

மாமா: சொந்த ஊருக்குப் போகவேண்டுமென்று யாருக்கும் கவலையாகத்தான் இருக்கும். காந்தா இருந்தாலும் வீட்டிற்குக் காபந்தாக இருப்பாள். வீடு எக்கதியாக இருக்கிறதோ?

திருநாவு: இந்திரா! அப்படி என்றால் உன் தாயார் எங்கே?

இந்தி: இறந்துவிட்டார்கள். (கவலையுடன்)

திருநாவு: நம்முடைய திருமணத்தைப்பார்க்குமுன் இறந்து விட்டார்களே! கொடுத்துவைக்காது போய்விட்டோம். அடக்கத்திற்கு நீ போயிருந்தாயா?

இந்தி: போய், மறுதினமே திரும்பிவிட்டோம்.

ஷண்மு: சென்ற இடத்தில் சௌரிராஜனின் சந்திப்புக் கிடைத்ததா?

மாமா: வந்திருந்தால்தானே சந்திப்புக் கிடைக்கும். அவன்தான் சந்தியில் நிற்கிறானே!

திருநாவு: இரண்ட பணம் வரண்டாவிட்டதா?

இந்தி: இவன் வரண்டுவிட்டால், மற்றொருவன் பிறந்து விடப் போகிறான், இவன் இடத்தை நிறப்ப. இச் சமுதாயம் மறைந்தாவிட்டது? நமக்குப் பொய் சாட்சிக்கூறிய ஜீவாவின் வீழ்ச்சி அதை விட மோசம்! திக்கற்று நிற்கிறாள்.

ஷண்முக: இவள் போனால், இன்னொரு விபசாரி அவ்விடத்தைப் பூர்த்தி செய்து விடுகிறாள். இச் சமுதாய அமைப்பு சரிந்தொழியவில்லையே! அது போகட்டும். நாம் ஊருக்குக் கிளம்பலாம்.

மாமா: (உரத்த குரலில்) ஏய்! அந்தப் பூரணி ஜோடியைக் கட்டி வாசலில் நிறுத்து!...

திரை 17.

இடம்: **ஜீவரத்தினம் வீடு.** நேரம்: **மாலை.**

(ஜீவா, உருக்குலைந்து தன் நிலையைக் குறித்து அலறுகிறாள், அந்தச் சமயம் "கடன்காரர்களின் தொல்லை; இதற்காகப் பொருள் உதவி செய், ஜீவா"...! என்ற குரலைக் கேட்டதும், உரத்தக் குரலில் அலறிக்கொண்டு)

ஜீவா: தேவடியாளிடம் திரும்பி வாங்கியதாகச் சரித்திரமிருக்கிறதா? அய்யோ! இது மகாக் கொடுமையான பதில்!! கெஞ்சிக் கேட்ட அவரை வஞ்சித்தேன். (கண்ணீர் விடுகிறாள்) நான் விரும்பிய போதெல்லாம் பொருளைக்கொடுத்து, என் வடிவழகையே கண்விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தவர்; அவரை நிர்க்கதியாக்கினேன், சண்டாளி! இன்று சுந்தி சிரிக்கிறேன்!! துப்பாக்கிக்குத் துளசிமாலைபோட்டுகும்பிட்டேன்; அந்தபோலிஸ்காரன், பொல்லாதக் கொலைபாதகன்! லஞ்சமுட்டையில் வெடித்து வந்தக் குஞ்சு! பணம் பறிப்பதிலும், சாகஸ வித்தையிலும் நூறு தாசி

களை உருக்கிச் செய்தவன் ஒரு போலீஸ்காரன்! என்ன செய்வேன்? மேனியில் மெருகில்லை; வேல்விழி மங்கிவிட்டது; மனிதனை மயக்கும் தற்காப்புச் சுவரான கட்டமைப்புத் தகர்ந்து தரைமட்டமாகிவிட்டது! குன்று குறைந்து கூழாங்கல்லாகிவிட்டேன். சீரழிந்த விபசாரிக்கு யாரினி துணை செய்வார்கள்? மன்னன் வேட்கையில் வெங்கீர் சாய்த்த மணிமேகலைப்பிறந்த புனித பூமியில், இச்சையைத் தூண்டிவிடும் நச்சரவாகிய, நான் ஏன் பிறந்தேன்?

பாட்டு

(தன் நிலையை மீண்டும் எண்ணுகிறாள். அச் சமயம் "இந்தக் காசுமாலை போலுல் வேறு காசுமாலை வரும்" என்ற குரலைக் கேட்கிறாள். கதறுகிறாள்)

காசுமாலை வரும்! இவைகளைப் பூட்டி அழகு பார்த்த உம்மை, நாட்டில் செல்லாக் காசாக்கி விட்டேன். பெண்கள் எதைப் பெற்றிருக்க வேண்டுமோ அதை விற்றுவிட்டவள், நான். ஒரு உழைப்புமில்லை; தோலை விலையாக்கி வைர மாலைகளும், பட்டுச் சேலைகளும அணிந்தேன்! வரம்பிலிருந்து வழுக்கிவிழுந்தவள்; சேற்றைப் பீப்பாய்; நான்! ஆம்! இந்த லச்சைக்கெட்டத் தொழில் புரிந்ததைவிடப் பிச்சையேற்றுப் பிழைத்திருக்கலாம். அதைத் தவிர நமக்கு வேறு கதி? (கதறுகிறாள் ஜீவா)

திரை 18.

இடம்: **காப்பி ஓட்டல்.** நேரம்: **மாலை.**

(காப்பி ஓட்டலின் நிகழ்ச்சி. தனியாக ஓர் ஆள் பாடிக்கொண்டு வெங்காயம் வெட்டுகிறான். ஜீவா

ஒரு பக்கமாக உட்கார்ந்துக்கொண்டு மாவரைக்கிறாள். அந்த நிலையில் மூவர் சாப்பிட வருகிறார்கள்)

வந்தவர்: என்னய்யா! வெங்காயம் நறுக்குகிறீர்களோ? தியாகராஜ பாகவதர் பாட்டையும் வெங்காயத்தோடு சேர்த்து நறுக்குகிறீர்களே!

ஓட்டல்: ஆமாம்! சித்திரவதை என்றுதான் சொல்லுங்களேன்! சும்மா ஜாலியாய்ப் பாடுகிறேன்.

வந்தவர்: இசை நுணுக்கத்தில் விஷப் பரிட்சையா? சரி! எதற்காக வெங்காயம் வெட்டுகிறீர்?

ஓட்டல்: அல்வா அடுப்பிலிருக்கிறது...!

மற்றவர்: அல்வாவிற்கா வெங்காயம்? உருப்பட்டமாதிரி தான்.

ஓட்டல்: எந்தப் புத்திக்கெட்டவன் செய்வான்! இட்டலிக்கு ஐயா, இட்டலிக்கு!!

மற்றவர்: குட்டிச்சுவராய்ப் போச்சு! இட்டலிக்கா?

ஓட்டல்: தட்டுக்கெட்டுப்போய் ஏதேதோ உளறுகிறேன்; சட்னிக்காக வெங்காயம் வெட்டுகிறேன்.

இன்னொ: அது போகட்டும். இனிப்பு இருக்கிறதா? உறைப்பு என்னென்ன இருக்கிறது?

ஓட்டல்: இனிப்புதானே! சர்க்கரை இருக்கிறது. உறைப்புக்கு; மிளகாய்ப்பொடி இருக்கிறது.

இன்னொ: அதை உன் கண்ணில் தூவிக்கொள். பூதத்தைசை மூன்று கொண்டுவா.

(தோசை மூன்று தட்டில் கொண்டுவந்து வைக்கிறான். அது அழுத்தமாக இருக்கிறது.)

என்னய்யா! தோசை, தகடுமாதிரி இருக்கிறது. வெட்டிரும்பும், சுத்தியலும் கொண்டுவராமல் வந்துவிட்டோம்!

ஓட்டல்: எதற்காக அந்த ஆயுதங்கள்.

வந்தவர்: வெட்டிப் புசிக்க!

ஓட்டல்: அரிசிக் கொடுப்பதோ, அளந்து அவுன்ஸ் கணக்கில்; அதுவும் கல்லும் மண்ணும். கல்லிலிருந்து அரிசியை பொருக்கவேண்டியதிருக்கிறது. உளுந்தைப் பற்றி கேட்கவேண்டாம். களிமண், உளுந்து உருபெற்றுவிட்டது. அரிசியிலிருக்கும் கல்லும், உளுந்திலிருக்கும் களிமண்ணும் சேர்ந்தால் தோசை எப்படி இருக்கும்! காளவாயில் சுட்டெடுத்த கல்மாதிரிதான். இதை யார் கேட்கிறார்கள். ஜனங்கள் எக்கதியானால்தான் வியாபாரிகளுக்கென்ன? அவர்களுக்கு வேண்டியது கொள்ளைலாபம். அரசாங்கத்திற்கு வேண்டியது பணம்! வரி.

மற்றவர்: தின்றுவிட்டு சாகிறோம். என்ன செய்வது? சூடாக உள்ளே வேறு ஏதாகிலும் இருக்கிறதா?

ஓட்டல்: அதிக சூடாக வேண்டுமோ?

மற்றவர்: சூடாகத்தான் வேண்டும்.

ஓட்டல்: நெருப்பு இருக்கிறது.

வந்தவர்: அதை உன் தலையில் கொட்டிக்கொள். ஏதாகிலும் கொண்டுவந்து தொலை.

(மீண்டும் பலகாரம் கொண்டுவந்து வைக்கிறான். காபி முதலியவைகள் சாப்பிட்டபின் எழுந்து போகிறார்கள். ஓட்டல்காரன் உரத்தக் குரலில்)

ஓட்டல்: மூன்றுபேர். ஒரு ரூபாய் மூன்று அணா.

(மூவரும் பணம் கொடுத்துவிட்டுப் போகிறார்கள் பிறகு இருவர் வருகிறார்கள்)

வாருங்கள் பிள்ளைவாள், என்ன வேண்டும்?

முதல்வர்: இரண்டு கப் காபி கொண்டு வாரும்.

(காபி கொண்டுவந்து வைக்கிறான். அதை எடுத்து பார்த்துவிட்டு)

என்ன ஐயா! ஈயைப்பிடித்துப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய், காபியில்.

ஓட்டல்: நீங்கள் கொடுக்கும் இரண்டு அணா காசுக்கு யானையையா பிடித்துப்போட்டுக்கொண்டு வருவான்? எடுத்துவிட்டு சாப்பிடுங்கள், பிள்ளை வாள்.

(சாப்பிட்டு எழுந்து போகிறார்கள். ஓட்டல் காரன் உரத்தக் குரலில்)

இரண்டு பேர் நான்கணா!

(இருவரும் காசைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். மற்றவர்களும் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஜீவா, அங்கே ஒரு மூலையில் மாவரைத்துக்கொண்டிருக்கிறாள்)

ஜீவா: உண்டவிடத்தில் இரண்டகம் செய்த எனக்குச் சரியான தண்டனை இது! பாடியில் பாடிக்களித்தேன்; பொன்னுபரணங்களைச் சுமந்து வண்ணப் பதுமைபோல் விளங்கினேன்; அடுத்த சுழலில் உடுத்த ஆடையில்லை, உடல் வளர்க்க சோறில்லை. யானைத்தேய்ந்து அணிலானேன்! விபசாரிகளின் கடைசி நிலை இதுவானால், நேர்மையாக நடக்கிறது உலகம்.

(ஜீவா மாவரைத்துக்கொண்டு புலம்புகிறாள். தனவான் கிழிந்த சட்டையுடன் கந்தலாக வேட்டி தாடி வளர்க்கப்பட்ட முகத்துடன், பரியால் தள்ளாடி ஓட்டல் பக்கம் வருகிறான். ஜீவாவின் குரலைக் கவனிக்கிறான். ஜீவா மீண்டும்)

ஜீவா: பிறர் பொருளைச் சுரண்டுவதற்காக வளர்க்கப்பட்ட நான்; மனதாரப் பலரிடமும் உடலை அடகு வைத்து, இன்பத்தை கொட்டிக்கொடுத்தேன். கண்டது? சௌரிராஜன் நடைப்பிணமானார்.

நான் கடை வீதியில் மாவைக் குடைகிறேன். சௌரிராஜனின் உள்ளக்கொதிப்பின் எதிரொலி! அய்யோ !!

(இக் குரலைக்கேட்ட சௌரிராஜன், சுற்றிப் பார்த்து ஜீவா முன் ஓடி, அலறுகிறான்)

சௌரி: ஜீவா ! ஜீவா !! இதோ அந்த மகாப்பிரபு சௌரிராஜன். பொற்குவியல் சரிந்து உன்னால் நிர்க்கதியாக்கப்பட்டவன்; உன்னால், வாட்டமுற்ற சோற்றுக்குத் தெருத்தெருவாய் திருவோட்டை ஏந்தி நிற்பவன்.

(ஜீவா அவனைத் தடவிப் பார்க்கிறாள்; உற்றுப் பார்க்கிறாள். தன் தலையில் அடித்துக்கொண்டு)

ஜீவா: வெண்ணெயில் பண்ணிய மேனி; ஆப்பிள் பழம் போன்றிருந்த உடல்! அய்யோ! (கண்களைக் கைகளால் பொத்திக்கொள்ளுகிறாள்) நான், உங்களை இந்த நிலையிலா பார்க்கிறேன், கொலைகாரி!

சௌரி: உன்னைத் தங்கப் பேழையின் தவப்பொருளாய் அங்கம் நலுங்காது வைத்திருந்தேன்; கண்டோர் கண் பறிக்கக் கண்காட்சிப் பதுமையென கொலுவீற்றிருக்கச் செய்தேன். ஜீவா! ஜீவா !! அவைகள் எல்லாம் எங்கே போயின? (கதறுகிறான்) எங்கேயடி போயின? (யோசித்து) ஆம்! கனவுதான்.

(சோர்வடைகிறான் சௌரிராஜன். ஜீவா, சௌரியிடம்)

ஜீவா: கனவல்ல! எந்த அழகான மொழி கொண்டு வர்ணிக்கிறீர்களோ, அந்த சொர்ண மேனி பெற்ற ஜீவாதான், மாவரைக்கிறேன்; எச்சிலை எடுக்கிறேன்; அனுதையாகித் தவிக்கிறேன்.

சௌரி: உலகம் சரியாக நடக்கிறது! ஒழுக்கங்கெட்ட நான் சோற்றுக்கு அலைகிறேன். ஏமாற்றிப்

பொருள் பறித்த நீ எச்சிலே எடுக்கிறாய். ஜீவா! என் பணத்தை அனுபவித்தவள் நீ தானே? (ஜீவாவைப் பிடித்துக் குலுக்கி) உன்னை நம்பினேனே, எங்கேயடி அந்தப் பணக்குவியல்? ஆம்! உன்னை, மதிகெட்டு நம்பினேன்; குரங்கைக் கொண்டு பழம் பறிக்கச் சொன்னேன்! காளையை அனுப்பி நெற்பயிர் அறுக்கச் சொன்னேன்.....!

ஜீவா: ஆட்டை அனுப்பி அருகம்புல் அறுக்கச் சொன்னீர்கள்! ஆம்! உண்மைதான்!! துரோகம் செய்தேன்! பன்றிக்கு பாதம் அல்வாவின் பதம் தெரியுமா? சகதிதானே அதன் உணவு! முன்னதை வெறுத்தேன்; பின்னதை விரும்பினேன். நான் உங்கள் பணத்தைப் பறித்தேன்; இன்ஸ்பெக்டர் என் வாழ்வைப் பறித்தான். நான் நிற்பதுப் பேய் வனத்தில்!

சௌரி: இருவரும் ஒரே அச்சு. போனதைப்பற்றி எனிக்கவலே. ஜீவா! நான் சாப்பிட்டு இரண்டு தினங்களாகின்றன; கூப்பிட்டாலும் காது கேட்கவில்லே; அடைக்கிறது காதை!

(தன் வேட்டியில் ஒரு மூலையில் முடிந்திருந்ததை அவிழ்த்து எடுத்துக்காட்டி)

ஜீவா: என்னிடம் இதோ, அரையணு இருக்கிறது. இன்னும் கொஞ்சம் சில்லரைபோட்டு ஏதாகிலும் வாங்கிக்கொடு. பசி! பசி, தாளமுடியவில்லே ஜீவா!

(சௌரி பசியால் தவளுகிறான். ஜீவா மன வேதனையில்)

ஜீவா: மகா மோசமான சோதனைக்காலம். வைத்திருந்த போதே இல்லேயென்று சத்தியம் செய்த சண்டாளி நான். (தலையிலடித்துக்கொண்டு) என்னிடம் காசில்லே; சத்தியமாகக் காசில்லே!

(இச் சொல் காதில் பட்டதும் சௌரி பகி-பகி என்று துவண்டு கீழே விழுகிறான். அங்குத் திருநாவும், ஷண்முகமும் வருகிறார்கள். இவர்களைக் கண்ட ஜீவா. இருவர் கண்களிலும்படாமல் மறைகிறாள் இருவரும் ஜீவாவைப் பார்த்துவிடுகிறார்கள். திருநாவு, ஷண்முகத்திடம் ஜீவாவைக் காட்டி)

திருநாவு: ஷண்முகம்! ஜீவாதானே போவது?

ஷண்மு: ஆம்! இந்த விடுதியில் மாவரைக்கிறாள்.

(திருநாவு, கீழே கிடக்கும் சௌரியைப் பார்க்கிறான்)

திருநாவு: இவன் யார்? சௌரிராஜன்மாதிரி இருக்கிறது. கார்முகிலைக் கிழித்துவரும் முழுமதிபோலிருந்த அவனுக்கா இக்கதி? பாதாளத்தில் விழுந்த வண்டியின் கதியாகிவிட்டானே!

ஷண்மு: வாழ்க்கையில் தவறிவிட்டவன்! அதை மறைக்க, ஒன்று கற்றுக்கொடுத்திருக்கும் இந்தச் சமுதாயம்; தலைவிதி என்பதை! கைகளுக்குக் கரங்கள் என்று இன்னொரு பெயருண்டு. அதுபோல, மானங்கெட்டச் செய்கைக்குத் தலைவிதி என்பது மற்றொரு பெயரென்றால் அதை வரவேற்கலாம். தெரிந்துசெய்த முட்டாள்தனத்திற்குத் தலைவிதி என்று பறையடித்தால்?.....

திருநாவு: அது கிடக்கட்டும். அது போகட்டும். இந்தக் காட்சியைக் காண என் மனம் சிதறுகிறது. வா, வேறு சிற்றுண்டிச் சாலைக்குப் போகலாம்.

ஷண்மு: நாம் வேறு இடத்திற்குப் போய்விட்டால், அவன் பசியை போக்குவது யார்? பத்து நாட்களாகத் தேடிக்கொண்டிருக்கிறேன்; நல்ல வேளையாக அகப்பட்டுக்கொண்டான், சௌரிராஜன்!

திருநாவு: எதற்காக?

ஷண்மு: சில ருசிகரமான சம்பவங்களிருக்கின்றன.

(விழுந்து கிடக்கும் சௌரிராஜனிடம் திருநாவு அணுகி, அவனைத் தூக்கி நிமிர்த்தி)

திருநாவு: சௌரிராஜன்! சௌரிராஜன்!! எழுந்திருங்கள்.

(ஷண்முகமும், சௌரியின் பக்கத்தில் வந்து பார்க்கிறான். சௌரிராஜன், இருவரையும் பார்க்கிறான். புரியவில்லை. நன்றாகப் பார்க்கிறான்)

ஷண்மு: சௌரிராஜன்! என்ன கோலமிது, எழுந்திருங்கள்?

(சௌரிராஜன் நன்றாகப் பார்த்து, ஆவேசத்துடன்)

சௌரி: ஷண்முகம்! திருநாவு!! இந்தச் சண்டாளனைத் தீண்டாதீர்கள்.

(விலகிப்போகிறான். திருநாவும், ஷண்முகமும் சமீபத்தில் நெருங்கி)

திருநாவு: சௌரிராஜன்! உம்மை இந்த நிலையில் பார்க்கக் கூசை நடுங்குகிறது. பஞ்சணையில் படுத்திருந்தீர், இந்தப் பாழும் புழுதியில் உழன்று கிடப்பதைப் பார்க்க, உள்ளம் உடைகிறது.

(சௌரிராஜன் அவர்கள் இரு காலடிகளில் விழுந்து கதறுகிறான். அவர்கள் அவனை தூக்கி நிறுத்துகிறார்கள்)

சௌரி: எனக்கு மன்னிப்புக் கொடுங்கள்! பிச்சை ஏற்பவன், எனக்கு மன்னிப்பு கொடுங்கள்! அனைத்த, எனக்கு மன்னிப்புக் கொடுங்கள்! பாம்பிற்குப் பால் வார்ப்பதா, என்று எண்ணுகிறீர்கள்? ஆம்! நியாயமான சந்தேகம். விஷப் பற்களெல்லாம் இழந்த புழு, நான்! எனக்கு மன்னிப்புக்கொடுங்கள். சொல்லுங்கள், மன்னித்தேனென்று!

(இருவரையும் பிடித்துக்கொண்டு பிரலாபிக்கிறான் சௌரிராஜன்)

ஷண்முகம்: பயப்படாதீர் சௌரிராஜன்! மன்னிப்புக் கொடுக்கின்றோம். செய்த தவறுகள் அனைத்தும் நீங்கள் புரியவில்லை. உங்களுக்கு விஷப் பற்களை வைத்துக் கட்டியது இச் சமுதாயந்தான். பொற் கொல்லன் மிகத் திறமைசாலி; தன் வேலைப்பாடு அத்தனையையும் பித்தளையில் காட்டுகிறான்; பயன்? உலகம் திறமை வாயந்தது; அது உருவாக்கிய சமுதாயம் ஒளி இழந்தது! அந்தச் சமுதாய முன்னேடிகளில் நீங்களும் ஒருவர். உங்களுக்கு மன்னிப்புண்டு; இந்தச் சமுதாயத்தை மன்னிக்கமுடியாது.

சௌரி: திருநாவு! திருநாவு!! நீயும் மன்னித்தேன் என்று சொல். (திருநாவை அசைத்து) சொல் திருநாவு!

திருநாவு: இந்தச் சமுதாயத்தில் மனிதன் தவறுவது சுமுகந்தான். தான்தோன்றிகள் பலர், தான் சென்ற கெட்டப் பாதையைத் திருத்தி நேர்வழி செல்வதில்லை. மாறாக, தன்வழியே நேரானது என்று இறுமாந்து பேசுவார்கள். கழுதை கத்துவது கூட, தன் குரலே வேய்குழலின்பமென உலகம் வியக்கிறது என்றெண்ணுகிறது! அதனால்தான் இத்தனை ஈண்ட சப்தமோ! அதைபோல, சில மனிதர்கள் தன் தவறைத் திருத்திக்கொள்ளாமல் கத்துகிறார்கள். திருத்திக்கொண்டால், திருந்தலாம்; புதிய சமுதாயத்தில் காலடி எடுத்து வைக்கலாம். நீங்களும் உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்; பயப்படாதீர்கள், காப்பாற்றுவோம்.

(சௌரி, சந்தோஷத்தால் இருவரையும் கட்டித் தழுவுகிறான்)

சௌரி: திருந்துகிறேன். இனி நான் புதிய வார்ப்பு. திருநாவு! ஷண்முகம்!! நான் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. பசி, பேசமுடியவில்லை.

(சௌரிராஜனைக் கைப்பிடியாய் அழைத்துக் கொண்டுபோய், ஓட்டல் நாற்காலியில் அமர வைத்து சிற்றுண்டி வாங்கிக் கொடுக்கிறார்கள்)

ஓட்டல்: என்னவேண்டும் ஐயா!

திருநாவு: ஏதாகிலும் கொண்டுவாரும்.

ஓட்டல்: பாதம் அல்வா கொண்டு வரலாமா?

ஷண்மு: கொண்டு வாரும்.

திருநாவு: (சௌரியைக் காட்டி) இவருக்கு வேண்டியதை நிறையக் கொடும்.

(எல்லோருக்கும் கொண்டு வந்து வைக்கிறான், சாப்பிடுகிறார்கள். சௌரிநிறையச்சாப்பிடுகிறான். சாப்பிட்டுக்கொண்டு)

ஷண்மு: சௌரிராஜன்! நீங்களும், மாவரைத்துக்கொண்டிருந்த ஜீவாவும், இச் சமுதாய நாடக மேடையின் பொறுப்புவாய்ந்த நடிகர்கள். உங்களைப்போன்று எத்தனையோ கைதேர்ந்த நடிகர்களைப் பார்த்துங் கூட இன்றும் திருந்திய பாடில்லை, நாடு.

சௌரி: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

திருநாவு: ஒழுக்கத்தைப்பற்றி பல ஆயிரம் நீதிகளை வழுத்திக்கொண்டுதானிருக்கிறது, இத்தேசம். ஆனால் ஒழுக்கத்திற்கு இழுக்குதான் ஓங்கி நிற்கின்றன. கேட்டால், ஒழுக்கங் கெட்டவனை சபிப்பார்கள்; தூற்றுவார்கள். அவன் ஒழுக்கங்கெட்டதற்குக் காரணமாய் உள்ளதைப் பூரணமாய் ஆதரிப்பார்கள்; காப்பாற்றுவார்கள். தத்துவத்தைப் பெற்றெடுத்த நாடு என்று கற்ற வித்தைகளைக் காட்டி

யும் ஒழுக்கம் விழுப்பம் பெறவில்லை, இச் சமுதாய நிழலில்.

ஷண்முகம்: ஆம் சௌரிராஜன்! ஏன் வீணாத்துப்பேச வேண்டும்? முதலாளித்துவம் இருக்கும்வரை ஒழுக்கம் என்ற பேச்செல்லாம் பழுக்காது.

சௌரி: புரிகிறது. இதற்கு நானே ஒரு உதாரணம்! விபசாரிகளையும், விபசாரலோலர்களையும் எதிர்கால உலகம் இழக்கவேண்டும். ஒருவன், பணத்தை மேடாகக்குவித்து, அவன் விரும்பியவாறு நாடுமுற்றும் எதை வேண்டுமானாலும் அனுபவிக்க அவனுக்கு அனுமதி. உயிரோடு மற்றவனை சித்ரவதை செய்து, வயிற்றிலடித்து அவனை ஓட்டாண்டியாக்குவதற்கு; நாலுபேர் குடியிருக்கும் இடத்தை, மீறி வீணாத்து வீணாத்து மாளிகையாக்கி ஒருவன் வாழ்வதற்கு; பதினாயிரம் உயிர்கள் உட்கொள்ளும் உணவை சதிசெய்து ஒருவன் அறாத்துவந்து களஞ்சியத்தில் கொட்டிக் கொள்வதற்கு; நினைத்தவளிடத்திலெல்லாம் பணத்தைக்கொடுத்து தன் காம இச்சையைத் தணித்துக்கொள்வதற்கு! இன்னும் கோடிக்கணக்கான போசம், அத்தனையும் அனுபவிக்க அவனுக்கு அனுமதி. அடுத்தாற்போல் ஒருவன், வறுமைப் படுகுழியில் கிடந்து சிறுமையுடன் போராடித் தனக்கு எதுவேண்டுமென்பதை விரும்பக்கூட சிந்தனையில்லாத நிலையில் வாழ, இவனுக்கு அனுமதி. உயிரோடு மல்லுக்குநின்று வியர்வை சொட்ட உழைத்து உழைத்து தோலாவதற்கு; மாட்டிற்கேனும் கொட்டிலுண்டு, நாட்டில் இவன் வாழ மனையில்லாமல் தெருவில், முச்சந்தியில் நிற்பதற்கு; இன்றைக்கு கால்வயிறு, விடிந்தால் அன்றைக்கு எக்கதியோ என்று ஏங்கி மடிவதற்கு! இன்னும் கோடித் தொல்லைகள்! அத்தனையும் அனுபவிக்க இவனுக்கு அனுமதி.

இதற்குப் பெயர்தான் "தனிமனித சுதந்திரம்"! இந்தத் தனிமனித சுதந்திரத்தைப் பேணி வளர்க்கக் கச்சைக்கட்டுகிறார்கள், உலகில்!

திருநாவு: அதோடு நின்றுவிடவில்லை; அணுக்குண்டைக் காட்டுகிறார்கள். அணுக்குண்டு வியாபாரத்திற் காக, அமைதியாக வாழ விரும்பும் மனிதனை பயமுறுத்துகிறார்கள். உலகம்கண்டிராதபடுகளம்; இரண்டாவது மகாயுத்த இரத்த ஆறு! அந்த ஈரம் காயவில்லை. மூன்றுவது மகாயுத்தத்தைப் பற்றிப் பேச்சு! சென்ற யுத்தத்தில் மகனை அள்ளிவிட்டத் தாய்மார்கள்; கணவனை பறி கொடுத்த மனைவிகள்; சகோதரனைப்பிரிந்த தங்கைகள்! இவர்கள் உள்ளத்தில் பட்ட வெட்டுப்புண் வடுமாறவில்லை. அதற்குள் மற்றொரு யுத்தம்! யார் வாழ?

சௌரி: அணுக்குண்டு வியாபாரிகள் வாழ; அவர்கள் அடி வருடிகள் வாழத்தான்! திருநாவு! ஷண்முகம்! பரமாணு விதிகளை நன்றுகப் புரிந்துக்கொண்டால், மனித வாழ்க்கையை மிகவும் விரைவாக முன்னேற்றலாம்; உலக, சுகல உற்பத்தியையும் சுலபமாக்கலாம்; மனித சமுதாயத்தையே அழகு படுத்தலாம்; மாற்றி அமைக்கலாம். அமைப்போம்! யுத்தத்தைத்தடுப்போம்; அமைதியைக் காப்போம்.

ஷண்மு: சபாஷ்! சௌரிராஜன், தன் இடிந்த வாழ்க்கையி லிருந்து முடிந்தவரைத் தெளிந்த அறிவைப் பெற்றுவிட்டார்.

திருநாவு: (ஓட்டல்காரரைப்பார்த்து) காப்பிகொண்டுவாரும்

(ஓட்டல் காரர் காப்பிகொண்டு வந்துக் கொடுக்கிறார். சாப்பிட்டு எழுந்து மூவரும் போகிறார்கள். ஓட்டல் காரர்)

ஓட்டல்: மூன்றுபேர். 2-6-6 அணா (கத்துகிறார்)

(பணத்தைக் கொடுத்துவிட்டு போதல்)

திரை 19

இடம்: திருநாவுக்கரசு வீடு. நேரம்: மாலை.

(திருநாவுக்கரசும், ஷண்முக நாதனும் சந்தோஷ மாய்ப் பேசிக்கொண்டிருத்தல்.

ஷண்மு: தமிழகம், காலத்திற்கேற்ற கவிஞர்களை ஈன்றெடுத்திருக்கிறது. நம் காலத்தின் போர்க் களக் கவிஞன் பாரதி. அவர் எழுதிய "பாரத சமுதாயம் வாழ்கவே" என்ற பாட்டு உனக்கு ஞாபகமிருக்கிறதல்லவா? அதைக் கேட்டு வெகு நாளாகிவிட்டது. சற்று பாடு.

திருநாவு: பாடுகிறேன். (பாடுகிறான்)

பாட்டு

ஷண்மு: இந்த பாரதியின் கவிதை புதிய சமுதாயத்திற்கு மனிதனை உந்தி விடுகிறது.

(தனவான் சௌரிராஜன், நல்லாடைகளுடன் அங்கு வருகிறான். இருவரும் வரவேற்று)

திருநாவு: சௌரிராஜன்! உட்காருங்கள்.

ஷண்மு: தாங்கள் மீண்டும் நல்ல நிலையடையவேண்டு மென நினைக்கிறேன். வாழ்க்கையில் தோல்வி மனப்பான்மை; இது உங்களை சாக்கடையில் தள்ளிவிட்டது. வாழ்வில் என் தோல்வி ஏற்படு கின்றது? அதைக் களைந்தெறிந்துவிட்டு, மீண்டும் மீண்டும் வாழ முயர்ச்சிக்கவேண்டும்; முயர்ச்சியுங்கள் வாழலாம்.

திருநாவு: ஆம் சௌரிராஜன்! நீங்கள் இனி உங்கள் தவறை உணர்ந்து, வேற்றுரு பெறவேண்டும்; நல்லவழியைப் பின்பற்ற வேண்டுமென்று வற் புறுத்துகிறோம். அப்பொழுது வாழலாம்.

சௌரி: துப்பாக்கிலய அப்பிக்கொண்டுபோர்க்களத்திற்கு சோல்ஜரை அனுப்புவதுபோலிக்கிறது, நீங்கள் சொல்வது. பணமில்லே! பிணமான என்னே வாழ முயர்ச்சிக்க சொல்லுகிறீர்கள்!

திருநாவு: ஆம்! பணமிருந்தால்தான் இந்தப் பாழும் சமுதாயத்தில் வாழலாம். உங்களுக்குச் சிறிது பொருள் வருமானுல், அதையும் விரயம் செய்யத் துணியமாட்டீர்களல்லவா, அப்பொழுது?

சௌரி: அறிவில் மெருகேறி இருக்கும்பொழுது, பொருளுக்கும் புத்துயிர் எறிவிடும். அப்பொழுது நீங்கள் செல்லும் பாதையில் நானும் நடக்கத் தவறமாட்டேன்.

(திருநாவு, இந்திராவை அழைக்கிறுன்)

திருநாவு: இந்திரா! இந்திரா!!

சௌரி: அடங்கி, பிறநாட்டவன் கொடிக்கு அடிபணியும் வெட்கத்தைப்போல் இருக்கிறது, இந்திராவைப் பார்ப்பதற்கு. இந்த இருகண்களும் இந்திராவின் துரோகிகள். இந்திராவை அழைக்கவேண்டாம்; என்முன்.

ஷண்மு: சௌரிராஜன்! சென்றதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாம். இந்திரா! சகோதரி!!

(இந்திராவை,ஷண்முகம் அழைக்கிறுன். இந்திரா குரல்கொடுத்துக்கொண்டு வருகிறுள்)

இந்திரா: இதோ வந்துவிட்டேன்.

(இந்திரா வந்து தனவந்தரைப் பார்க்கிறுள். திகைத்துக் கண்களே மூடிக்கொண்டு)

இந்திரா: தனவந்தரா?

(இந்தச் சமயம்,"பணம் கொடுப்பவர்களின் சாமக் கூடு நீ. பொன்-பொருள்-பூமி, இவைகளவரும் நாடகத்தில் நடிக்கும் ஆடரங்கின் நடிகை.உன்னே பலாத்காரமாக அடைவேன்." என்ற குரலைக்

கேட்கிறாள். காதுகளைப் பொத்திக்கொள்ளு கிறாள்.)

இந்திரா: பணம் கொடுப்பவர்களின் காமக்கூடு நீ! பொன் பொருள்-பூமி, இதைக்கவரும் நாடகத்தில் நடிக் கும் ஆடரங்கின் நடிகை! இந்த இழிந்த சாக் கடை மொழிகளைப் பொழிந்தவர்தானே இவர்?

திருநாவு: இந்திரா! இறந்துபோன வார்த்தை; அதை நினைத்து வருந்தாதே. அந்தத் தனவந்தரல்ல இவர் முற்றும் புதியவர். எங்கள் நண்பர்.

இந்திரா: மதுவிடம் மயக்கம் அற்றுப்போகுமா?

ஷண்மு: அல்க்கோலை நீக்கிவிட்டால்? புடம் போட்டெடுத் தவர்! பயப்படாதே!

சௌரி: (எழுந்து) அம்மா! நான் பழய தனவந்தனல்ல; அவன் இறந்தொழிந்துவிட்டான். புதிய வார்ப் படத்தில் வார்க்கப்பட்டவன், இன்று உன் எதி ரில் நிற்கும் சௌரிராஜன். எனக்கு மன்னிப்புக் கொடு இந்திரா!

திருநாவு: சௌரிராஜன், இனி உன்னுடைய சகோதரன்.

இந்தி: ஆனால், மகிழ்ச்சி. ஏன் அழைத்தீர்கள்?

(சௌரிராஜன் சந்தோஷமாய் உட்காருகிறான்)

ஷண்மு: இந்திரா! முன்பு சௌரிராஜன் உன்னை நத்தி வந்தபொழுது, கொஞ்சம் சொத்துக்களை விற் கிரயமாக எழுதி வாங்கி, பின் மயக்க மருந்திட் டாயே, அந்தப் பத்திரத்தை எடுத்துவா.

இந்தி: இதோ கொண்டு வருகிறேன்.

(இந்திரா உள்ளே ஓடி, பத்திரத்துடன் வருகி றாள். அதை ஷண்முகம் வாங்கி சௌரிராஜ னிடம் கொடுக்கிறான்)

சௌரி: அம்மா! இடிந்த என் வாழ்வை எழுப்பினாய். ஷண்முகநாதன்! திருநாவு!! இது உங்களிடமே

இருக்கட்டும். உங்கள் கையாலேயே வேண்டிய தைச் செய்யுங்கள் எனக்கு; வாழ்கிறேன்.

(சௌரி, அப் பத்திரத்தை திருநாவிடம் கொடுத் துவிடுகிறான்)

ஷண்மு: சௌரிராஜன்! நமது திருநாவுக்கரசிற்கும், இந் திராவுக்கும் திருமணம் நிகழப்போகிறது. இந் தப் பொறுப்பிழுந்த சமுதாயத்தின் பெயரால் இருக்கும் விபசாரி என்ற பட்டத்தை வெட்டி எறிந்துவிட்டு, மணம்புரிந்து கொள்ளப்போகி றார்கள். அந்த விழாவில் நீங்களும்...

சௌரி: பங்குகொள்வது என் கடமை. விழாவே என் னுடையதுதானே!

(இந்திரா வெட்கத்துடன் போய்விடுகிறாள்)

திரை 20.

இடம்: நந்தவனம். நேரம்: மாலை.

(இந்திராவும், திருநாவும் ஓடி விளையாடிக் கொண்டு பாடுகிறார்கள்)

பாட்டு

இந்தி: அன்பே! நம்மைக்கண்டு அந்த மயில் ஆடும் ஒயிலைப் பாருங்கள். நீலக் கண்ணடி விரித்தாடும் அதன் சோபை, ஆஹாஹா! குயிலும் பாடு கிறது மயிர் சிலிர்க்க. இந்த உணர்ச்சி விருந்தில் உள்ளம் விரிகின்றது.

திருநாவு: அதோ பார், இரு புறுக்களை. நம்மை அவை கேலி செய்கின்றன.

இந்தி: எதற்காக?

திருநாவு: நாம் இருவரும் பொருத்தமற்றவர்களாம்!

இந்தி: கிருகிருப்போ அந்தப் புருக்களுக்கு. என் பொருத்தமில்லையாம்?

(இருவரும் ஜதையாக நின்று உயரத்தைப் பார்க் கிறார்கள். பின்பு)

இந்தி: இது வடிகட்டிய பொய் அன்பே!

திருநாவு: அழகில் பொருத்தந்தானும். உயரமும் ஏற்ற வாறு ஒத்திருக்கின்றதாம். அறிவும், குணமும் சரிதானும். ஆனால்!...

இந்தி: போனால்போகட்டும், சொல்லுங்கள்.

திருநாவு: உன்னிரு கன்னக் கதுப்புகளுக்கும், என்னிரு இதழ்களுக்கும் பொருத்தமில்லையென்று கேலி செய்கிறது.

இந்தி: கூலி பெற்றுக்கொண்டா கேலிக்கு பதில் சொல் லப்போகிறோம். இதோ பாருங்கள்.

(திருநாவுக்கரசை இழுத்து அவனிரு இதழ்களை தன் கன்னத்தில் வைக்கிறாள். திருநாவு சொப் பென்று முத்தமிடுகிறான்)

திருநாவு: பாலவனம் சோலையாகிவிட்டது, கண் ணே! தெள்ளுந தமிழை அள்ளிவந்துக் குவித்தாலும் இந்த இன்பத்திற்கு புள்ளிக் கணக்குப்போட முடியாது, இந்திரா.

இந்தி: நரம்பனைத்தும் இசை முழக்கம்!

(இருவரும் இன்பத்தில் மூழ்ந்திருக்கிறார்கள். அச் சமயம் ஷண்முகமும், செளரிராஜனும் அங்கு வருதல். இவர்களைக் கண்டதும் இந்திரா விலகி)

இந்தி: அண்ணா வாருங்கள். தனவந்தரும் வரவேண் டும்.

ஷண்மு: நாங்கள் வந்ததில் உங்களுக்குத் தொந்தரவு இருக்குமோ?

திருநாவு: பரிகாசத்தின் பிறப்பிடம் நீ. பசித்த கன்றின் முன் பால் சுரக்கும் பசு வந்தது போல், உங்கள் வருகை எங்களுக்கு.

(இந்திரா வெட்கத்துடன் நிற்கிறாள்)

சௌரி: நேற்று திருநாவுக்கும், இந்திராவுக்கும் நிகழ்ந்த திருமண மன்றலில் "சமுதாய நிழல்" என்பது பற்றித் திருநாவு பேசியது மிக உணர்ச்சியாக இருந்தது.

ஷண்மு: சமுதாய நிழலில் களிம்பேறி இருந்த விபசாரத்தைக் காரி உமிழ்ந்துவிட்டு, புதிய சிந்தனையைக் கிளறிய திருநாவு பேச்சில் உணர்ச்சிக்கா பஞ்சம்? இந்திராவும் மிக்கக் கண்ணியமாகத்தான் காணப்பட்டார்.

சௌரி: பஞ்சணைக்குப் பதுமையாய், பெண்களை விபசாரிகளாக்கியக் கபோதிகளுக்குப் புத்திப்புகட்டிய கலங்கரை விளக்காகிய இந்திரா கண்ணியமாய்க் காணப்பட்டதில் வியப்பில்லையே!

திருநாவு: என்ன, புகழ்ந்துகொண்டே போகிறீர்கள்?

இந்திரா: புகழ்வது போலவா இருக்கிறது? என்னவோ எனக்கு இகழ்வது போலிருக்கிறது!

ஷண்மு: இல்லை இந்திரா! இந்தச் சமுதாயத்தில் விபசாரம் பெருகுவதை அனுமதிக்க முடியாது; சமுதாயத்தை மாற்றியமைக்கவேண்டும் என்ற குரலை மக்கள் மத்தியில்வைத்துவிட்ட உங்கள் பணி, எதை வற்புறுத்துகிறது? விபசாரம் ஒழிய இன்றைக்கிருக்கும் சமுதாய அமைப்பு ஒழிய வேண்டும்! இதைத்தான் வற்புறுத்துகிறது. நீங்கள் நீடூழி வாழவேண்டும்.

சௌரி: இந்திரா—திருநாவு வாழ்க!

(எல்லோரும் சேர்ந்து)

பொறுப்பற்ற சமுதாயம் வீழ்க!

நடிப்பில்....

விபசாரம், ஒரு நாட்டு வளர்ச்சியின் உஷ்ண மானி.

தமிழ்நாடு ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன் வளர்ச்சி பெற்றுவிட்டது. ஒருவன் ஒருத்தியோடு வாழுகின்ற முறை கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதே சமயத்தில் விபசாரமும் இருந்தது. சங்க நூல்கள் இதற்குச்சான்று.

சற்றேறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன் புள்ள வரலாற்று நூல் பாரதம். வடநாட்டுக் காவியம். ஒரே காலத்தில் தமிழ்நாட்டைவிட வடநாடு வளர்ச்சியில் கீழ்ப்படியிலிருந்தது. விபசாரம் தினசரி சம்பவமாக நடந்தேறியது. இதற்கு பாரதம் சான்று.

விபசாரம் உலகத்தின் பொதுவான ஒரு செய்கை. இதில் நாட்டு வித்தியாசம் பாராட்ட இடமில்லை. இதையொட்டியே பாரதத்தில் சிலக் கதைகளை மேற்கோள் காட்டவேண்டியதாயிற்று.

படிப்பதற்கு இம்மேற்கோள் அழகாகஇருக்கும்; நாடகத்தில், படக்காட்சியில் பேசினால் நீண்டிருக்கும்.

இம் மேற்கோள்களை நாடகத்தில் விட்டு விடலாம்; கூடுமானால் பேசும்பொழுது வெண்

திரைக்குப்பின், நிழலுருவாக அவைகளை ஒரு நிகழ்ச்சியாக்கி நடித்துக்காட்டலாம். இது முக்காலும் கடினம். ஆனல், பட்டப்பிடிப்பில் பேச்சைப் பின்னணியாக்கி, மேற்கோள்களை நிகழ்ச்சியாக்கினல் வெற்றிதரும்.

ஆசிரியர்.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27—1—1979

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

ஜோசப் பவர் பிரஸ், காரைக்கால்.